வைத்திய கலாநிதி

THE VAIDYA KALANIDHI

EDITOR:
Pandit M. Duraiswami Aiyangar,
Ayurveda Bhushan.

பத்திராதிபர்:
பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,
ஆயுர்வேத பூஷண.

புஸ்தகம் 2. Vol. 2. | ஆனந்த ௵ மார்கழி ௴—JANUARY—1915. | ஸஞ்சிகை 5. No. 5.

THE TRUTH ABOUT TEA *

தேயிலையின் தத்துவம்.

By
A. B. OLSEN, M. D., D. P. H.

ஐரோப்பாவில் 1610-ம் வருஷம் வரையில் தேயிலை இன்னதென்றே தெரியாமலிருந்தது. ஆனால் 1610-ம் வருஷத்தில் டச்சுக்காரரால் ஸ்தாபிக்கப்பட்ட ஈஸ்டு இந்தியா கம்பெனியாரால் முதன்முதலில் ஐரோப்பாவுக்குத் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது; அப்பொழுது ஒரு பவுன் நிறைகொண்ட தேயிலை சுமார் 10 கினிகளுக்கு விற்கப்பட்டதாம். (ஒரு கினியென்பது சுமார் 10½ ரூபாய் மதிப்புள்ள நாணயம்.) பெபிஸ் என்பவர், 1660-ம் வருஷத்தில் அவருடைய தினவர்த்தமானக் குறிப்புப் புஸ்தகத்தில் "சீனதேசத்தார் குடித்துவருவதான தேயிலைப் பானம் ஒரு கோப்பை கொண்டுவரும்படி நான் சொல்லி அனுப்பினேன்; அவ்விதமான பானத்தை அதற்குமுன் நான் பருகியதேயில்லை." என்று எழுதியிருக்கிறார். தேயிலையானது வெகு மெதுவாகவே பயிராகுந்தன்மையது; ஆனால் பத்தொன்பதாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் அவ்விடத்தில் இதை யுபயோகிக்கும் வழக்கம் நன்றாக நிலைநின்றுவிட்டது. அக்காலத்தில் தலைக்கு 1¼ பவுன் வீதம் பருகக்கூடியவாறு வருஷாந்தர விளைவு அதிகரித்து வந்தது. இப்பொழுதோ வருஷாந்தர விளைவு ஒவ்வொரு மனிதனுக்கும் சற்றேறக்குறைய 7 பவுன் கிடைக்கும்படியாய் அவ்வளவு அதிகமாய் விருத்தியாயிருக்கிறது.

இந்த இலைகள் தீ சைனென்ஸிஸ், தீ அஸ்ஸாமிகா (Thea Chinensis and Thea Assamica) என்கிற இரண்டுவிதமான செடிகளிலிருந்து உற்பத்தியாகின்றன. சைனாவிலும், அஸாம் மாகாணத்திலும் விசேஷமாய் பயிராய் வந்ததால் இவற்றிற்கு இப்பெயர்கள் கிடைத்தனவென்று அறியலாம். இப்பொழுது இது ஸமீப காலந்தொட்டு இலங்கையிலும் இந்தியாவிலும் வேண்டியவளவு விளைகின்றது. இதில் அநேக வகைகளுண்டு; ஆனால் பச்சைத்தேயிலை, கருப்புத்தேயிலையென்று இரண்டுவித இலைகள்தான் ஸாதாரணமாய் வழங்கப்பட்டு வருகின்றன; ஆயினும் இவ்வித பேதங்கள் இயற்கையாயேற்படாமல், இலைகளைப் பதன் படுத்துவதாலேயே உண்டாகின்றன. இந்தியாவிலும் சைனாவிலுமுற்பத்தியாகும் தேயிலைகளில் சைனாவிலுண்டாவதிலிருப்பதைவிட டானின் (tannin) என்கிற ஒருவித பச்சிலைச் சத்து அளவில் அதிகமாயிருக்கின்றது; ஆனால் தைனி (Theine) என்கிற ஒருவகையான சுண்ணவிஷம் (alkoloid poison) எல்லாவற்றி

* Reproduced and translated from "Good Health."

லும் ஒரேவிதமாகத்தான் அடங்கியிருக்கின்றது.

தேயிலையில் அடங்கியுள்ள வஸ்துதத்துவங்களைக் கூறுமிடத்து, இலையைவிட குடிப்பதற்கான திரவபாகத்தைக் கிரஹிப்பதே அவசியம். இதில் பரிசோதிக்குங்கால் ஸூக்ஷ்மமான அநேகம் பதார்த்தக்கூறுகள் காணப்படுகின்றனவாயினும், அவற்றுள் முக்கியமானவை டானிக் அம்லம் (tannic acid), சுண்ணத்தைனி (alkoloid theine), ஆவியாய்ப்பறக்குந்தன்மையதான ஒருவித வாஸனைத்தைலம் என்பவையாம்.

டானிக் அம்லம் அல்லது டானின் என்கிற பதார்த்தத்திற்கு ஸ்தம்பனம் (astringent) என்னும் குணம் விசேஷமாயுண்டென்பது பலரும் அறிந்தவிஷயம்; அந்த அம்லச்சத்து ஒரு கோப்பையளவு தேயிலைப் பானகத்தில் சுமார் நூற்றுக்கு 10 முதல் 12 அம்சமாகக் கலந்திருக்கின்றது. அந்த ஸத்வமானது ஜீர்ணகோசங்களின் வெகு மிருதுவான சவ்வுக்குச் சிறிது எரித்தலைக் கொடுக்கக்கூடியதாயிருப்பதுடன், ஜீர்ணசக்திக்கும் இடையூறு செய்யுந்தன்மையதென்றும், அவ்வித இடையூறு—பெப்ஸின் (pepsin) முதலிய ஜீர்ண வேலை நிறைவேறுவதற்கு இன்றியமையாத சில கூறுகளின் செய்கையை டானிக் அம்லம் தடுப்பதால் ஸம்பவிக்கின்றதென்றும் அறியப்படுகிறது. மேலும் டானிக் அம்லமானது அடிக்கடி அற்பமாகவாவது அதிகமாகவாவது மலபந்தமுண்டாக்குவதற்கு முகாந்தரமாகவும், பொதுவாகப் பேசினால் இரைப்பையிலும் மற்றும் ஜீர்ண உறுப்புகளிலும் அதன்செய்கை பெரும்பாலும் தீங்குண்டாக்கக்கூடியதாகவும் இருக்கின்றது. தேயிலையிலுள்ள டானிக் அம்லத்தினாலுண்டாகும் இவ்விதமான தீங்குகள் ஒரு புறமிருக்க, அதிலடங்கிய தைனி என்னும் மற்றொரு சுண்ணச்சரக்கு ஒருவித தீக்ஷ்ணவீர்யமுள்ளதாகையால், வேறு விதத்திலும் அதனால் சில கெடுதிகளுண்டு; தைனி என்னும் பதார்த்தத்தைப் பரிசோதித்துப் பார்க்கையில் அதன் கூறுபாடுகள், காப்பியிலடங்கியுள்ள மிகப் பிரஸித்தமான காபீன் (caffeine) என்னும் சுண்ணத்தின் கூறுபாடுகளுக்கு ஸமானமாகவேயிருக்கின்றன; இது சற்றேறக்குறைய நூற்றுக்கு 2 முதல் 4 பாகம் வரையில் இதில் அடங்கியிருக்கின்றது. பொதுவாகக் கவனித்தோமானால், தைனியென்பது ஒருவாறு உத்தீபனத்தையும் (stimulation), மயக்கத்தையும் தரக்கூடிய குணமுள்ளதென்றும், அதன் செய்கைகள் விசேஷமாக நரம்புகளின் மேலும் நரம்பு மண்டலத்தின் மேலும் (nerves and nerveous system) சார்புள்ளன வென்றும் கூறவேண்டியிருக்கிறது. இந்த சுண்ணச்சத்துதான், ஒருவித இன்பத்தையும் உத்ஸாஹத்தையும் தற்காலமுண்டுபண்ணி, ஜனங்களின் மதியை மயக்கச் செய்யுமியல்புடையதாயிருக்கின்றது; இந்த ஸத்வம் முற்றிலும் நீக்கப்படுமானால், அப்பால் தேயிலைப் பானகமானது தேயிலையால் தயார் செய்ததாகக் கருதப்படமாட்டாது; அதில் ஆவலுள்ளவருக்கு அதனால் பிறகு திருப்தியுமுண்டாகாது. தேயிலைப் பானகத்தில் வாஸனைத்தைலம் சுமார் நூற்றுக்கு ½ பங்குதான் அடங்கியுளது; அதன் செய்கையெல்லாம் தைனியென்பதன் செய்கைகளுக்கு ஸமானமாகவே இருக்கின்றது.

தேயிலையும் ஜீர்ணசக்தியும்.

தேயிலையிலடங்கிய டானிக் அம்லமானது ஜீர்ணசக்திக்கு இடையூறு செய்து, உணவுகள் சீக்கிரம் ஜீர்ணமாகாமலிருக்கும்படி தீமை விளைவிக்குந் தன்மையதென்று முற்கனவே கூறியிருக்கிறோம். குடலிலுள்ள உணவுப் பொருட்களின்மீது டானிக் அம்லத்திற்குள்ள ஸ்தம்பக குணமானது (astringent effect) ஆஹாரம் ஜீர்ணமாவதில் மிகவும் கஷ்டத்தையுண்டுபண்ணக் கூடியதாயிருப்பதால், ஜீர்ணசக்திக்குத் தேயிலைப் பானம் இடைஞ்சல் செய்கின்றதென நிச்சயிக்கப்படுகிறது. டாக்டர் பார்கிஸ் என்பவரும், டாக்டர் கென்வுட் என்

பவரும் "ஹைஜின் அண்ட் பப்ளிக் ஹெல்த்" என்று அவர்கள் எழுதிய நூலில் தேயிலைப் பானகம் அருந்துவதைப்பற்றி அடியில் வருமாறு குறிப்பிட்டிருக்கின்றனர்:—

"தேயிலைப் பானகத்தை உணவுடனாவது, போஜனம் செய்த சிறிது நேரத்திற்குள்ளாவது உட்கொள்ளக்கூடாது; அதிலடங்கிய டானின் என்னும் ஸத்வம் ஜீர்ணமாய்க் கொண்டிருக்கும் உணவுகளிலடங்கிய (ஓஜஸ் என்று ஸம்ஸ்கிருதத்தில் வழங்கப்படும்) அல்ப்யூமின் என்கிற போஷணத்திரவ்யத்தைக் கெட்டியாக்கி விடுகின்றது."

இதை அதிகமாய் உபயோகிப்பதால் உண்டாகும் கெடுதிகளைப்பற்றியும் அவர்கள் கூறுவதாவது:—

"தேயிலைப்பானகத்தை அதிகமாய் அருந்துபவருக்கு ஜீர்ணசக்தியின் பலம் குறையும்; அதிலுள்ள டானின் என்னும் ஸத்வத்தின் ஸ்தம்பநகுணத்தினால் மலபந்தம் உண்டாகும்; தைனி என்னும் சுண்ணச்சத்து, ஆவியாயெழும்பும் ஒருவித தைலம் இவ்விரண்டின் குணங்களால் நரம்புகள் சோர்வுறுவதும், நித்ராபங்கமும், பலக்குறைவு ஏற்படுவதால் ஒருவித நடுக்கமும் உண்டாகின்றன."

நரம்புகளின் உணவு.

உணவுகளைப்போல் நாம் உபயோகிக்கும் பதார்த்தங்களுள் தேயிலையை காப்பி, கோகோ, மது முதலிய பானவகைகள், ஊறுகாய் அல்லது உபதம்சங்கள் (condiments) முதலிய நரம்புகளின்மேல் பலவாறு வேலை செய்யக்கூடிய பதார்த்தங்களுடன் காடியெர் என்பவர் சேர்த்துக்கூறியிருக்கிறார். பிரதிதினமும் தேயிலையையுபயோகிப்பதால் ஒருவாறு மனக்களிப்பும் உத்ஸாஹமும் நரம்புகளின் உத்தீபனமும் உண்டாவதாகப் பிரமிப்பதைத் தவிர்த்து சரீரத்திற்கு அதனால் வேறு எவ்வித குணமும் ஏற்படுவதாக நினைக்கவழியில்லை. காடியெர் என்பவர், "டயெட் அண்ட் டயெடிடிக்ஸ்" என்கிற தனது நூலின் மற்றொரு பக்கத்தில் வரைந்திருப்பதாவது:—

"அவசியமில்லாத உத்தீபனகாரியான (stimulating) இவ்வித வஸ்துக்களை ஏதோ இன்றியமையாத சில ஸமயங்களில் மட்டும் ஒருவன் உபயோகிப்பது உசிதமேயன்றி, மற்றப்படி நினைத்தபொழுதெல்லாம் இப்பதார்த்தங்களை யுட்கொள்வது புத்திமான்களுடைய செய்கை யல்ல."

நரம்புக் கிளர்ச்சியைத் (nervous excitement) தரும் பதார்த்தங்கள் நரம்புகளைப் போஷித்து அவற்றிற்கு வன்மையைத் தரக்கூடியவையல்ல. ஆகையால் நெர்வைன் (nervine) என்பது ஓர் ஔஷதச் சரக்காகக் கருதப்படும்; இப்பொழுது நன்றாகக் கவனித்தோமானால் தேயிலையையும் ஒரு மருந்துச் சரக்கென்றே நிர்த்தாரணம் செய்யலாம். டாக்டர் ராபெர்ட் ஹட்சிஸன் என்பவருடைய கொள்கைப்படி "தேயிலையும் காப்பியும் உணவுப்பொருட்கள் என்று எந்த அறிவாளனும் அபிப்பிராயப் படமாட்டான்."

வேறு சில அபிப்பிராயங்கள்.

"உணவுகளும் உணவுப்பொருட்களும்" (Food and the Principles of Dietetics) எனப் பொருள்படும் புஸ்தகத்தில் டாக்டர் ஹட்சிஸன் என்பவர் தேயிலை, காப்பி, கோகோ இவற்றைப்பற்றிய தன்மைகளை இவ்வாறு கூறியிருக்கிறார்:—

"உமிழ்நீர் ஸம்பந்தத்தினால் வாயிலும், பிறகு இரைப்பையிலும் நடந்தேறும் ஜீர்ண வேலையின்மீது இவ்வித பானவகைகளுக்கு ஏற்பட்டுள்ள செல்வாக்கானது பொதுவாக நமது இயற்கைக்கு அநுகூலமானதல்ல; அப்பால் குடல் ஸம்பந்தமான ஜீர்ண வேலையில் இவற்றின் குணம் இவ்விதமானதென்று சிறிது வாஸ்தவாம்சம் நமக்குத் தெரிந்திருக்கின்றது; அஃதென்னவென்றால், அநுபவத்தில் அது குடல்களில் ஒன்றும் சிறந்த குணந் தருவதில்லையென்பதேயன்றி வேறல்லவென்று ராபெர்ட்ஸ் அபிப்பிராயப்படுகிறார். தேயிலையானது, உமிழ் நீரால் ஸ்டார்ச் என்னும்

மாப்பொருள் ஒருவித சர்க்கரையாக மாறுவதாகும் ஜீர்ண வேலையைத் தடை செய்கிறதென்பது ராபெர்ட்ஸ் என்பவரால் பரிக்ஷித்தறியப்பட்டது. குடலில் ஜீர்ணமாய்க்கொண்டிருக்கும் பலவித மிச்ரமான உணவுகளில் நூற்றுக்கு 5 பங்கு தேயிலைச் சத்து சேர்ந்திருந்தாலும் ஸ்டார்ச் என்னும் மாப்பொருள் ஜீர்ணமாவதில்லை. தேயிலைப் பானகத்திலுள்ள டானிக் அம்லத்தினாலேயே இவ்வித பலன் உண்டாவதாகவும், இரண்டு நிமிஷத்தில் கஷாயமாகக் காய்ச்சிய தேயிலையின் ஸத்வம் அரைமணி நேரம் மாத்திரம் அவ்வாறே நல்ல வீர்யத்துடனிருக்குமென்றும் அவர் கூறியிருக்கிறார்.

இன்னும் சிலவற்றையும் நாம் இங்குப் பிரமாணமாய் எடுத்துக் கூறுகிறோம்:—

"ப்ரேலெர் என்பவர், இரைப்பையில் நடந்தேறும் ஜீர்ண வேலையில் இப்பான வகைகளாலுண்டாகும் குண விசேஷங்களைப்பற்றி வெகு ஸாமர்த்தியமாக சில ஆராய்ச்சிகளைச் செய்தார். அப்பொழுது தேயிலையும், காப்பியும் பெப்ஸின் என்னும் வஸ்துவினால் நடந்தேறக்கூடிய ஜீர்ணவேலைக்கு இடைஞ்சல் உண்டாக்குவதாகவும், அவற்றுள் காப்பியைவிட தேயிலைச் சத்து அக்கெடுதலை அதிகமாக விளைவிப்பதாகவும், அதிலும் சைனாவில் உற்பத்தியாகிற தேயிலையைப் பார்க்கினும் இந்தியத் தேயிலை மிக அதிகமான வீர்யமுள்ளதாகவும் அவரால் கண்டு பிடிக்கப்பட்டது. மேலும் அவர் இவ்விஷயங்களை யுற்று நோக்கி பற்பல பரிசீலனைகள் செய்துவந்ததில், தேயிலைச் சத்து குடலில் அநேக வஸ்துக்கள் ஜீர்ணமாவதற்கு பலவிதத்திலும் தடை செய்து வருவதாகவே குறிப்பிடத்தக்க இலக்ஷணங்கள் காணப்பட்டன. இதையுபயோகிப்பவருக்கு ரொட்டி முதலியது ஜீர்ணமாவதே மிகக் கடினம்." இறுதியில் மொழிவதென்ன வென்றால்:

"தேயிலைப் பானகத்தை அவசியம் அருந்த வேணுமென்றே நிச்சயித்தால், சீனதேசத்திலுண்டாகும் சிறந்த இலையைப் பார்த்து வாங்க வேண்டும்; அதைப் பக்குவம் செய்யும்பொழுது எவ்வளவு சீக்கிரத்தில் ஸாத்தியமோ அவ்வளவு சீக்கிரத்தில் கஷாயமாகக் காய்ச்சி, உடனே பாலுடன் கலந்து அருந்திவிடவேண்டும். ஒரு கோப்பைக்கு மேல் உபயோகிக்கக் கூடாது; அதையும் போஜனம் பண்ணும்போது அப்பொழுதே உபயோகிக்காமல், போஜனத்திற்குப் பிறகு உபயோகிப்பது சிறிது பாதகமாகாது."

அமெரிக்காவின் ஐக்கிய மாகாணத்திலுள்ள கர்னெல் யூனிவர்ஸிட்டியைச் சேர்ந்த ப்ரொபஸர் W. G. தாம்ப்ஸன், M.D., என்பவர் "ப்ராக்டிகல் டயெடிடிக்" என்னும் தனது நூலில் "அளவு மீறி அடிக்கடியும் தேயிலைப்பானகத்தைப் பருகுவதால்—தேயிலையை வழக்கமாக விசேஷமாய் அருந்தி வருவதால்—அதன் ஸத்வங்கள் ஜீர்ண கோசங்களின்மேலும் நரம்பு மண்டலத்தின்மேலும் குறிப்பிடக்கூடிய சில கெடுதிகளை உண்டாக்குகின்றன" என்று வரைந்திருக்கின்றார்.

பிறகும் அந்த டாக்டர், எப்பொழுது தேயிலைப் பானகத்தை உபயோகிக்கக்கூடாதென்பதைப்பற்றி அடியில் கூறப்படமாறு சில விஷயங்களையும் சொல்லியிருக்கிறார்.—

"அஜீர்ணம், இரைப்பையைப்பற்றிய அழற்சிகள்—புளியேப்ப மென்னும் அம்ல பித்தம் முதலியன—, மலபந்தம், பாண்டு, நித்திரையின்மை, நரம்புகளைப்பற்றிய பலஹீனம், இரைப்பை முதலிய அவயவங்களில் கபம் அதிகரித்தல் இவ்வியாதிகளால் வருந்துபவருக்குத் தேயிலைப் பானகம் உற்றதல்ல. தேயிலை யுபயோகிக்கும் வழக்கம் வயதானவரைவிட குழந்தைகளுக்கு அதிக கெடுதியை உண்டாக்குகின்றது."

தேயிலையும் உன்மாதமும்.

தேயிலையைத் தடையின்றி அதிகமாய் உபயோகிப்பவருக்கு உன்மாத மென்னும் பைத்தியரோகம் உண்டாவதாகவும் சம்ப இடமுண்டு. டாக்டர் தாம்ப்ஸன் இயற்றிய புஸ்த

கத்திலிருந்து மீண்டும் சில விஷயங்களை எடுத்துக் கூறுகிறோம்.—

"அயர்லாண்டில் ஓர் உன்மாதரோகியைப் பற்றி வெளிவந்த ரிபோர்டில், தேயிலையானது அவ்வியாதிக்குத் தூண்டுதலாயிருந்து அதை விருத்திசெய்ய ஹேதுவாயிருந்ததென்று குறிக்கப்பட்டிருக்கின்றது. மிகவும் கீழ்த்தர குணமுள்ள தேயிலையை நாள் முடியவும் வேகவைத்து, அப்போதைக்கப்போது அதில் தண்ணீர் சேர்த்து, அதையே உபயோகித்துவந்ததாய் அறியப்பட்டது. 'தேயிலையைக் காய்ச்சிய வகையும், அதை அதிகமாக உபயோகித்து வந்த வழக்கமும் இவ்வாறு புத்திக்குக் கோளாறை உண்டுபண்ணிற்றென்பதில் சிறிதும் ஸந்தேஹமில்லை; இவ்வித வஸ்துக்களை உபயோகிப்பது நமது ஏழை ஜனங்களுக்கு வழக்கமாயிருக்கிறது; அப்பதார்த்தங்கள் முதலில் அஜீர்ணமும், அப்பால் புத்திக்கு மழுக்கமும் உண்டாய் இறுதியில் மூளைக்கு அநேகவித கோளாறுகள் ஏற்படுவதற்கும் அநுகூலமான செய்கையுடையதாயிருக்கின்றது.' என்றும் அந்த ரிபோர்டில் விளங்கவே எழுதப்பட்டிருக்கின்றது."

இவ்வாறு சுருக்கமாக விமர்சம் செய்த பிறகு, அவ்வளவு மேன்மை தங்கிய மஹான்களுடைய அபிப்பிராயங்களை எடுத்துக் கூறிய பின்பு, தேயிலையானது ஓர் ஒளஷதச் சரக்கென்றும், மேலும் அது விடாமலுபயோகிக்கும்படியான விருப்பத்தை உண்டாக்கவல்ல மருந்துச்சரக்கென்றும், ஆகவே மற்ற ஒளஷதச் சரக்குகளைப்போல் தினப்படி உபயோகிக்கத் தகாததும், ஸமயம் நேரிட்ட போதுமட்டும் அளவறிந்து பருகக்கூடியதுமான ஓர் ஒளஷதப் பொருளென்றும் தீர்த்தாரணம் செய்யவேண்டிய உரிமை எமக்குண்டு. அல்லாமலும் வழக்கமாய் விடாமல் தேயிலைப் பானகம் பருகுவதானது பசியின்மை, வயிற்றுப் பொருமல், அஜீர்ணரோகம், அவற்றிற்கு ஸம்பந்தப்பட்ட வேறு குறிகளான வயிற்றுவலி, இரைப்பை எரித்தல், தேஹத்திற்கு அமைதியின்மை, சரீரம் நடுங்கக்கூடிய நரம்புத் தளர்ச்சி, சில இந்த்ரியக் கோளாறுகள், தூக்கமின்மை, தசைநார்களின் நடுக்கம், ஹ்ருதயத் துடிப்பு, புத்திமாருட்டம், மற்றும் அநேக விதமான விகாரக் குறிகளும் பிணிகளும் ஸம்பவிப்பதற்கு ஹேதுவாகின்றது என இப்பொழுது கூறத் துணிவோம். வாத ப்ரக்ருதியான (nervous) மனிதர்கள் மற்றவர்களைவிட தேயிலைப் பானகத்தையுபயோகிப்பதால் விசேஷமான தீங்குகளுக்கு உள்ளாகின்றனர்; ஆகவே அவ்வித சுபாவமுள்ளவர் முற்றிலும் அதை யுபயோகிக்காமலிருப்பது நலம். எவர் தேஹவன்மையிலும் மனோபலத்திலும் மதியின் மேம்பாட்டிலும் சிறப்புற்று எவ்விதத்திலும் ஆரோக்கிய நிலைமையுடன் வாழ்கின்றனரோ, அவர்கள் தேயிலையை உணவுப்பொருளாக உபயோகிப்பவராயிருக்கமாட்டார்.

PHYSICIANS IN INDIA AND MEDICAL JOURNALS.

இந்தியாவில் வைத்தியர்களும் வைத்தியப் பத்திரிகைகளும்.

By

RAMA NARAYAN, L.M.&S.,

Editor of Practical Medicine.

நாகரிகம் பெற்ற இதர நாடுகளில் வைத்தியப் பத்திரிகைகள் பிரசுரிக்கப்படுவதைக் கவனிப்பவர் இந்தியாவில் பிரசுரிக்கப்படுமவை வெகு சொற்பமென்று நிச்சயமாகக் கூறுவர்; உதாரணமாக அமெரிக்காவின் ஐக்கிய மாகாணத்திலுள்ள நியூ யார்க் என்னும் நகரத்திலிருந்துமட்டும் சுமார் 20 வைத்தியப்பத்திரிகைகளுக்குமேல் பிரசுரிக்கப் பட்டு வெளியாகின்றன. இங்கிலாந்தில் லண்டன் நகரந்திலிருந்து 8 அல்லது 9 வைத்தியப்பத்திரிகைகள்வெளியாகின்றன. இந்தியா முழுமைக்குமாக மொத்தத்தில் 7 அல்லது 8 வைத்தியப் பத்திரிகைகளுக்குமேல் இல்லை. இவ்விசாலமான நாட்டில்

படித்தறிந்த வைத்தியர்கள் 30,000-க்குமேல் ஆங்காங்கு இருந்து வைத்தியம் செய்துவர, அவர்கள் அனைவருக்கும் இந்த 7 அல்லது 8 வைத்தியப் பத்திரிகைகள்போதுமா வென்றும், அப்பத்திரிகைகள் எண்ணிக்கையில் இவ்வளவு குறைந்திருப்பதற்குக் காரணமென்னவென்றும் ஒருவர் கேட்கக்கூடும். இக்கேள்விக்கு விடையும் வெளிப்படையானதே; இவ்வளவு எண்ணிக்கையுள்ளவருள் கால் பங்கு வைத்தியர்களும் வைத்தியப் பத்திரிகையைப் படிப்பதில் சிரத்தையுள்ளவராயில்லை. இவ்வைத்தியர்களுடன் நமக்கு நேரிலுள்ள அநுபவத்தைக்கொண்டும், கடிதப் போக்குவரத்துகளாலும், நாம் அறிந்தமட்டும் அவர்கள் பத்திரிகையை வரவழைத்துப் பாராமலிருப்பதற்கு மூன்று காரணங்கள் உண்டு:—

(1) வைத்தியர்களில் சிலர் பத்ரிகைகளைப் படிப்பது அநாவசியகமென்றும், அவற்றால் அறிந்துகொள்ள வேண்டியது ஒன்று மில்லையென்றும் கருதுவதுண்டு; வைத்திரப் பத்திரிகைகளைக் கவனிக்காமலிருப்பதற்கு இது ஒரு காரணமாகும். (2) மற்றொரு பகுதியார் 'பத்திரிகையைப் படிக்க சிறிதும் ஒழிவுநேரம் கிடையாது' என்று கூறுவது இரண்டாவது காரணமாம். ஆனால் மிகவும் செல்வாக்கைப் பெற்று வைத்தியத்தொழிலில் வெகு பிரக்கியாதிபெற்ற சில வைத்தியர்களே இந்த இரண்டாவது பகுதியிலுள்ள காரணத்திற்கு உள்ளாவாரென்று நாம் குறிப்பிடவேண்டியிருக்கிறது. (3) வேறு சிலர் வைத்தியப் பத்திரிகைகளைப் படிப்பதில் ஆவலுள்ளவராயினும், இதற்காகச் செலவிட அவர்களுக்குச் சக்தியில்லை என்று ஏதோ ஒருவாறு காரணம் சொல்லுவர்; அவர்களுக்கு இலவசமாக எப்பொழுதேனும் மாதிரிக்கு ஒரு ஸஞ்சிகை அனுப்பப்படுமானால், அப்பொழுது மாத்திரமே அவர்கள் பத்திரிகையைப் படிப்பர். இவ்வித முறைப்பாடுகளில் ஒவ்வொன்றையும் நாம் அனுபவத்தில் ஆராய்ந்து பார்த்து வந்ததில், முற்கூறிய மூன்று காரணங்களுக்கும் உள்ளான பகுதியாரில் ஒவ்வொரு பகுதியையும் பற்றி நமது அபிப்பிராயத்தைத் தனித்தனியே எடுத்துக் கூறுகிறோம்:

1. வைத்தியப்பத்திரிகையைப் படிப்பது அவசியமல்லவென்று கருதும் முதல் வகுப்பினருக்கு நாம் தெரியப்படுத்துவதென்னவெனில் — வைத்தியரல்லாதவர் ஸமாசாரப் பத்திரிகைகளைப் படிப்பது எவ்வளவு முக்கியமோ, வைத்தியர்கள் வைத்தியப்பத்திரிகையை அப்போதைக்கப்போது கருத்துடன் படித்து வருவதும் அவ்வளவு முக்கியமாகும். ஸாதாரண ஜனங்கள் வெளியில் நடந்தேறும் பற்பல விதமான விவஹாராதிகளை யறிவது அவர்களுக்கு எவ்வாறு இன்பமூட்டுவதாகவும் உபயோககரமாகவும் இருக்கின்றதோ, அவ்விதமே வைத்தியர்களுக்கு அவர்களுடைய தொழில் மார்க்கம் எவ்வாறு விருத்தியடைகிறதென்றும், சிகித்ஸா க்ரமங்களில் எவ்விதமான புதிய முறைகள் ஏற்பட்டு வருகின்றனவெனவும், பலவாறான வியாதிகளைத் தடுப்பதற்கு மேன்மேலும் சிறந்தவகையில் கண்டுபிடிக்கப்படும் உபாயங்கள் யாவையெனவும், ரோகங்களைப் பரீக்ஷிப்பதற்கு தற்காலமுள்ளவைகளைவிட எளிதான வழிகள் எவையென்றும், மனிதர்கள் வியாதிகளிலிருந்து நிவ்ருத்தியடைய நிரூபிக்கப்படும் அனுபவமுறைகள் எவையென்றும் இவ்வித அரிய விஷயங்களை அந்தந்த ஸமயங்களில் வைத்தியப்பத்திரிகையின் மூலமாய் தெரிந்துகொள்வது மிகவும் இன்பமூட்டுவதாகவும் அவர்களுடைய தொழிலுக்கு இன்றியமையாததாகவும் இருக்கின்றது. மேற்கூறிய விஷயங்கள் யாவும் வைத்தியப்பத்திரிகையைப் படிப்பதாலேயே அறிந்துகொள்ளக் கூடியவையாம்; வைத்தியப் பத்திரிகைகளை எவர் படிப்பதில்லையோ, அவர்கள் இக்காலம்வரையில் வைத்திய சாஸ்திரத்திலேற்பட்டுள்ள அநேகவிதமான நவீன விஷயங்களையுணர்ந்து விரிவான அறிவைப் பெற்ற நாகரிக வைத்தியர்களாகமாட்டாரென்று நாம் திடமாகக் கூறுவோம். புதிது புதிதா

சக் கண்டுபிடிக்கப்படும் வைத்தியமுறைகளைப்பற்றி, வைத்தியப்பத்திரிகைகளைப் படிப்பது அவசியமில்லையென்று நினைத்த சிலரிடம் கூற, அவர்கள் பிறகு ஆச்சரியமுற்று, அப்பால் அவர்கள் அவ்விஷயங்களைத் தெரிந்துகொள்ளாமலிருந்ததைப்பற்றி சிந்தித்து வைத்தியப்பத்திரிகையைப் படிப்பது வைத்தியர்களுக்கு எவ்விதத்திலும் அவசியமானது என்று ஒப்புக்கொண்டனர். இதைப்பற்றி நாம் எவ்வளவோ திருஷ்டாந்தங்களைக் கூற முடியுமாயினும், அவற்றை எழுதினால் விஷயம் மிக விரியும். வைத்தியப் பத்திரிகையைப் படிப்பது அவசியமில்லையென்று கூறுபவர் தமது புத்தியை விசாலப்படுத்திக்கொள்ள முடியாதென்றும், தேச காலாதிகளுக்குத் தகுந்தவாறு வைத்திய முறைகளைக் கையாள ஸாத்தியப்படாமல் அநேக ஸமயங்களில் கஷ்டப்படவேண்டி நேரிடுமென்றும் அனுபவத்திலேயே அறியப்படும்.

2. வைத்தியத் தொழில் அபரிமிதமாயிருப்பதால் பத்திரிகையைப் படிப்பதற்கு நேரம் கிடைப்பதில்லையென்று கூறப்படும் இரண்டாவது காரணம் விவேகிகளான வைத்தியர்களிடமிருந்து நாம் ஒருக்காலும் எதிர்பார்க்கக் கூடியதல்ல. நாகரிகத்தில் முன் சென்றிருக்கும் இதர நாடுகளில் பிரசுரிக்கப்படும் பத்திரிகைகளைப்போல் இந்தியாவில் வெளியிடப்படும் வைத்தியப் பத்திரிகைகள் அவ்வளவு அதிகமான பக்கங்களுடையவையல்ல; இவை பெரும்பாலும் சுமார் 30 அல்லது 40 பக்கங்கள் கொண்டவைகளாகவே யிருக்கின்றன; அவையும் மாஸத்திற்கு ஒரு முறையே வெளியாகின்றன; 30 அல்லது 40 பக்கங்கள் கொண்ட ஒரு வைத்தியப் பத்திரிகையைப் படிக்க ஒரு மணி நேரமும் அதிகமென்று நாம் நினைக்கிறோம். ஒரு மாஸத்தில் ஒருமணி நேரங்கூட ஒழிவு கிடைக்காதென்று எந்த வைத்தியரும் சொல்லமுடியாது. மேலும் இரண்டாவது காரணத்தைக் கூறும் வகுப்பைச் சேர்ந்தவர் மற்றொரு சாக்கும் கூறுவர்; அதாவது இந்தியாவில் பிரசுரமாகும் பத்திரிகைகளில் விசேஷமான விஷயங்கள் அடங்கியிருப்பதில்லை யென்பதே. தோன்றினவாறு மொழியப்படும் இவ்வார்த்தைக்கு நாம் ஸமாதானம் கூறுவதே அவசியமானதல்ல; ஆகிலும் சொல்லுகிறோம். இதரதேசங்களிலிருந்து வரும் பத்திரிகைகளிலும் இத்தேசத்தில் வெளியாகும் பத்திரிகைகளிலும்—அவை எவ்வளவு பெயர்பெற்றவையாயிருந்தபோதிலும் ஒவ்வொரு கையொப்பக்காரரின் எண்ணத்திற்கும் அநுகூலமாகவே ஒவ்வொன்றிலும் விஷயங்கள் யாவும் அடங்கியிருக்குமென்று எதிர்பார்ப்பது சரியல்ல. ஒவ்வொரு ஸஞ்சிகையிலும் சில விஷயம் சிலருக்கும், வேறு சில வேறு சிலருக்கும் உபயோகமாகும்படி வருவதுடன், அநேக ஸமயங்களில் பொதுவாக அனைத்துமே எல்லோருக்கு முபயோகமாகும்படியும் வெளியாகக்கூடும். மேலும் இத்தேசத்தில் ஆயிரக்கணக்கான வைத்தியர்கள் தொழில் நடத்திவருகையில் அவர்களில் சிலராவது தம் தமது அனுபவத்தில் வரும் நூதன வைத்திய முறைகளையும், ரோக பேதங்களைப்பற்றி புதிதாகக் கண்டு பிடிக்கப்படும் அரிய விஷயங்களையும் எழுதி ஸமயம் நேர்ந்தபோதெல்லாம் வைத்தியப் பத்திரிகைகளுக்கு அனுப்பிப் பிரசுரப்படுத்திவந்தால், தங்களைப்போன்ற இதர வைத்தியர்களுக்கும் தமது அனுபவத்தினாலறிந்த விஷயங்களை அறிவித்து உதவிசெய்தவர்களாகவும், அதன் மூலமாய் இத்தேசத்திய வைத்தியப் பத்திரிகைகளை மேன்மைப் படுத்தியவர்களாகவும் ஆவார்களல்லவா? பத்திராசிரியர்கள் பன்முறை கேட்டுக்கொண்டாலும் இத்தேசத்திலுள்ள வைத்தியர்கள் தமது காரியத்தையே கவனிப்பவர்களாயிருக்கிறார்களே யன்றி, இவ்விதம் பத்திரிகைமுதலியவற்றை ஆதரித்து அவற்றைச் சிறப்பிக்க முன்வருவதில்லையே. இவர்கள் இவ்வாறு கவனம் செலுத்தாமற்போனால் ஒரு பத்திராசிரியர்மட்டும் என்ன செய்யக்கடவர்? அல்லாமலும் பலவிதமான

மற்ற சாஸ்திரங்களைப்போல வைத்தியமென்பது இவ்வித தத்துவமுள்ளதென்று நிச்சயிக்கக் கூடிய, அல்லது இவ்வளவுதான் என்று முடிவு பெற்ற சாஸ்திரமாகக் கருதக்கூடிய சாஸ்திரமல்ல. இந்த சாஸ்திரம் இன்றைக்கும் ஒருவாறு உருவாக வேண்டியதும், விருத்தியடையக் கூடியதும், வேறுவகையான மாறுதல்களடையத்தகுந்ததுமா யிருக்கின்றதேயன்றி எவ்வகையிலும் முற்று பெற்றதாக ஆய்விடவில்லையானதால், இப்பொழுதுள்ள அறிவுடன் இன்னும் அதிகமான அறிவு ஸம்பாதிக்கவும், பழையன கழிக்கவும், சில விஷயங்கள் விசேஷமாக மாற்றவேண்டியு மிருக்கின்றன. நாம் வைத்திய சாஸ்திரத்தைப் பள்ளிக்கூடங்களில் கற்றறிவது, புஸ்தகங்களைப் படிப்பது என்னும் இவ்விரு வழிகளால் மட்டும் போதுமானவரையில் சாஸ்த்ரீயமாகவும் அநுபவரீதியாகவும் அறிவைத் தேடிக்கொள்ளலாமென்று நினைப்பது பிசகு. எந்த வைத்தியர் வைத்தியப் பத்திரிகைகளைப் படிப்பதில் சோம்பலுள்ளவராகவும், அல்லது உத்ஸாஹக் குறைவுடையவராகவும் இருக்கிறாரோ அவர்கள் தமதிடம் வரும் பிணியாளிகளுக்கு அவசியமானவற்றைச் செய்யமுடியாதவராகவும், ஆகவே அவர்கள் வைத்தியர் என்கிற பெயருக்கே உரியவரல்லரென்று கருதக்கூடியவராகவும் ஆவார்கள். வைத்தியப்பத்திரிகைகளைப்படித்துவந்தால்தான் வைத்தியமுறைகளில் புதிது புதிதான விஷயங்களையுமறிந்து பிணியாளிகளுக்கும் மேலான நன்மையைச் செய்து முடிக்கவும் திறமையுள்ளவராவார்கள்.

3. பத்திரிகைகளை வரவழைத்துப் படிப்பதற்குச் சக்தியில்லையென்னும் காரணத்தைக் கூறும் மூன்றாவது வகுப்பினருக்கு நாம் கூறுவதென்னவென்றால் — இவர்களுடைய வைத்தியத் தொழிலும், புரோவ்ருத்திக்கு வேண்டிய மற்ற முயற்சிகளும் பயன் பெறுவதற்கு இவர்கள் செய்யும் செலவு மிதமாயிருக்க வேண்டுமென்றாலும், வைத்தியத் தொழிலுக்கு வேண்டிய அறிவை மேன்மைபடுத்திக் கொள்வதும், அவ்வித அறிவின் மேன்மையைப் பெற ஒரு வைத்தியப் பத்திரிகையையாவது படிப்பதும் எவ்விதத்திலும் இன்றியமையாததாம். ஒரு வைத்தியப் பத்திரிகைக்குக் கூட ஒரு வருஷத்திய சந்தாத்தொகையைக் கட்டுவது கஷ்டமாகத் தோற்றினால், அவர்கள் ஆறுமாதங்களுக்கு ஒருமுறையாக இரண்டு தடவையிலாவது சந்தாவைச் செலுத்திப் பத்திரிகையை வரவழைத்துப் படித்து வரலாம். முதலில் ஆறுமாதங்களுக்கு சந்தாவைச் செலுத்தி அந்த ஆறுமாதங்களிலும் ஒரு வைத்தியப் பத்திரிகையைப் படித்து வருபவர், பத்திரிகைகளைப் படிக்காத ஸமயத்திலிருந்த அறிவையும் அப்பொழுதுள்ள ஞானத்தையும் சீர்தூக்கிப் பார்த்தார்களேயானால், தமக்கு அநுபவ முறையிலும் சாஸ்திர முறையிலும் எவ்வளவு விசேஷமான தேற்சியுண்டாயிருக்கிறதென்று நிச்சயமாய் நிர்த்தாரணம் செய்ய சக்தியுள்ளவராவார். வைத்தியப் பத்திரிகை மிக உபயோகமானதென்றும் அவசியமாகப் படிக்கவேண்டியதென்றும் அப்பொழுதே அவர்கள் அறியக்கூடியவராவர்.

[அநுபவமுறைகளையும் சாஸ்திரங்களையும் கண்ணும் கருத்துமாகக் கற்றுத் தெறிய ஆங்கில வைத்தியர்களுக்கே வைத்தியப் பத்ரிகைகளைப் படிப்பது இன்றியமையாத விஷயமென்றால், தமிழ்நாட்டிலுள்ள ஆயுர்வேத யூனானி வைத்தியர்களுக்கு வைத்தியப் பத்திரிகை எவ்வளவு அவசியமோ அவர்களே யோசித்து நிச்சயிக்கக் கடவர். வைத்திய கலாசாலைகளிலாவது ஆஸ்பத்திரிகளிலாவது சென்று இவ்வைத்தியர்கள் சாஸ்திரமும் கற்கவில்லை, அநுபவமும் பெறவில்லை. இப்படியிருக்க அநுபவமுறைப்படி சாஸ்திர அறிவையும் புகட்டக் கூடிய ஒரு தமிழ் வைத்தியப் பத்திரிகையையாவது படிக்காமற் போனால் இவர்களுடைய அறிவு எவ்வாறு மேன்மையடையுமோ கடவுளே அறிவார். ப-ர்.]

THE PRINCIPALNESS OF ANATOMY AND PHYSIOLOGY IN MEDICINE.

வைத்திய சாஸ்திரத்தில் சரீரதத்துவத்தின் அறிவு பிரதானமானது.

BY

KAVIRAJ GANANATH SEN, M.A., L.M.&S.,

Vaidyavatamsa, Vidyanidhi, and Kavi Bhushan, Author of "Pratyaksha Sarira" in Sanskrit, &c., &c.

(சென்ற ஸஞ்சிகையின் 78-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

தந்திரத்திற் கூறப்பட்டுள்ள ஷட்சக்ர விவரணமானது பண்டைக்காலத்திய ஆர்ய வைத்தியர்களுக்கு சாரீர சாஸ்திரத்தில் அபூர்வமானதோர் அறிவு இருந்ததாகத் தெர்விக்கின்றது. அதைப்பற்றி கீழே சிறிது குறிப்பிடப்பட்டது; இன்னும் சிறிது அவ்விஷயத்தையே விளக்கிக் காட்டுகிறேன். சரீரத்தில் மூலாதாரம், ஸ்வாதிஷ்டாநம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தம், ஆஞ்ஞா என்று ஆறு சக்ரங்கள்—ஷட் சக்ரங்கள் என்று பிரஸித்தி பெற்றவை--உண்டென்று கேள்விப் படுகிறோமல்லவா? அவற்றுள் மூலாதார மென்பது மர்ம ஸ்தானத்திற்குக் கீழேயும் குதத்திற்கு முன்புறமாகவும் கிரந்திபோல் ஒரு அவயவம் இருப்பதாகக் காணப்படும்; அது இளா பிங்களா என்னும் இரண்டு நாடிகளின் மூலஸ்தானமென்று கருதப்படுகிறது; இதையே ஆங்கிலத்தில் 'காங்க்ளியன் காக்ஸிஜீயம் இம்பார்' (Ganglian Coccygeum impar) என்று வழங்குவதாக எமது துணிபு. ஸ்வாதிஷ்டானசக்ரம் என்பது மர்மஸ்தானத்தின் அடியிலுள்ள ஒரு பாகம்; இங்கு நரம்புகள் அநேகம் ஒரு மிக்கச் சேர்ந்திருக்கின்றன; இந்த நரம்பு மண்டலத்தையே ஆங்கிலேயர் ஹைபோகாஸ்ட்ரிக் ப்ளெக்ஸஸ் (Hypogastric plexus) என்றுரைப்பதாகக் கருதுகிறோம். மணிபூரசக்ரம் என்பது ஸ்வாதிஷ்டானத்திற்குமேல் நாபிக்கி அடியிலுள்ள நாடிக்கூட்டத்தின் பகுதி; இதையே ஆங்கிலத்தில் ஸோலார் ப்ளெக்ஸஸ் (Solar plexus) என்று வழங்குகின்றனர் என்று நிச்சயமாகக் கூறுவோம். மணிபூரத்திற்கு மேற்புறத்தில் ஹ்ருதயத்திற்கு அருகிலுள்ள நாடிகளின் சேர்க்கை அநாஹத சக்ரம் எனப்படுகின்றது; இதற்கே ஆங்கிலத்தில் கார்டியேக் ப்ளெக்ஸஸ் (Cardiacplexus) எனவும் பெயராம். இதற்குமேல் கழுத்தில் விசுத்த மென்னும் நாடிசக்ரம் இருக்கின்றது; இதையே ஆங்கிலத்தில் கெராடிட் ப்ளெக்ஸஸ் (Carotid plexus) என்பார்கள். ஆஞ்ஞாசக்ரமானது புருவங்களுக்கு இடையில் குறுக்காகப் படர்ந்திருக்கின்றது; மேனாட்டார் இதை காவெர்னஸ் ப்ளெக்ஸஸ் (Cavernous plexus) என்று கூறுவதாயறிகிறோம்.

இவ்வாறு நரம்பு மண்டலங்களுடைய ஆங்காங்குள்ள விசேஷ ஸ்தானங்களைக் குறிப்பிடுபவையான இந்த ஷட்சக்ர மண்டலங்களனைத்துக்கும் மேல் சிரஸ்ஸுக்குள் அமைக்கப்பட்டுள்ளதும், ஸகல உணர்ச்சிகள் அல்லது அறிவுக்கு ஆதாரமுமாயுமிருக்கும் 'ஸஹஸ்ராரம்' என்னும் உட்புறத்து அவயவமே மூளை என்று வழங்கப்படுகிறதென்பதில் ஸந்தேஹமில்லை. ஷட் சக்ரங்களின் தத்துவத்தை ஆராய்ச்சி செய்ததன்மேல் நாம் தெரிந்து கொள்வதென்னவென்றால் — நரம்பு மண்டலங்களையும், மூளை முதலியவற்றையும் பற்றிய மிக நுட்பமான விஷயங்களையும் பண்டைக்காலத்திய ஆர்யவைத்தியர்கள் ஆதிபோடந்தமாய் நன்றாக அறிந்திருந்தனர் என்பதேயாம். இவ்வாறு மேம்பாடடைந்திருந்த முற்காலத்திய அறிஞருடைய புத்தி விசேஷங்களைக் குறிப்பிடுபவையான அநேகம் அத்தாட்சிகள் காலவளவில் அநியாயமாய் அழியத் தொடங்கின; நமது பிராசீன சாஸ்திரங்களுக்கு சத்துருக்களும் எண்ணிறந்தவர்களாய் எற்பட்டனர்; ஆகவே ஆர்யர்களியற்றிய ஆதிகாலத்திய சாஸ்திரங்களின்மேல் நாம் குற்றம் குறை கூறுவதிற் பிரயோஜனமில்லையென்றும், பிற்காலத்தியவர் அவற்றை சிரத்தையுடன் அபிவ்ருத்திக்குக் கொண்டுவராமலிருந்ததே விஸ

விக்கக் கூடியதாகுமென்றும் எனதெண்ணம்.

அப்பால் இப்பொழுது நமது சாரீர சாஸ்திரத்தை நன்றாச் சீர்திருத்தும் உபாயங்களை நாம் தேடவேண்டும்; அதற்கு இரண்டு காரியங்களைச் செய்யவேண்டும்: (1) பிராசீனமான சாரீர சாஸ்திரத்தை ஒருங்கே பரிசோதிப்பதும், (2) பிரத்தியக்ஷமாக சரீரதத்துவங்களையுணர்ந்து அவ்வறிவைக் கொண்டு நமது சாரீரசாஸ்திரத்தை ஒழுங்கு படுத்துவதுமாம். பிராசீன சாரீர சாஸ்திரம் பலவாறு மாறுதலடைந்திருப்பினும், அவற்றில் பெரும்பான்மையான பாகங்கள் அந்தந்த கிரந்தங்களில் சிதறியிருப்பதால் அவற்றை ஒருங்கே ஆராய்ந்தெடுத்து நாம் ஒழுங்கு படுத்துவது கடமை; அவற்றில் அநேக பரிபாஷைகள் அறியக் கூடியவையாகவும், சில அறியக் கூடாதனவாயும் இருக்கின்றன. நமது சாரீர சாஸ்திர ஸம்பந்தமான விஷயங்களை ஒரு கிரந்தத்தைக் கொண்டே அறிய முடியாமல், இப்பொழுது கிடைக்கக்கூடிய முற்காலத்தியவையான அநேக சாரீரக் கிரந்தங்களின் மூலமாகவே தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. சவசரீரங்களைப் பரிசோதித்து ஸந்தேஹமற விஷயங்களையுணர்ந்து அச்சாரீர சாஸ்திரத்தைச் சீர்திருத்துவதே மற்றொரு புறத்தில் நமது சிரஸ்ஸில் ஏற்றப்பட்ட பாரமாம். இவ்விருவித காரியங்களையும் நாம் இனியாவது செய்து முடித்தால்தான் சாரீர சாஸ்திரத்தில் ஸந்தேஹமற சிறந்த அறிவு ஆயுர்வேத வைத்தியர்களுக்கு உண்டாக வகையேற்படும். சரீரதத்துவங்களை பிரத்தியக்ஷ பரிசோதனைகளால் அறிவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்ய இக்காலத்தில் மேனாட்டாரே கடமைப்பட்டவரென்றாவது, இதைச் செய்யக்கூடிய யோக்கியதை அவர்களுக்கே உண்டென்றாவது, இந்த சாஸ்திரம் அவர்களுக்கே உரியதென்றாவது எவர்தான் நினைக்கக்கூடும்? பிரத்தியக்ஷ ஞானத்தைப் பெறுவதற்கு ஆவலும் சிரத்தையுமுள்ள ஒவ்வொரு வைத்தியரும் இக்காரியங்களைச் செய்ய, அல்லது இவ்விஷயங்களை அவசியமான உபகரணங்களைக் கொண்டு அறிய உரிமையுள்ளவராயிருக்கின்றனர். ஆயுர்வேதத்திலடங்கிய சாரீர சாஸ்திர ஸம்பந்தமான நூல்களில் பிரத்தியக்ஷப்ரமாணத்திற்கு விரோதமாக விஷயம் ஏதாவது உண்டென்று தோற்றினால், சவசரீரம் முதலியவற்றை நேரில் பரிசோதித்தறிந்து, நமது நூல்களிலுள்ள முன்பின் விரோதமான விஷயங்களை நாம் சீர்திருத்தி விடுவது யுக்தமேயன்றி அது குற்றமாகாது. ஆனால் ஒரு ஆயுர்வேத நூலில் சில விஷயம் பிரத்தியக்ஷப்ரமாணத்திற்கு விரோதமாகக் காணப்படுவதால், நாம் சீர்திருத்துவதற்குமுன் சாரீரசாஸ்திர ஸம்பந்தமான எல்லா ஆயுர்வேத நூல்களையுமே உற்றுப் பார்த்து, ஒன்றுக்கொன்றுள்ள ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் அறியவேண்டியது அவசியம். ஒருநூலில் ஒரு விஷயம் பிரத்தியக்ஷப்ரமாணத்திற்கு விரோதமாகவும், மற்றொரு நூலில் அது அனுகூலமாகவும் இருப்பதற்குக் காரணங்கள் அநேகம்; முதலில் நூலியற்றியவர் சரியாக வரைந்திருப்பினும், பிற்காலத்தியவர் அந்நூல்களின் இடையிடையே புதிய விஷயங்களைச் சேர்த்திருக்கலாம்; அப்புஸ்தகங்களைப் பதிப்பித்தவர் விஷயங்களை நன்றாகத் தெரிந்து கொள்ளாமல் மாற்றியிருக்கலாம்; எழுதும்போது எழுத்துப் பிழைகளும் நேர்ந்திருக்கலாம்.

இப்பொழுது ஆயுர்வேத ஸம்பந்தமான சாரீர சாஸ்திரத்தைச் சீர்திருத்துவதற்கு ஆறு விதமான வழிகளைக் கைப்பற்ற வேண்டியிருக்கிறது:-(1) பிரஸித்தமான சில பிராசீன ஸம்ஞைகளுக்கு பரிபாஷைகளை உறுதிப்படுத்தல், (2) அதிக பிரஸித்தமல்லாத அல்லது முற்றிலும் பிரஸித்தமில்லாத பெயர்களை வெளிப்படுத்தல் அல்லது அவற்றின் பொருட்களை விவரித்துக் கூறுதல், (3) பிராசீனமான பெயர்கள் எவற்றிற்குக் கிடைக்கவில்லையோ அவற்றிற்குப் புதிய பெயர்களை ஏற்படுத்தல், (4) பரிசோதனைகளால் பிரத்தியக்ஷத்தில் காணப்படும் விஷயங்களை விளங்கக் கூறுதல், (5) பிர

த்தியக்ஷ ப்ரமாணங்களைக்கொண்டு பண்டைக் காலத்திய நூல்களிலுள்ள பிழைகளைப் பரிசோதித்து சரிப்படுத்தல், (h) கண்ணால் பார்க்கும் விஷயங்களுடன் பிராசீனமான சாரீர சாஸ்திரத்திலுள்ள விஷயங்களை ஒற்றுமைப் படுத்தல்.

1. பிரஸித்தமான சில பிராசீன ஸம்ஞைகளுக்குள்ள பரிபாஷைகளை உறுதிப்படுத்தும் வகையானது, ஸிரைகள் (காரிரத்தக் குழாய்கள்), தமனிகள் (செவ்விரத்தக் குழாய்கள்) முதலிய பதங்களுக்குப் பொருள்கூறப்படும்போது முன்னால் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

2 அதிகமாகப் பிரஸித்தி பெறாத பெயர்களை நன்றாக வெளிப்படுத்துவதையும், அவற்றின் பொருட்களை நிச்சயிப்பதையும் பற்றி அதர்வணவேதத்தில் மொழியப்பட்டுள்ள கவீனீ முதலிய பதங்களுக்கு அர்த்த விசாரம் செய்கையில் கீழே அறிவித்திருக்கிறேன். (வ்ருக்கங்களிலிருந்து மூத்திரப்பையில் வந்து சேரும் இரண்டு மூத்திரக் குழாய்கள் கவீனிகள் என்று கூறப்பட்டிருக்கின்றன.) வைத்தியநூல்களில் மூத்ரவஹம் அல்லது மூத்ரப்ரஸேகம் (வஸ்தியென்னும் மூத்திரப்பையிலிருந்து மூத்திரம் வெளிவருவதற்கான குழாய்) என்கிறபெயர்கள் பெரும் பான்மையோருக்கு நன்கு விளங்காமையால் அவற்றின் பொருட்களையும், அவற்றைப்போல் அதிக பிரஸித்தியில்லாத வேறு சிலவற்றையும் சிறிது நுட்பமாய் சிரமப்பட்டு அறியவேண்டும். வேறு தந்திரங்களில் இளா பிங்களா முதலிய மற்றும் சில பதங்கள் அறியக்கூடியவை; அவற்றின் பொருட்களும் அடியில் விவரிக்கப்பட்டன. சரீரதத்துவங்களுக்கு ஸம்பந்தப்பட்ட அநேகம் பெயர்கள் பல சாஸ்திரங்களில் சிதறியிருந்தாலும் அவற்றை ஒருமிக்கச் சேர்த்து நாம் வியவஹாரத்திற்குக் கொண்டுவர வேண்டுமேயல்லாமல் அவற்றிற்குப் பதிலாக வேறு பதங்கள் உண்டாக்கவாவது சேர்க்கவாவது கூடாது.

3. சில விஷயங்களுக்குப் பெயர்கள் கிடைக்காவிட்டால், அவசியமான விடங்களில் புதிதாக சில பெயர்களை ஏற்படுத்தலாம்; அவற்றிலும் டித்தன், டபித்தன் முதலியதைப் போலிராமல் அர்த்தமுள்ளனவாகவும் அழகாகவும் இருக்கும் பெயர்களைச் சேர்த்துவிடலாம்; அப்படிச் செய்தால் படிக்கும் மாணுக்கருக்கு அவற்றை நினைவில் வைத்துக்கொள்வது எளிதாகும்.

4. பிரத்தியக்ஷமான பரீக்ஷாமுறைகளால் அறியப்பட்ட சாரீரதத்துவங்களை சொற்ப வாக்கியங்களைக்கொண்டு விவரித்துவிட முடியாது. ஆங்கிலத்திலுள்ள அநேக சாரீரநூல்களைப்போல் அதிக விஸ்தாரமாகவாவது, ஆயுர்வேதக் கிரந்தங்களிலடங்கிய சாரீரங்களைப் போல் அதிக சுருக்கமாகவாவது புதிதாக சாரீரநூல் எழுதுவதில் பிரயோஜனமில்லை. சரீரதத்துவங்களை சவசரீர பரிசோதனை முதலியவற்றால் காணப்பெறாதவர்கள் நாம் கூறும் விஷயத்தை நன்குணரும்படியாக ஒவ்வொரு ஸந்தர்ப்பத்திற்கும் தகுந்தவாறு பற்பல சித்திரப்படங்களையும் அமைக்கவேண்டும். இக்காரியம் அதிக திரவியச்செலவாலும் சரீரசிரமத்தாலும் நிறைவேற்றக்கூடியதென்பதில் ஸந்தேஹமில்லை. செய்வதாயிருந்தால் அவ்வாறு செய்தால்தான் பிரயோஜனமுண்டு.

5. நமது சாரீரசாஸ்திரங்களில் ஏதேனும் சிலவிடங்களில் பிரத்தியக்ஷ ப்ரமாணத்திற்கு அல்லது முன் பின் கூறிய விஷயங்களுக்கு விரோதமான பிரயோகங்கள் ஏற்பட்டிருந்தால் அவற்றைச் சீர்திருத்துவதைப்பற்றி அடியில் சிறிது கூறப்பட்டிருக்கிறது. என்னவென்றால்—ஸிரைகளையே தமனிகளென்றும் ஸ்ரோதஸ்ஸுகளென்றும் நாடிகளென்றும் மொழிந்திருப்பது, அவ்வாறே தமனிகளை ஸிரைகளென்றும் நாடிகளென்றும் வழங்கியிருப்பது முதலியன. இவ்வித பிழைகளைத் திருத்தி தமனிகளை தமனிகளென்றும், ஸிரைகளை ஸிரைகளென்றும், நாடிகளை நாடிகளென்றுமே வழங்கும்படி நாம் ஏற்பாடுசெய்து விடுவதுதான் சாஸ்த்ரீய முறையாம்.

6. பிரத்தியக்ஷத்தில் பரீக்ஷித்தறியப்படும்

விஷயங்களுக்கும் சாஸ்திரத்திற் கூறப்பட்டிருப்பவைகளுக்கும் ஒற்றுமை யில்லாவிட்டால், பிரத்தியக்ஷ பரீக்ஷைகளால் அறியப்பட்ட விஷயங்களைக்கொண்டு சாஸ்திரத்தில் அடங்கிய சில தவறுதல்களைப்போல் தோற்றும் அவற்றைச் சரிப்படுத்தவேண்டும். இவ்விஷயம் நிர்த்தாரணம் செய்வது மிகவும் சிரமஸாத்தியமானது. ஆகிலும் அவ்வாறு சீர்திருத்தத்தான் வேண்டும். முற்காலத்திய சாரீர சாஸ்திரத்தில் அநேகவிஷயங்கள் பிரத்தியக்ஷ ப்ரமாணங்களுக்கு விரோதமானவைபோல் தோற்றுகின்றன; பிரத்தியக்ஷ ப்ரமாணத்திற்குமட்டும் விரோதமாயிருப்பவை போலல்ல, முன்பின் விஷயங்களுக்கும் அல்லது ஒருவர் கூறியவற்றிற்கும் மற்றொருவர் கூறுவதற்குக்கூட விரோதங்கள் இருப்பதாகத் தோற்றுகின்றன. ஆம், சரக ஸம்ஹிதை, யாஜ்ஞவல்க்யஸம்ஹிதை இவற்றில் மனிததேஹத்தில் முன்னூற்றறுபது எலும்புகள் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது; ஸுச்ருத ஸம்ஹிதையில் முன்னூறு எலும்புகளென்று மொழியப்படுகிறது. இக்காலத்திய நவீன சாரீரநூல்களில் இருநூறு எலும்புகளே உண்டென்று வரையப்பட்டிருக்கிறது. இதற்கு ஸமாதானமென்ன? "நமது சாரீரநூல்களில் ஒன்றுக்கொன்று விரோதமாகவும், பிரத்தியக்ஷ ப்ரமாணத்திற்கு விரோதம்போலவும் மேலுக்குத் தோற்றும் இவ்விஷயங்களை உட்புகுந்து விமர்சம் செய்து பார்ப்பவர், அவை விரோதமானவை அல்லவென்றே அபிப்பிராயப்படுபவர். அதன் எண்ணிக்கை முதலியவற்றில் ஒவ்வொருவர் ஒவ்வொரு முறையைக் கைப்பற்றியதாலேயே இவ்விதம் விரோதமாயிருப்பதுபோல் நமக்குத் தோற்றும்படி யாயிற்றேயன்றி வேறல்ல. வேதமார்க்கத்தை அநுஸரித்தவர் பற்கள் நகங்கள் முதலியவற்றையும் எலும்புகளுடன் சேர்த்துக் கணக்கிட்டிருக்கின்றனர்; பிறர் எழுதிய சாரீரநூல்களில் அவை வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. சல்யதந்திரமென்னும் சஸ்திரசிகித்ஸையில் கைதேர்ந்த ஆர்யவைத்தியர்கள் தருணாஸ்த்திகள் என்னும் முருந்துகளையும் பற்களையும் எலும்புகளின் கூட்டத்தில் கணக்கிட்டிருக்கின்றனர்; மேனாட்டு வைத்தியர்கள் அவற்றை வெவ்வேறாகப் பிரித்து வரைந்திருக்கின்றனர். எலும்புகளின் எண்ணிக்கை வயதுகளை அநுஸரித்தும் வேற்றுமையுடையவைகளா யிருப்பதால், அதைக்கொண்டும் ஆயுர்வேதநூல்களிலும் ஆங்கிலநூல்களிலும் எண்ணிக்கையில் சில மாறுபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்வாறு பிரத்தியக்ஷ ப்ரமாணங்களுக்கு விரோதம்போல் தோற்றும் சிலவிடங்களை ஆழ்ந்து கவனித்தோமாயின் அவரவர்கள் போனவழியில் ஒவ்வொன்றும் சரியானதாகவே ஏற்படுத்தப்பட்டதாய் அறிவோம்.

இவ்வாறு சீர்திருத்தப்பட்டு வெளியாகும் சாரீரசாஸ்திரத்தைப் படிப்பதும், அதன்பிறகு மனிதர்களுக்குண்டாகும் வியாதியின் கூறுபாடுகளை சரீரதத்துவமுறைப்படி யுணர்ந்து அவற்றிற்கேற்ற பரிஹாரங்களைச் செய்வதும் வைத்தியர்களின் கடமையாம். சரீரதத்துவங்களை முற்றிலுமுணராதவர் ரோகஸ்வரூபங்களை யறிவதற்கும், அவற்றிற்கு சிகித்ஸை செய்வதற்கும் யோக்யதை யுடையவராகார்.

THE SIXTH ALL INDIA AYURVEDIC CONFERENCE.

ADDRESS OF WELCOME

ஆறுவது அகிலபாரத ஆயுர்வேத ஆலோசன மஹாசபையில் படித்த நல்வரவு உபந்நியாஸம்.

By

VAIDYARATNA KAVIRAJ JOGINDRA NATH SEN, VIDYABHUSHAN, M.A.,

Chairman, Reception Committee.

ஸதாசாரங்களில் சிறப்புற்றவரும் கல்வியில் மிகத் தேர்ந்தவருமான கனவான்களே! ஆயுர்வேத ஸங்கத்தாரின் வேண்டுகோளுக்கிணங்கி இவ்விடம் வந்து எம்மைப் பெருமைபடுத்தும்

உங்களனைவரையும் வணக்கத்துடன் வரவேற்கும் பணியில் பாக்கியவசத்தினால் நான் நியமிக்கப்பட்டேன். உங்களுடைய மேலான கௌரவாதிசயங்களுக்கேற்க நான் மிகத் தலைவணங்கி முழுமனதுடன் நல்வரவுகூறி ஸந்தோஷத்துடன் வர வேற்கிறேன்.

ஆயுர்வேதமுறையை ஆதரித்து விருத்தி செய்வதற்கென்று பற்பல விடங்களிலிருந்தும் தாங்கள் சிரமத்தையும் கவனிக்காமல் வந்திருக்கிறீர்கள். இப்பொழுது மிகவும் பயங்கரமாக நடந்தேறும் ஐரோப்பிய மஹாயுத்தத்தின் நிமித்தமாக எக்காரியத்தை நிறைவேற்றுவதென்றாலும் பலவகையான ஸங்கடங்கள் ஸம்பவிப்பதால் உங்களுக்கு இவ்விடத்தில் தங்கியிருப்பதற்கான ஸௌகரியங்களை வேண்டியவளவு செய்து முடிப்பதில் ஒருக்கால் ஏதேனும் சிறிது இடையூறு நேரிடக்கூடுமானாலும், அதை மன்னித்து எம்மைப் பெருமைபடுத்துவீர்களென்று நம்புகிறோம்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை வரையில் (3-1-15) யுத்தத்தில் ஜயம் பெறவேண்டுமென்று ஆவல்மேலிட்ட ஆங்கிலேயருக்கு விடுமுறைநாட்களாயிருந்தமையால், இம்மாதம் இரண்டாம் தேதி நடக்கவேண்டிய இவ்வாலோசன ஸபையை இவ்வாறு ஒன்பதாந்தேதி ஆரம்பிக்க வேண்டிவந்தது.

கனவான்களே! இத்தேசத்தில் (வங்காளத்தில்)நாலாப்பக்கங்களிலும் அநேகம் பிரவித்தி பெற்ற நதிகள் வந்து வீழ்வதாலேயே இது புண்ணியதேசம் எனப்படுகிறது; அது மாத்திரமல்ல; இதர சாஸ்திரங்களியற்றிய ஸ்ரீபதி, ரகுநாதன், ஜீமூதவாஹனன் முதலியவர்களென்ன, வைத்தியக் கிரந்தங்களியற்றியவருள் ருக்விநிச்சயமென்னும் நிதான நூல் வரைந்த மாதவகரன், சக்ரதத்தம் என்கிற நூல் எழுதிய சக்ரபாணிதத்தன், இரஸக்கிரந்தங்களுக்குள் மிகப்பிரதானமான ரஸேந்திரஸாரஸங்கிரஹமியற்றிய கோபாலகரன், ஸாரஸங்கிரஹம் வரைந்த ராமமோஹனன் முதலிய அநேக வைத்தியசாஸ்திர நிபுணர்களென்ன இவர்கள் வஸித்துவந்ததால் இத்தேசம் மிகவும் சிறப்புற்றதாயிற்று; அவ்வுத்தம வைத்தியர்களுடைய நூல்களைப் படித்தறிந்தே இப்பொழுது எல்லா ஆயுர்வேத வைத்தியர்களும் சிகித்ஸை செய்ய முன் வந்தனர். அல்லாமலும் அநேக ஆயுர்வேத நூல்களுக்கு வியாக்யானங்கள் இயற்றிய ஸ்ரீ விஜயரக்ஷிதன், ஸ்ரீகண்டதத்தன், அருணதத்தன், சிவதாஸன், கங்காதரர் முதலிய வைத்தியசாஸ்திர நிபுணர்களும் இத்தேசத்தி லல்லவோ உண்டானார்கள்! அன்றியும் ஸீதாராமஸதஸ்ஸில் பிரதான புருஷனாயிருந்த மஹா மஹோபாத்யாயரான அபிராமர், பிறருக்குக்கல்வி கற்பிப்பதில் மிகவும் திறமை வாய்ந்த ராமஸுந்தரர், வைத்திய சாஸ்திரத்திலும் மற்ற சாஸ்திரங்களிலும் மிகப் பரிசயம் பெற்றிருந்த மதனன், கங்காப்ரஸாதன், புண்ணியபுருஷனான ராமநாதன், வைத்தியசூடாமணியான சந்திரகிசோரர், ஆசார்ய கங்காதரரிடம் கல்விகற்று மிகப் புகழ்பெற்ற த்வாரகாநாதர், வினோதலாலஸேனன், பஞ்சாநநன், விஜயரத்னஸேனன், கபாநாதன், விச்வநாதன், ப்யாரீமோஹனன், லோகநாதன், கமலசந்திரன், ஸ்ரீஅம்ருதானந்தன், நீலாம்பரவைத்தியர், பீதாம்பரவைத்தியர், வைத்தியகுல சிரோமணியான ஈச்வரசந்திரன், கைலாஸ சந்திரன், கோபீமோஹனன் முதலிய வைத்தியசாஸ்திர ப்ரவர்த்தகர்களான இன்னும் அநேக மஹான்களுக்கும் இவ்வங்கதேசமே பிறப்பிடமென்று சொல்லிக்கொள்ளும் பாக்கியத்தைப் பெற்றது. இவ்வாறு உலகெங்கும் புகழ்பெற்ற வைத்தியோத்தமர்களுக்குப் பிறப்பிடமான இப்பிரதேசம் ஏற்கனவே பலவிதத்திலும் பெருமை பெற்றதாயிருப்பதுடன், உங்களைப்போன்ற மஹான்களுடைய வரவால் இன்னும் மேலான சிறப்பு வாய்ந்ததாகின்றது.

சாஸ்திரங்களைக் கற்றறிந்து விசாலமான மதியைப்பெற்ற மஹான்களான உங்களனைவரையும் வரவேற்று உபசரிக்கும் காரியத்தில் என்னை நியமித்ததற்காக ஆயுர்வேத ஸங்கத்தின் அங்கத்தினரான வைத்தியர்களுக்கு நான்

தலைவணங்கி நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இக்காரியம் எனக்கு மிகப் பெருமை பாராட்டக் கூடியதாயினும், இது உங்களுடைய அன்பார்ந்த கூட்டுறவால் முற்றிலும் சிறப்புடன் நிறைவேறுமாயின் அப்பொழுதே நானும் நமதுஸங்கமும் நற்பயன் பெற்றதாகக் கருதப்படலாம்.

இப்பொழுது நாம் எக்காலத்திலும் கேட்டிராத ஆச்சரியகரமான இந்த மஹாயுத்தம் நமது பகைவருடைய அடங்காத இறுமாப்பினால் ஏற்பட்டு எண்ணிறந்த உயிர்களும் அளவிறந்த திரவ்யங்களும் அநியாயமாய் அழிந்து போவதை நோக்கி நாம் மனதாற வருத்தமுற வேண்டியிருப்பதுமல்லாமல், நமது காருண்ணிய பிரபுக்களான ப்ரிடிஷ் ராஜாங்கத்தார் சீக்கிரம் ஜயபேரி முழங்கும்படியான நிலைமை நேரிட்டு இப்பொல்லாத யுத்தம் ஒழியவேண்டுமென்று கடவுளைப் போற்றி, நமது அன்பார்ந்த அரசனிடம் முதலில் நமக்கு இயற்கையாயுள்ள பக்தியையும் அறிவிப்போமாக.

அப்பால், வைத்திய சாஸ்திரங்களைப் படித்து மிகவும் ஆச்சரியகரமான சிகித்ஸா முறைகளைக் கையாண்டு புகழ் பெற்ற மதனகவி யென்பவருடைய பௌத்திரரும், கவீந்திர வித்யாலயஸ்த்தாபகரும், ஆயுர்வேதத்தில் ஆழ்ந்த அறிவுள்ளவருமான சந்திரகுமார கவிராஜ கவிபூஷணன் என்கிற வைத்திய வித்வான் இவ்வருஷம் காலகதியடைந்த விஷயம் இவ்விடத்திற் கூடியுள்ள நமக்கெல்லாம் மிகவும் மனத்துயரமுண்டாக்கக்கூடியது. ஆயுர்வேதத்தைக் கசடறக்கற்று, அஸாத்தியமான அநேகம் வியாதிகளுக்கும் அற்புதமான சிகித்ஸைகளைச் செய்து தமது திறமையை பலமுறையில் வெளிப்படுத்தியதை நோக்கி மிகவும் ஸந்தோஷப்பட்ட த்ரிபுராதீச்வரன் என்கிற மஹாப்ரபுவானவர் இவரை தமது ஸம்ஸ்த்தானத்தில் வைத்தியராக நியமித்து, இவருக்கு இராஜ வைத்தியர் என்கிற பெயரையும் அளித்தார். ஆயுர்வேதத்தில் அறிவு பெற்று அதில் அபிமானம் வாய்ந்த நமக்கெல்லாம் இவ்வித்தையை விருத்தி செய்வதற்கு வழிகாட்டி இவ்வித ஸங்கம் ஸ்தாபிப்பதற்கு மூல புருஷனாயிருந்து இப்பொழுது ஸ்வர்க்கலோகத்தை அலங்கரிக்கும் மஹாநுபாவரான ஸ்ரீ சங்கர சாஸ்த்ரியை நாம் இப்பொழுது குறிப்பிட்டு அவரிடம் நன்றி பாராட்டுவதும் அவசியம்.

சாஸ்திரங்களைக்கொண்டும் அனுபவங்களைக் கொண்டும் வேண்டியவளவு வைத்தியத்தில் பரிசயம் பெற்ற நீங்கள் அனைவரும் ஆயுர்வேத சிகித்ஸா முறையை விருத்தி செய்வதன் பொருட்டு இப்பொழுது ஆவலுடன் இங்கு வந்திருப்பதைப் பார்க்க நான் மிகவும் ஸந்தோஷப்படுகிறேன். ஐரோப்பிய சிகித்ஸா சாஸ்திரவல்லோரும் தமது வைத்திய முறைகளை விருத்தி செய்வதற்கு வேண்டிய விஷயங்களை தத்துவப்படி உணர்வதற்கு இவ்வாறே ஒன்று கூடி ஆலோசனை செய்து விஷய நிர்த்தாரணம் பண்ணுவது வழக்கம். ஒருவர் செய்யும் காரியங்களைப் பார்த்து நாமும் அவ்விதமே செய்ய வேண்டுமென்று முயற்சி செய்வது அழகல்லவென்று சிலர் நம்மை இகழ்வதுமுண்டு. அவர்களுடைய கொள்கைக்கு நாம் மறுமொழி கூறுகின்றோம். ஆயுர்வேத வித்வான்களுடைய இம்முயற்சி அவர்களுக்குப் புதிதானதல்ல; பண்டைக்காலத்திய ஆயுர்வேத நூல்களை ஆதியோடந்தமாய் கவனித்துப் படித்தவர் அவ்வாறு அபிப்பிராயங்கொள்ளார். ஆம்: சரகஸம்ஹிதையின் யஜ்ஜ: புருஷீய மென்னும் அத்தியாயத்தில் காசிபதியான வாமகர், மௌத்கல்பர், சரலோமா, ராஜர்ஷியான வார்யோவிதர், குசிகபுத்திரரான ஹிரண்யாக்ஷர், சௌனகர், பத்ரகாப்யர், பரத்வாஜர், காங்காயனர், பிக்ஷு, ஆத்ரேயர் முதலிய மஹாத்மாக்கள் ஒன்று சேர்ந்து ஆத்மா, இந்திரியங்கள், மனது இவற்றின் தன்மைகளையும், மனிதருடைய சரீரதர்மங்களைப்பற்றிய தத்துவங்களையும், வியாதிகள் முன்னால் உற்பத்தியாவதற்கான முகாந்தரங்களையும் ஆராய்ச்சி செய்து நன்கு அறிவதற்காக ஸபைகள் நடத்தினர்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த நூலி

லேயே ஆத்ரேய பத்ரகாப்யீயமென்னும் அத்தியாயத்தில் பத்ரகாப்யர், சர்குந்தேயர், பூர்ணாக்ஷ மௌத்கல்யர், குசிகபுத்திரரான ஹிரண்யாக்ஷர், குமாரசிரஸ் பரத்வாஜர், வார்யோவிதர், வைதேஹமுனி, படிசர், காங்காயனர், பாஹ்லீகபிஷக், பாஹ்லீகர் என்னும்—சாஸ்திர அறிவிலும் வயதிலும் முதிர்ந்தவரான—வித்தர்கள் மிக மனோஹரமான சைத்ரரதமென்னும் வனத்தில் இரஸாஹாரம் முதலியவற்றின் தத்துவங்களை ஆராய்ச்சி செய்வதற்காக ஸபைகூடியதாய் மொழியப்பட்டிருக்கிறது. மூன்று காலங்களையும் அறிவதில் தடையில்லாத மதிமஹிமை யுடையவரும், அத்ரிமஹாமுனிவரின் புத்திரருமான புனர்வஸு என்பவர் அந்த ஸபைகளுக்கு அக்ராஸனாதிபதியாக வீற்றிருந்தார்; புனர்வஸு என்பவர் அக்காலத்தில் வைத்தியசாஸ்திரத்தை விசேஷமாகப் பிரசாரம் செய்பவராகவும், அனைவரானும் ஆராதிக்கக்கூடிய மேன்மை தங்கியவராகவும், வைத்தியசாஸ்திர ஸம்பந்தமான அநேக தத்துவார்த்தங்களை நிர்த்தாரணம் செய்பவராகவும் இருந்த மஹாத்மா ஆவர்.

மேலும் நமது சாஸ்திரங்களில் அத்யயனம், அத்யாபனம் இவற்றைப்போல், சாஸ்திரங்களைக் கற்றறிந்த வித்வான்கள் ஒன்றுகூடி விஷயங்களை ஆலோசனை செய்வதும் நல்லறிவு ஸம்பாதிக்கும் வழியாக மொழியப்படுகிறது; மஹர்ஷியான சரகர் "அத்யயநம், அத்யாபநம் தத்வித்யஸம்பாஷா ச இத்யுபாயா:" என்று கூறியிருக்கிறார். (தத்வித்பஸம்பாஷா என்றால் வைத்தியசாஸ்திரத்திற் பயிற்சி பெற்ற வித்வான்கள் தம்மைப்போன்ற வைத்ய வித்வான்களுடன் ஸம்பாஷணைசெய்து விஷயங்களை ஆலோசித்தல்.) இவ்வாறு ஆயுர்வேத வித்வான்கள் ஆலோசன ஸபைகள் நடத்தும் வழக்கம் பண்டைக்காலத்திலேயே பிரவித்தமாயிருந்த விஷயம்.

மஹாகனம் பொருந்திய ஆர்ய வைத்தியர்காள்! ஆயுர்வேத சாஸ்திரமே மற்ற எல்லாச்சாஸ்திரங்களினும் மிகச்சிறப்புற்றதாகும். இதைப் பிரமாணமாக அங்கீகரித்தால்தான் இதர வேத வாக்கியங்களையும் பிரமாணமாக ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கும். பிரத்தியக்ஷத்தில் பலன்களைக் காட்டக்கூடிய ஆயுர்வேதத்தைப் பிரமாணமாகவும், அதையே உயர்ந்த சாஸ்திரமாகவும் கொள்ளாமற்போனால் அப்பிரத்தியக்ஷமான பலன்களை அனுமானங்களைக் கொண்டு கூறும் வேத வாக்கியங்களையும் தர்க்க சாஸ்திரம் முதலியவற்றையும் பிரமாணமாய் அங்கீகரிப்பதெங்ஙனம்? ஆயுர்வேதத்திற் கூறப்பட்டுள்ள உபாயங்களைக் கைப்பற்றி செய்யப்படும் சிகித்ஸையினால் நற்பயன் விளைவது ஸந்தேஹமில்லாமல் நேரில் அனுபவிக்கக் கூடியதல்லவா? ஜீவகாதி கணத்திற்குள்ள ஜீவநீயம் என்னும் குணத்தில்* எவர் ஸம்சயப்படுவர்? மதனபலமெனப்படும் மருக்காரை எவருக்குத்தான் வமனத்தையுண்டாக்காது? சிவதைவேர் விரேசன முண்டாக்காதென்றுதான் எவர் கூறுவர்? அக்னிக்கு அல்லது அக்னியிற் காய்ச்சிய வஸ்துக்களுக்கு ஸ்வேதனமென்னும் வியர்வையுண்டாக்கும் சக்தியைப்பற்றியும், தண்ணீருக்கு ஸ்தம்பநமென்னும் (இரத்த ஓட்டம், பேதியாவது முதலியதைத் தடை செய்யும்) சக்தியுண்டென்பதைப் பற்றியும் ஸந்தேஹப்படுபவர் யாவர்? ஆகா! இவ்வாறு பிரத்தியக்ஷத்தில் பலன் தரக்கூடியதும், புகழும் புண்ணியமும் ஸம்பாதிப்பதற்கு இன்றியமையாத உபகரணமாயிருப்பதும், ஆகவே இம்மை மறுமைகளில் இன்பமளிக்குந்தன்மையதுமான ஆயுர்வேதமானது நமது துர்ப்பாக்கியவசத்தினால் இப்பொழுது இவ்விதமான பிற்போக்கை யடைந்துவிட்டது!

முன்னால் இப்பாரதவர்ஷத்தின் அரசாட்சி அநேக விதத்தில் சீர்குலைந்திருந்ததால் ஒவ்வோரிடத்திலும் ஸம்பவித்த பல வகையான உபத்திரவங்களால் பரிதாபகரமான நிலைமை

* ஜீவகாதிகணம்—இத்துடன் வெளியாகும் சார்ங்கதர ஸம்ஹிதையில் 96-வது பக்கத்தில் இதைப் பற்றிய விவரங்களையும் பார்க்க.

ஜனங்களுக்கு நேர்ந்திருக்க, எவ்வித முயற்சியிலும் அடிவைக்கமுடியாமல் அளவற்ற இடையூறுகளால் அகில காரியங்களும் அழிந்துகொண்டுவர—அத்தகைய காலத்தில் ஆயுர்வேதம் மாத்திரமேயல்ல பெரும்பாலும் ஸகல சாஸ்திரங்களுமே படிப்பாரின்றி, கற்பிப்பவர் அரிதாகப்போய் மிகவும் ஹீனஸ்திதியடைந்து வந்தன. பிறகு இத்தேசத்திற்கு மீண்டும் தோன்றியதோர் அதிருஷ்டவசத்தினால் மேன்மை தங்கிய ஆங்கில அரசாட்சி ஆரம்பமானது முதல் ஜனங்களுடைய மனது அமைதியடைந்து, தேசக்ஷேமத்திற்கான காரியங்களும் காலக்கிரமத்தில் அபிவ்ருத்தியுடையத் தொடங்கின; ஆகிலும் ஆயுர்வேதாபிவ்ருத்தியின் பொருட்டு அவசியமான காரியங்களைச் செய்ய முயன்றவர் வெகு சிறுபான்மையரென்று வாயாலுரைக்க நான் வருந்துகிறேன்.

வைத்தியோத்தமர்காள்! அபௌருஷேயம்* என்று ஆர்யவைத்தியர்களால் கருதப்படும் ஆயுர்வேதமானது ஹீனதசையடைந்து வருகையில், நாம் முற்பிறப்பிற் செய்த நல்வினைப் பயனென்று எண்ணக்கூடியவாறு இவ்வங்க தேசத்தில் ஸ்ரீமான் ஆசார்ய கங்காதரர் என்கிற மஹான் வைத்தியகுலசிரோமணியாக வந்துதித்தார். இந்த மஹாபுருஷர் ஆரோக்கியத்தையும் ஆகவே ஆயுளையும் அபிவ்ருத்தி செய்வதற்கும், இச்சாஸ்திரமுணர்ந்த வித்வான்களை இத்தேசத்தில்விசேஷமாக மேன்மைப்படுத்துவதற்கும் முதன் முதல் பெருமுயற்சி செய்தவராவர். நமது சாஸ்திரநூல்களுக்கு சிரோபூஷணம் போன்றதான யாதொரு சரகஸம்ஹிதையுண்டோ, அது சில நாட்களுக்கு முன் எஙோ ஒரு மூலையில் ஒருவருக்கும் தெரியாமல் அடைந்து கிடக்க, அதை வைத்தியர்கள் படிப்பதற்கும் படிப்பிப்பதற்கும் அவசியமான கிரந்தமென்று பஹிரங்கப்படுத்தியவரும் இந்த மஹானுபாவனே. இப்புண்ணிய புருஷருடைய பிறப்பினால் ஆயுர்வேத வைத்தியர்களுடைய ஸமூஹம் மாத்திரம் அனுக்கிரஹிக்கப்பட்டதென்று கூறுவதைப் பார்க்கினும் பாரதபூமி அனைத்துமே ஒருவாறு பெருமைபெற்றதென்று மொழிவது பொருந்தியதாம்.

கனவான்களே! ஆரோக்கிய நிலைமையைப் பெற்று பெருமையுடன் வாழ்பவர் அந்நிலைமையைக் காப்பாற்றிக்கொள்வதற்கும், பிணிகளால் பீடிக்கப்படுவர். தமது வியாதிகளை நிவ்ருத்தி செய்து கொள்வதற்கும் இன்றியமையாத வழிகளை யுபதேசிக்கும் ஆயுர்வேதத்தின் சிறப்பைப்பற்றி—உங்களுக்கு உபசாரம் செய்யுமூழியத்தில் நியமிக்கப்பட்ட சிற்றறிவுள்ளவனான—நான் விசேஷமாக எடுத்துரைக்க வல்லமையற்றவனாயிருப்பதுடன் அதற்கு அவகாசமும் அதிகமில்லை. இங்கு நடத்த வேண்டிய வேறு காரியங்களோ அநேகமிருக்கின்றன. இப்பொழுது இம்மஹாஸபையில் வந்து கூடியிருக்கும் நீங்கள் அனைவரும் முறைப்படி வைத்தியசாஸ்திரத்தைக் கற்றறிந்தவரே; அவ்வைத்தியசாஸ்திரத்திலடங்கிய எல்லா விஷயங்களுடைய பொருட்களையும் போதமாறு நீங்கள் அறிந்திருப்பீர்கள்; சுயம் வைத்தியத்தில் திறமை வாய்ந்தவராகவும் விசாலமான கொள்கைகளுடன் பெருமுயற்சி செய்பவராகவும், அந்தந்த ஸமயத்திற்குத் தகுந்தவாறு அதிநுட்பமாகத் தோன்றும் மதிமஹிமை யுடையவராகவும் இருக்கின்றீர்களென்றும் நான் அறிவேன்; அதிகமாக மொழிவதில் பயனென்ன! வைத்தியர்களென்று வழங்குவதற்கான குணங்கள் யாவும் உங்களிடம் அமைந்திருக்கிறதென்று நான் பூர்ணவிச்வாஸமுடையவனாகிறேன். உங்களுக்குள் எவரேனும் ஒருவர் இவ்வித காரியத்தில் முயற்சியெடுத்துக்கொண்டால் அதனாலேயே காரியம் நிறைவேறுமென்பது நிச்சயமாயிருக்க, நீங்கள் அனைவரும் ஒருமிக்கச் சேர்ந்து இவ்வித காரியங்களைச் செய்ய முன் வந்தால் நற்பயன் விளையுமென்பதில் ஸந்தேஹமுமுண்டோ? ஆகவே இப்பொழுது நீங்கள் உத்தேசித்து வந்திருக்கிற காரியங்களை ஆரம்பித்து நடத்தி ஒற்றுமையுடன் அவற்றை நிறைவேற்றி எம்மைப்பெருமைபடுத்த வேண்டுமென்று உங்களைப் பிரார்த்தித்து எனது ஆரம்பப்பிரஸங்கத்தை இங்ஙனம் முடித்துக் கொண்டேன்.

* அபௌருஷேயம்—புருஷனால் இயற்றப்படாதது; எவராலும் இயற்றப்படாமல் சாச்வதமாயிருக்கும் சாஸ்திரமெனக் கருத்து. ஆகையாலேயே "ப்ரஹ்மா ஸ்ம்ருத்வாயுஷோ வேதம் ப்ரஜாபதி மஜிக்ரஹத்" 'எற்கனவே சாச்வதமாக இரஹஸ்யமாயிருந்த ஆயுர்வேதத்தைப் பிரம்மதேவன் ஞானக்கண்ணால் அறிந்து அப்பால் தக்ஷப்ரஜாபதிக்கு உபதேசித்தார்" என்று கூறப்பட்டிருக்கிறது. வேதங்களைப்போல் ஆயுர்வேதமும் ஒருவராலும் இயற்றப்படாத சாச்வதமான சாஸ்திரமென்று ஆர்யவைத்தியர்களின் கொள்கை.—ப-ர்.

வைத்திய கலாநிதி.

ஆனர்தஸூ மார்சமிமீ.

TOWN PLANNING AND SANITATION.

நகரநிர்மாண முறையும் சுகாதாரமும்.

நமது ஆரோக்கிய நிலைமையைக் காப்பாற்றிக் கொள்வதற்கு நாம் குடியிருக்கும் வீடு வாயில்களை வெகு ஒழுங்காகவும் பரிசுத்தமாகவும் வைத்துக்கொள்ளவேண்டியது அவசியமாயிருப்பதுபோல், நாம் வஸிக்கும் நகரமும் முற்றிலும் நிர்மலமாகவும் ஒழுங்காகவும் அமைந்திருக்கும்படி ஏற்பாடு செய்வது சுகாதாரமுறைக்கு இன்றியமையாத விஷயம். முற்காலத்தில் இத்தேசத்திலும் நகரநிர்மாணத்தில் மிகத் தேர்ச்சிபெற்ற மயன், விச்வகர்மா முதலிய தேவாம்சம் பொருந்திய மஹான்களால் அகில விதத்திலும் சீர்மை வாய்ந்த ஹஸ்தினாபுரம் முதலான மிகப் புகழ்பெற்ற பட்டணங்கள் உலகத்தோர் வியப்புறும்வண்ணம் நிர்மிக்கப்பட்டனவென்று பிராசீன சரித்திரங்கள் கூறுகின்றன. ஆனால் பிற்காலங்களில் எவ்வெவ்விடங்களில் வர்த்தகமும், கைத்தொழில்களும், தேவாலயங்களும், மற்றும் மஹாப்பிரபுக்களுக்கு வாஸஸ்த்தலங்களும் ஏற்பட்டனவோ அவ்வவ்விடங்களில் ஜனங்களும் விசேஷமாக வந்துகூடி, வீடுகளைக்கட்டி வீதிகளையும் பலவாறு ஏற்படுத்தி, அப்பால் தோன்றியவாறெல்லாம் நியமமின்றியே முதலில் சிறு கிராமமாக இருந்ததையெல்லாம் நகரமாக மாற்றிக் கொண்டுவந்ததால் இந்தியாவில் அநேக நகரங்கள் ஆரோக்கியக் குறைவையுண்டுபண்ணும் விதமாய் ஏற்பட்டுவிட்டன. இவ்வித நகரங்களில் வஸிப்பவர் அநேக விதமான வியாதிகளால் பீடிக்கப்படுவது இயல்பாகையால், இக்குறையை நிவிருத்திக்கும் உபாயங்களை நகரபரிபாலகரான முனிஸிபாலிடியாரும், மற்றவரும் அறிவது அவசியமென்று நிச்சயித்து நமது மாகாண கவர்னர் அவர்கள் தாம் முன்னால் ஸ்காட்லண்டு தேசத்தில் பார்வையிட்ட நகரநிர்மாணத்திற்கான பொருட்காட்சியை இங்கும் ஜனங்களுக்குக் காட்டவேண்டுமென்னும் எண்ணத்துடன் ப்ரோபஸ்ஸர் பாட்ரிக் கெட்டிஸ்(Prof. Patrick Geddes) என்பவரை அப்பொருட்காட்சிக்கு அவசியமான உபகரணங்களுடன் வரவழைத்தார்.

பொருட்காட்சி.

ஸெனட் மண்டபத்தில் இம்மாதம் 23-ம் தேதியன்று ப்ரொபஸ்ஸர் கெட்டிஸ்ஸால்பார்ப்பவர் பிரமிக்குமாறு ஏற்படுத்தப்பட்டிருந்த நகரநிர்மாண பொருட்காட்சியானது கவர்னர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. கவர்னர் அவர்களை இதைச் செய்வதற்காக ஆனரபுல் மிஸ்டர் P. S. சிவஸ்வாமி ஐயர் அவர்கள் வேண்டிக் கொண்டபொழுது இக்காரியத்தின் உத்தேசத்தையும் உபயோகத்தையும் சுருக்கமாக எடுத்துக் கூறினார்:—

நகரநிர்மாண சிற்பம் இப்பொழுது இந்தியாவில் நன்றாகத் தெரிந்த விஷயமல்ல; மேனாட்டார்கூட இப்பொழுதே இவ்விஷயத்தைப் புதிதாக அறிந்து வருகிறார்கள். நகரங்கள் சாஸ்த்ரீயமான சிற்பமுறைகளின்படி நிர்மிக்கப்படாமையால் அகால மரணங்களுக்கு அதிகமாய் ஜனங்கள் ஆளாகிறார்கள். இப்பட்டணத்தில் ஒரு மைலுக்கு 38-பேர் விதம் மாண்டு விடுகின்றனர்; இது லண்டன் நகரத்திலாவது லிவர்பூல் நகரத்திலாவது ஸம்பவிக்கும் மரணவிகிதத்திலும் இரண்டு பங்குக்குமேல் அதிகரித்ததாயிருக்கின்றது. சிசுமரணமோ இன்னும் கேடான நிலைமையிலிருக்கிறது; கிரேட்ப்ரிடன் முழுமையிலும் உண்டாகும் மரணவிகிதத்திலும் மூன்று மடங்குக்கு மேலாகவே—அதாவது ஒரு மைலுக்கு 280-மரணம் விதம்—இவ்வூரில் ஸம்பவித்து விடுகின்றது; இவ்வித தீங்குகளுக்கு ப்ரொபஸ்ஸர் கெட்டிஸ் தமது பிரஸங்கத்தில் கூறியவையும் கூறப்போகிறவையுமான சாஸ்த்ரீய நகரநிர்மாண சிற்ப விஷயங்களே பரிஹார முறையாகும்.

பிறகு H. E. கவனர் அவர்கள் பொருட்காட்சியைத் திறந்துவைப்பதற்குமுன் ப்ரொபஸ்ஸர் கெட்டிஸ்ஸின் திறமையையும், அவருடைய உபந்யாஸங்களால் நமது மாகாணத்திற்கும் முக்கிய முனிஸிபாலிடிகளின் சீர்திருத்தங்களுக்கும் உண்டாகும் உபயோகங்களையும் எடுத்துக் கூறி, அங்கு அந்தந்த முனிஸிபாலிடிகளிலிருந்து இவ்வுபந்யாஸங்களைக் கேட்கவும் பொருட்காட்சியைப் பார்க்கவும் வந்திருந்த பிரதிநிதிகளுக்கும் நன்றிபாராட்டி வெகு ஸந்தோஷத்துடன் சில வார்த்தைகளைப் பேசினார். முதலில் சில்கானா என்கிற மரக்கலத்தில் இப்பொருட்காட்சியின் பொருட்டு அதிக மதிப்புள்ள உபகரணங்கள் கொண்டுவரப்பட்டு, அவை ஏதோ துரத்ருஷ்டவசத்தினால் அக்கப்பலுடன் எம்டனால் ஸமுத்திரத்தில் அமிழ்த்தப்பட்டனவென்பது விஸனிக்கத்தக்கதானாலும், உடனே ப்ரொபஸ்ஸர் அவர்கள் இங்கிலாந்திற்கு எழுதி வேறு ஸாமான்களை வரவழைத்து இப்பொருட்காட்சியை இவ்வாறு ஏற்படுத்தியதைப்பற்றி ஸந்தோஷப்படுவதாகவும் மொழிந்தார்.

கேட்டிஸ்ஸின் விரிவுரை.

அப்பால் ப்ரான்ஸிலுள்ள மிகச் சிறப்புற்ற பாரிஸ்நகரத்தை மதஸம்பந்தமான பாரிஸ், இராஜாங்க ஸம்பந்தமான பாரிஸ், கல்வி ஸம்பந்தமான பாரிஸ், மற்றும் அநேக வகையான வகுப்புகள் அடங்கிய பாரிஸ் என்று அந்தந்த காரியங்களுக்குத் தகுந்தவாறு அதன் அமைப்புகளைக் காட்டும் ஸாதனங்களடங்கிய பொருட்காட்சியின் பெருமையையும், மைசூர் பெங்களூர் முதலியவற்றின் முற்கால-தற்கால அமைப்புகளின் ரீதிகளைக் காட்டக்கூடியவையான இவ்விடத்திலேயே நூதனமாய் சேகரிக்கப்பட்ட உபகரணங்களின் மேன்மையையும், முற்காலத்திய நமது சிற்பசாஸ்திர முறைகளை யனுஸரித்து இந்துக்களாலும் மகம்மதியர்களாலும் கட்டப்பெற்ற கல்லறைகளென்ன, அற்புதமான வேலைப்பாடுகளமைந்த வெவ்வேறு வகையான கட்டடங்களென்ன இவற்றில் அநேகம் வெள்ளத்தினால் வீழ்த்தப்பட்டு சீர்குலைந்திருப்பினும் இன்னும் அவற்றால் உயிருடன் விளங்குவது போலவே தோற்றும் காசிமாநகரத்தின் காட்சிகளைக் காட்டும் பல வேறு வகையான சித்திரப்படம் முதலியவற்றின் சீர்மைகளையும் ப்ரொபஸ்ஸர் கெட்டிஸ் அவர்கள் அங்கு வந்திருந்தவர்களுக்கு விளங்கும்படி யெடுத்துக்கூறி அவற்றைக்காட்டியது அனைவரும் மெச்சத்தக்க விஷயமாம்.

பிறகு ப்ரொபஸ்ஸர் அவர்களால், ஸாலிஸ்பரி என்கிற பட்டணம் விஸ்தீர்ணம் முதலியவற்றால் முன்னிருந்ததைப்பார்க்கிலும் பன்மடங்கு அதிகமாய் விருத்தியாயிருப்பதன் பயனாக, அங்கு நடந்தேறும் கைத்தொழில் முதலானவைகளால் அந்நகரத்தின் ஆகாயமும் அங்கு வஸிப்பவரின் ஆரோக்கிய நிலைமையும் சீரழிந்துவிட்டதின் அறிகுறிகளும், சிறிய கிராமங்கள் கிரமமாகப் பட்டணங்களாய் மாறிவரும் மாதிரிகளும் மற்றொரு புறத்தில் அமைக்கப்பட்டிருந்த ஸாதனங்களின் மூலமாய் அறிவிக்கப்பட்டதைப் பார்க்க எமக்கு அளவில்லாத ஆச்சரியமும் ஆனந்தமுமுண்டாயிற்று. அதன் பிறகு இத்தேசத்திலுள்ள பட்டணங்களுள் மிகவும் சிறந்ததென்று ஒருவாறு பிரஸித்திபெற்றிருக்கும் பம்பாய் நகரம்,இப்பொழுது ஒரு தலை முறைக்குள்--1872 முதல் 1915 வரையில்—அளவுக்கு மிஞ்சிய ஜனநெருக்கத்தினாலும், அதிக உன்னதமாகக் கட்டிய மாளிகைகள் மேன்மேலும் அடர்ந்துவிட்டதாலும் சுத்தமான வாயுவும் போதுமான வெளிச்சமும் இல்லாமல் சுகாதாரமுறைக்கு இனி கேடு விளைவிக்கக்கூடியதாயிருக்கிறதென்றும், கல்கத்தா நகரத்தை விசாலப்படுத்துவதற்காக இப்பொழுது அதற்கென்று ஏற்பட்ட கமிட்டியாருடைய உத்தேசத்தின்மேல் நிச்சயிக்கப்பட்டிருக்கும் 5 - லக்ஷம் பவுன் செலவை தம்மைப் போன்ற நிபுணர்கள் ஸம்மதிக்க மாட்டாரென்றும், அப்பட்டணத்தின் வீதிகளையும் சாலைகளையும் அவர்கள் ஆலோசித்திருப்பதைவிட இன்

னும் அதிக விசாலமாகவும் எவ்வளவோ ஒழுங்காகவும் அதே செலவில் அவ்வளவு அதிக சிரமமின்றியே நிர்மித்துவிட தம்மால் ஆகுமென்றும் அநேகவிதமான படங்களைக் கொண்டும் மற்றும் பல வகையான உபகரணங்களைக்கொண்டும் ப்ரொபஸ்ஸர் அவர்கள் எடுத்துக் காட்டியதானது சுகாதார முறைகளிலும், மிதமாகச் செலவுசெய்து அதிக சுகமும் ஸௌகரியமுடையும் வழிகளிலும் ஜனங்களுக்கோர் நூதன உணர்ச்சியைத் தூண்டுவதாயிருந்தது.

இறுதியில் நகரநிர்மாண சிற்பம் எல்லா ஜனங்களுக்கும் பயனளிக்கக் கூடியதென்னும் விஷயத்தை ப்ரொபஸ்ஸர் கெட்டிஸ் விவரித்துக் கூறுகையில், பர்மிங்காம் என்னும் நகரத்தின் அமைப்பையும், அப்பட்டணத்தில் இவ்வித பொருட்காட்சியின் பயனாக ஏற்பட்ட மாறுதல்களையும் திருஷ்டாந்தமாக எடுத்துக் காட்டினார்; இப்பொழுது அந்த நகரம் விசாலமாக ஆய்விட்டபடியால் ஜனங்களின் நெருக்கம் குறைந்துபோய், அங்கு வஸிப்பவர் எல்லோரும் கஷ்டமின்றி வஸித்து வருவதையும், வர்த்தகம் செய்யும் முதலாளிகளெல்லாம் தமது யந்திரசாலைகளை நகரத்திற்கு வெளியே ஸ்தாபித்துக்கொள்ள விருப்பமுள்ளவராயிருப்பதையும் கவனிப்போமாயின், நகரநிர்மாண சிற்பமுறைக்கு மாறாக வீடு வாயில்களைக் கட்டி நகரத்தின் நிலைமையைச் சீர்குலைக்க ஒரு நகரத்தவருக்கும் எண்ணமுண்டாகாதென்பதையும் அவர் குறிப்பிட்டுச் சொல்லி, பர்மிங்காம் நகர ஸம்பந்தமான சில காட்சிப்பொருட்களையும் அங்கிருந்தவர்களுக்கு ஆதரவுடன் காட்டினார்.

அப்பொருட்காட்சியை எல்லா ஜனங்களும் பார்ப்பது மிகவும் அவசியமென்று நாம் உண்மையாகவே அபிப்பிராயப்படவேண்டியிருந்தது. அக்காட்சியானது பார்ப்பதற்கு இன்பமாகவும், அபூர்வமான அற்புத விஷயங்களை அறிவிக்கக்கூடியதாகவும் இருந்ததுடன், பொருட்காட்சியின் ஒவ்வொரு வகுப்பையும் பற்றி ப்ரொபஸ்ஸர் கெட்டிஸ் குறிப்பிட்டு வந்த ஒவ்வோர் அம்சமும் இன்னும் விசேஷமான வேறு விஷயங்களையும்—உதாரணமாக சுகாதார முறைகளைப்பற்றிய இரஹஸ்யங்களையும் விளக்கக்கூடியதாயிருந்தது. வைத்தியம் முதலிய சாஸ்திரங்களைப் பயின்றவருக்கும் மற்ற ஸாதாரண ஜனங்களுக்கும் உபயோகமான அறிவைப் புகட்டி ஒரே மாதிரியாக மனதுக்குத் திருப்தியுண்டாக்கக் கூடிய இப்பொருட்காட்சி எவ்விதத்திலும் அரிதானதென்றே கருதினோம். இம்மாதம் 18-தேதி முதல் 29-தேதி வரையில் ப்ரொபஸ்ஸர் கெட்டிஸ் ஒன்பது பிரஸங்கங்களை வெகு சாதுர்யமாகச் செய்து வந்தார். அவற்றின் ஸாராம்சத்தை நாம் கிரஹித்துக் கொள்வோம். இந்தியாவில் மிஸ்டர் கெட்டிஸ் ஸஞ்சாரம் செய்து வந்ததில், இத்தேசத்தில் அநேகம் பட்டணங்களில் ஜனங்களிடமிருந்து வரி வசூல்செய்வதற்கேற்றவாறு அநேகவிதமான ஏற்பாடுகள் முனிஸிபாலிடிகளால் நடத்தப்படுகின்றனவேயன்றி, அவர்கள் வஸிப்பதற்கு ஸௌகரியங்களையுண்டுபண்ணி, அவர்களுடைய ஜீவனத்தை விருத்திசெய்யும் நோக்கமுடையவைகளாயில்லையென்று அறிய விஸனப்படுவதாகவும், நகரங்களை ஜனங்களுடைய ஸௌகரியங்களுக்கென்றே விருத்திசெய்ய அக்காரியத்தில் நிபுணரான உத்தியோகஸ்தர்களை நியமிக்கவேண்டியது அவசியமென்றும், ப்ரொபஸ்ஸர் கூறியதை நமது தேசத்து முனிஸிபாலிடிகள் நன்றாகக் கவனிக்க வேண்டும்.

தோன்றினவாறெல்லாம் வீதிகளையும் சிறிய சந்துகளையும் விருத்திசெய்து ஜனங்களை அடர்த்தியாக ஓரிடத்தில் வஸிக்கச்செய்வது இத்தேசத்தில் ஒழிந்தபாடில்லை. நகரநிர்மாண முறைகளிலும், கிராமங்களின் அமைப்புகளிலும் உலகத்தில் ஜர்மனியைப்போல் எவ்வகையிலும் சீர்திருத்தம் பெற்ற தேசம் வேறெதுவுமில்லையென்று ப்ரொபஸ்ஸர் குறிப்பிட்டதையும் நாம் கவனிக்கவேண்டும். சுகாதாரமுறைகளுக்கு முற்றிலும் ஏற்றவாறு நகரங்களையும் கிராமங்களையும் அமைத்துக்கொண்டிருப்ப

தாலேயே ஜர்மனியர்கள் அவ்வளவு ஆரோக்கிய திடகாத்திரமும் தைரியமும் புத்திவல்லமையும் பெற்று, உலகத்தோர் யாவரும் ஒருவாறு நடுங்கும்படி இவ்வித மஹாபயங்கரமான யுத்தத்தை ஒரு பொருட்டாகவும் கருதாமல் நடத்திவருகின்றனர்.

இப்பொழுது பட்டணங்களில் கிணறுகளையும் குளங்களையும் திடீரென்று முனிவிபாலிடியார் மூடிவிடும் வழக்கத்தை கண்டித்துப் பேசியதையும் நாம் குறிப்பிடாமலிருக்கமுடியவில்லை. நகரத்தில் வசிக்கும் ஜனங்களுக்கு இடைவிடாமல் போதுமான ஜலத்தை ஸப்ளை செய்ய வித்தமாயிராத வரையில், குளம் கிணறுகளை மூடிவிடுவது முற்றிலும் யுக்தமல்லவென்றும், கிணறுகளைச் சுற்றிலும் சிறிது தூரம் சுண்ணப்பூச்சிட்டு கற்கட்டம் கட்டி வெளியிலிருந்து கிணற்றில் கழிவடைஜலம் புகாவண்ணம் கவனிக்கச்செய்ய வேண்டுமென்றும், கோயில் முதலியவைகளின் ஸமீபத்தில் நிர்மிக்கப்பட்டுள்ள அழகான பண்டைக்காலத்திய குளம் முதலியவற்றை மூடிவிடுவதைவிட மீன்களையும் வாத்துக்களையும் மற்றும் ஔஷதச்சரக்குகளையும் கொண்டு அவற்றின் ஜலத்தைச் சுத்தமாக்குவதற்கு ஹெல்தாபீஸர்கள் உபாயம் தேடவேண்டியது கடமையென்றும் செய்த பிரஸங்கங்கள் மிகவும் பாராட்டத்தக்கவை.

இவ்விதமான பொருட்காட்சியை இவ்விடத்தில் ஏற்படுத்தியதற்கும், நகரநிர்மாண ரீதிகளையும், அவற்றின் சுகாதாரமுறைகளை மேன்மேலும் சீர்திருத்த வெண்டிய வழிகளையும் வெகு ஸாமர்த்தியமாகவும் அழகாகவும் அநேக விதமான திருஷ்டாந்தங்களைக்கொண்டு எடுத்துக்காட்டி உபயோகமான உபந்யாஸங்களைச் செய்ததற்கும் இம்மாகாணத்து ஜனங்கள் ப்ரொபஸ்ஸர் கெட்டிஸ் அவர்களுக்கு நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்களென்பதில் ஸந்தேஹமில்லை.

HOW TO AVOID THE COMMON COLD*

ஜலதோஷத்தைத் தடுப்பதெப்படி.

அமெரிக்காவைச் சேர்ந்த நியூயார்க் என்னும் நகரத்தில் டாக்டர் ஜான் ஹார்பெர், A. M., M. D. என்பவர் இவ்விஷயத்தைப்பற்றிச் சிறந்ததோர் பிரஸங்கம் செய்தார். அது பின்வருமாறு:—

ஜலதோஷத்தை உபேக்ஷித்தால், அது கிரமமாக பிற்காலத்தில் மிகவும் உக்கிரமான வியாதிகளுக்குக் காரணமாகும். பொதுவில் ஜலதோஷத்தினால் கஷ்டப்படுபவரை நன்கு கவனித்துவந்தால், அதனாலுண்டாகும் சில அபாயகரமான தீங்குகளைக் கண்டு அப்பால் ஸாதாரணமாய் அதை எளியவிகாரமென்று ஒருவரும் சொல்லத் துணியார். முதலாவது, ஜலதோஷத்தினால் வாஸனையறியும் சக்தியும் தாராளமாக நாசியால் மூச்சுவிடும் தன்மையும் குறைந்துவிடுகின்றது; இதனால் பலஹீனமும் மேன்மேலுமுண்டாகும்; நாசியினுள்ளும், ச்வாஸாசயங்களினுள்ளும் அமைந்திருக்கிற மெல்லிய ச்லேஷ்மஜவ்வுகளின் சக்தியும் குறைந்துவிடும்; ஆகவே சரீரத்திற்குள் பிணியுண்டாக்கக்கூடிய ஸூக்ஷ்ம ஜீவன்கள் பிரவேசிக்காமலிருக்கவும், அப்படி பிரவேசித்தால் அவற்றுடன் போராடி அவைகளை அழிப்பதற்கும் அவசியமான சரீரபலமும், ச்வாஸாசயம் முதலியவற்றிலுள்ள ச்லேஷ்மஜவ்வு முதலியவற்றின் இயற்கை நிலைமையும் சீரழிந்துபடுவதால், ஜலதோஷமானது வேறு பல ரோகங்களுண்டாவதற்கேற்றவாறு சரீரத்தை வசப்படுத்தும் காரணமாக் (Predisposing cause) ஏற்படுகின்றது. அவ்வாறுண்டாகும் வியாதிகளுள் பிரதானமானவை கபஜ்வரம் (Pneumonia), க்ஷயம் (Consumption) என்கிற இவ்விரண்டேயாம்.

கபஜ்வரம் (Pneumonia) என்பதை அபிந்யாஸ ஜ்வரமென்றும் கூறுவர். க்ஷயரோகம் மாதிரியாகவே அபாயகரமான வியாதி; மேலும் சீக்கிரத்தில் பிராணபாயமுண்டாக்கக்கூடியதா யிருப்பதால், க்ஷயத்தினும் சில விஷயத்தில் இதையே கொடிய வியாதியென்றும் சொல்லவேண்டும். காலவேற்றுமைகளால் திடீரென்றுண்டாகும் சீதோஷ்ண நிலைமைகளின் மாறுபாட்டால் அபிந்யாஸ ஜ்வரம் அடிக்கடி ஜனங்களை மிகுதியாக பாதிப்பதுண்டு; ஆனால் நீடித்த குளிர்காலமானது அவ்வளவு அதிகமாக அபிந்யாஸ ஜ்வரத்தைப் பரவச்செய்வதாய் விளங்கவில்லை. உதாரணமாக, பூமியின் உத்தரத்ருவத்திற்குச் சென்று ஆராய்ச்சி

*'ஹெரால்ட் ஆப் கோல்டன் ஏஜ்' என்கிற பத்திரிகையிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டது.

கள்செய்துவருபவருக்குஇந்த ஜ்வரமுண்டாவதில்லை; அதாவது த்ருவத்திலாவது, த்ருவத்திற்கு ஸமீப பிரதேசங்களிலாவது இவ்வியாதி உற்பத்தியாவதேயில்லை. ஒருகால் உண்டானாலும், கடுங்குளிர்ச்சி பொருந்திய அந்த த்ருவத்தை விட்டு வெளி தேசங்களில் வந்து பல நாட்கள் சென்ற பிறகு அவர்களுக்கு இவ்வியாதியுண்டாகலாமே யன்றி அதற்குமுன் உண்டாவதில்லை. காலம் உஷ்ணமாகவும் சீதளமாகவும் அடிக்கடி மாறுவதாலும், அநேக விதமான நுண்ணுயிர்கள் கலந்த தும்புகளை வாரி யிரைக்கும் வாடைகாலங்களாலும் ஸாதாரண ஜலதோஷ முண்டாவதற்கான முகாந்தரங்கள் ஏற்பட்டுவிடுகின்றன; இந்த முகாந்திரங்களே சில ஸமயம் கபஜ்வரம் அல்லது அபிசியாஸ ஜ்வரத்திற்கும் ஆதாராமாகின்றன.

நாகரீகத்தினாலேற்படும் கேடு.

ஜலதோஷமானது நாகரிகமாக ஜீவனம் செய்யும் ஜனங்களிடமே விசேஷமாய்ப் பரவிவருகின்றது. மனித ஸந்ததி எவ்வளவு காலம் வரையிலும் வீடுகள் கட்டிக்கொள்ளவும், உடைகள் உடுக்கவும் அறியாமலிருந்ததோ, அதுவரையிலும் அந்த ஸந்ததிக்கு ஜலதோஷம்மட்டுமேயல்ல, பீநஸக்காரன் பேசுவது போல் மூக்கின் கோளாறுகளால் முணுமுணுத்துப் பேசுந் தன்மையு முண்டானதில்லை. அடுத்தபடி வீடுகளில் குளிர் தாக்காமல் அவற்றை வெப்பமாக வைத்துக்கொண்டதே. இவ்வித வியாதிகள் விருத்தியாவதற்குக் காரணமாயேற்பட்டது; மனிதர் தமது சரீரத்தை இதர பூதங்கள் அல்லது பொருட்கள் தாக்கியபோதிலும் அதற்குக் கெடுதியுண்டாகாவண்ணம் தமது சரீரத்திற்கு இயற்கையா யமைந்திருந்த ஆரோக்கியத் தன்மையையும், உத்ஸாஹத்தையும், மற்றுமுள்ள மேன்மைகளையும் வீணில் கெடுத்துக்கொள்வதற்கே ஜனநெருக்கத்தினால் மிகவும் வெப்பமான வீடுகளில் வஸிக்கலாயினர்; அதுமுதலாகவே கிரமமாய் இவர்களுக்கு ஜலதோஷமுண்டாவது வழக்கமாய்விட்டது.

கடவுளால் படைக்கப்பட்டு கடவுளுக்கு ஸொந்தமாயுள்ள இப்பூமியின் மேற்புறமடங்கலும் சுத்தமான வாயு ஆரோக்கியத்திற்கு ஆதாரமாய் வியாபித்திருக்கின்றது; ஆனால் மனிதரால் நிர்மிக்கப்பட்டு மனிதருக்கு ஸொந்தமான வீடுகளில் மட்டும் சுத்த ஆகாயம் அரிதாய்விட்டதென்பதில் ஸந்தேஹமில்லை. சுத்தமான வாயு ஜனங்கள்மேல் தாராளமாய் வீசாமற்போய் விடுவது மாத்திரமல்ல, அவ்வாயு இல்லாமையே அநேகம் வியாதிகளுற்பத்தி யாவதற்கும் காரணமாகின்றது. சுத்த வாயுவும், சூரிய வெளிச்சமும் ஒன்று சேர்ந்து, வியாதிக்குக் காரணமான நுண்ணுயிர்களை அழித்து ஆகாயத்தையும் பூமியையும் சுத்தமாகச் செய்யும்; இவற்றினும் சிறந்த கிருமிஹரபதார்த்தங்கள் (disinfectan's) வேறெவையும் இதுகாறும் கண்டுபிடிக்கப்படவில்லை. வீட்டின் உட்புறங்களிலுள்ள வாயுவானது ஜனங்களால் மேன்மேலும் ச்வஸிக்கப்பட்டு விஷத்தன்மை யுறுகின்றது; ஆகவே வீடுகளில் அடைந்துள்ள வாயு அசுத்தமாகவும், அதிக வெப்பமுள்ளதாகவும் ஆய்விடுகின்றது; எப்பொழுதுமே வீட்டுக்கு வெளிப்புறங்களில் வஸிப்பவர் குளிர்ந்து நிர்மலமாயுள்ள வாயுவை ச்வஸித்து வருவராதலால், அவர்களுக்கு வீடுகளிலடைந்துள்ள வெப்பமான வாயுவைப்போல் அக்குளிர்ந்த வாயு ஜலதோஷமுண்டாக்குவதில்லை.

வெளிவிட்ட வாயுவை மீண்டும் ச்வஸித்தல்.

வியாதிக்காதாரமாயுள்ள விஷங்களை வெளியிடுபவையான இதர பிராணிகளுடன் ஜனங்கள் தமது பரிவாரஸஹிதமாய் வீடுகளில் வஸித்துவருங்கால், எப்பொழுதும் ஒருவர் வெளிவிட்ட மூச்சுக்காற்றை மற்றவரும் ச்வஸிக்க நேரிடுகின்றது. பிராணிகள் வெளிவிடும் மூச்சுக்காற்று விஷகுணமுள்ளதென்று அனைவரும் அறிந்த விஷயமே. அவ்விதம் அதிக அசுத்த வாயுவை உட்கொண்டு வருவதால், மூக்கிலிருந்து கபம் முதலியது கசியத் தொடங்கி, காஸமும் உற்பத்தியாய், இவற்றால் நாசியினுடையவும் ச்வாஸாசயங்களுடையவும் உட்புறங்கள், நுண்ணுயிர்களாகும் வித்துகள் விதைப்பதற்கு ஏற்றவையாய் விடுகின்றன.

இரவுகளில் வீடுகளுக்குள் தூங்கும்பொழுது ச்வஸிக்கப்படும் துர்க்கந்தமுள்ளதும் அசுத்தமுமான வாயுவையும் கவனிக்கவேண்டும்; படுக்கை யறைகளைக் காற்றுப் புகாதபடி அடைத்துவிட்டு அவற்றில் படுத்துறங்குவது ஸஹஜம். இரவுகளில் இங்ஙனம் அசுத்தமான ஆகாயத்தையே ஜனங்கள் உட்கொள்வராயின், நாம் வேண்டியவளவு ச்வஸிப்பதற்கென்றே கடவுளால் படைக்கப்பட்டுள்ள ஏராளமான சுத்தவாயுவை உபயோகிப்பவர் யாவர்? அதன் பயனென்ன?

ஜனங்கள் மேன்மேலும் தாமே உடைகளைத் தரித்து, இராத சுமைகளையும் கஷ்டங்களையும் வலியவே தாங்கவேண்டிவந்தது; வீடுகளில் வஸிப்பவரைச் சுற்றிலும் வளரக்கூடியவையான எண்ணிறந்த நுண்ணுயிர்கள் இவ்வுடைகளில் ஏராளமாய்ப் புகுந்து விருத்தியாகின்றன. ஜனங்கள் வெளிவிடும் மூச்சுக்காற்றாலும், வியர்வையாலும், மற்றும் பலவகையாலும் அதிக வெப்பங்கொண்டு தடித்துப்போன வாயுவை உறிஞ்சுறிஞ்சு ஜலதோஷத்தைப் பெற்று சரீரம் அதன் செயல்களைச் செய்வதற்கான ஸமநிலைமையும் (epuili-briuin) சிதைந்துவிடுகின்றது. (தொடரும்).

BOOK REVIEWS.
புஸ்தக விமர்சம்.

ஆறுவது ஆயுர்வேத கான்பரேன்ஸின் ஸபாத்யக்ஷரின் பேச்சு.

இந்த மாதம் 9-ம் தேதி கல்கத்தாவில் ஆயுர்வேத கான்பரென்ஸ் ஆருவது முறை கூடிற்றென்று நமது நேயர்களுக்குத்தெரிந்த விஷயம். அதற்கு ஆயுர்வேத மார்த்தாண்ட பண்டிட் லக்ஷ்மீராமஸ்வாமி, வைத்தியரத்ன என்கிற ஆயுர்வேத வித்வான் அக்ராஸனுதிபதியாக வீற்றிருந்து வெகு விரிவான பிரஸங்கத்தை எழுதிப் படித்தார். அப்பிரஸங்கத்தை முற்றிலும் அவ்வாறே ஸம்ஸ்கிருதத்தில் அச்சிட்டு ஆயுர்வேத மஹாமண்டல ஸபையார் புஸ்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள். நமக்கு ஆயுர்வேத ஸபையார் அனுப்பிய அப்புஸ்தகத்தைப் படித்துப் பார்த்ததில், ஆயுர்வேதத்தின் ஸாராம்சங்களேயும், அதன் மேன்மையையும், அதற்கு காலக்கிரமத்தில் ஸம்பவித்த ஹீன ஸ்திதியையும், அதை அபிவ்ருத்தி செய்யவேண்டியதற்கான சில வழிகளேயும் கூடுமானவரையில் நன்ருகவே வெளியிட்டிருக்கிறார் என்று அறிகிறோம். இப்புஸ்தகம் 70-பக்கங்களுக்குமேல் அச்சிடப்பட்டிருக்கிறதென்ருல், பிரஸங்கம் எவ்வளவு விஸ்தாரமானதோ அதை நேயர்களே ஆலோசித்துக்கொள்ளலாம். இப்புஸ்தகத்திலடங்கியுள்ள பிரஸங்கத்தின் ஸாராம்சங்களே அடுத்த ஸஞ்சிகையில் சுருக்கமாக வரைந்து வெளிப்படுத்துவோம். இதை ஆயுர்வேத வைத்தியர்கள் படித்தால், நமது தேசத்தில் ஆயுர்வேதத்தின் நிலைமை எத்தகையதா யிருக்கிறதென்று ஒருவாறு உணரக்கூடுமென்று எண்ணுகிறோம்.

DRUGS AND MEDICINES.
ஔஷதச் சரக்குகளும் ஔஷதங்களும்.

கஸகஸாவின் தோல்.

இது ஸம்ஸ்கிருதத்தில் அஹிபேநத்வக் என்று சொல்லப்படும். ஆங்கிலத்தில் ஒபியம் பாப்பி அல்லது பாப்பி காப்ஸ்யூல்ஸ் (opium poppy or poppy capsules) என்று வழங்கப்படும். இது இப்பெயர் கொண்ட செடியிலிருந்து வருஷாவருஷம் உற்பத்தியாகும் காயை உடைத்து அதினின்றும் எடுக்கப்படுகிறது. இதன் காயை போஸ்தக்காய் என்றும் கூறுவார்கள். இதன் பூவும் விதைகளும் வெண்மையாயிருக்கும். இச் செடியானது இந்தியாவில் விசேஷமாய்ப் பயிராகின்றது. இதிலிருந்து கசியும் பால் நன்ருக உறைவதால் அபினி உண்டாகின்றது.

கஸகஸாத்தோலேச் சிதைத்து ஜலத்தில் போட்டுக் காய்ச்சி அநேகம் காரணங்களால் உண்டாகும் வீக்கங்களுக்கும், எரிப்புண்களுக்கும், சுளுக்குகளுக்கும், மற்றும் வேதனையைத் தரும் நோய்களுக்கும் ஒற்றடம் கொடுப்பது மிகவும் ஹிதமாயிருக்கும்; அல்லது கல்கம்போல ஜலம்விட்டு இதை அரைத்து வதக்கி வஸ்திரத்திற் கட்டியும் மேற்கூறிய நோய்களில் ஒற்றடங் கொடுப்பதுண்டு. இதற்கு சூலப்ரசமனம், தாஹப்ரசமனம் (Sedative and Anodyne) என்கிற குணங்களுண்டு.

பேரிச்சங்காய் அல்லது கனி.

பேரீச்சமரம் ஸிந்துதேசம் முதலியவிடங்களில் பயிராக்கப்படுவதுண்டு, தானுகவும் வளர்வதுண்டு. சதை பெருத்து இனிமையாயிருக்கும் இதன் பழத்திற்கு ஸ்நிக்த்தம் (தேஹவறட்சியைப் போக்கி பசையுள்ளதாகச் செய்யும் தன்மை-Demulcent), லேகநம் (கபத்தைக் கல்லி வெளிப்படுத்தல்-Expectorant), ஸ்ரம்ஸநம் (மலத்தை சிறிது இளகலாகச் செய்து வெளிப்படுத்தல்-Laxative), தர்ப்பணம் (போஷிக்கும் தன்மை-Nutrient), வ்ருஷ்யம் (தாது புஷ்டியென்று ஸாதாரணமாய் வழங்கப்படும் குணம்-Aphrodisiac) என்கிற இக்குணங்களேயுடையது. இக்கனியை இருமல், ச்வாஸரோகம், இன்னும் வேறு விதமான தொண்டை அல்லது மார்பைப்பற்றிய வியாதிகள் இவற்றிலும், ஸாதாரணமான ஜ்வரத்திலும், சுக்லமேஹ மென்னும் (Gonorrhoea) ரோகத்திலும் உபயோகிக்க இது தகுந்த ஔஷதமாகவே கருதப்படுகிறது. நேத்திர ரோகங்களில்—முக்கியமாய் கருவிழியில் உண்டாகும் மங்கலான தோஷத்தில்—இப்பழத்தின் விதையை நன்கு கல்கம்போல் ஜலம் சேர்த்து அரைத்து கண்களின் இறப்பைகளின்மேல் பற்றுப் போடுவதும் நலம். இந்த மரத்திலுண்டாகும் ஒரு விதமான பிசினனது அதிஸார ரோகத்திலும், மூத்திரமார்க்கம் கருப்பை முதலிய அவயவங்களேப் பற்றிய வியாதிகளிலும் உபயோகிக்கப்படுமானுல் மிகவும் நற்பயனுண்டாக்குமென்று அறிகிறோம்.

சோம்புத் தைலம்.

" தலையில் பேன் பிடித்தலைத் தடுப்பதற்கு அல்லது போக்குவதற்கு ஏற்ற பரிஹாரங்களைப்பற்றி அநேக விதமான வியாஸங்கள் வெளிவந்ததில் டாக்டர் எட்வெர்ட் G. ஹட்டரெர் என்கிறவர் அதற்கு சோம்புத் தைலம் (Oleum anise) மிகச் சிறந்த ஔஷதமென்று சிலாகித்து எழுதியிருக்கிறார். 'இத்தைலத்தில் சிறிதளவு எடுத்து மயிர்களில் தேய்த்தவுடனே அதுவே அவற்றில் நன்றாகப் பற்றிக்கொண்டு பேன்களை அழிக்கவல்லது ; என்றாலும் முறைப்படி இத்தைலத்தை சிறிது விளாவி உபயோகிப்பதே நலம் ; இல்லாவிட்டால் மண்டையில் அது ஒருவாறு அழற்சியைத் தரும். இதை மயிர்களில் தேய்ப்பதால் பேன்களும் ஈர்களும் அடியோடு அழிந்துவிடும்' என்றும் அவர் திடமாகக் கூறுகிறார்." இவ்வாறு க்ளினிகல் மெடிஸின் (Clinical Medicine) என்கிற பத்திரிகை வரைகின்றது. வைத்திய கலாசித்தியைப் படிப்பவர் சோம்புத் தைலத்தை தலையில் பேன் பிடித்தவருக்கு உபயோகித்து, இதன் உண்மையை இப்பத்திரிகையின் வாயிலாக வெளிப்படுத்துவது அநேகர் விரும்பத்தக்க விஷயம்.

தேனும் தேயிலையும்.

தேன் சிறந்த ஔஷதகுணமுள்ள பதார்த்தம் ; மேலும் அது தேஹத்தையும் போஷிக்கும் ; கொழுப்பையும் விருத்திசெய்யும் ; நரம்புகளைக் குளிரச்செய்து இன்பந்தரும் ; இவ்வித குணங்களால் அநேகம் வியாதிகளில் இதன் உபயோகம் மிகவும் உயர்ந்ததாயிருக்கின்றது. ஆகவே மிஸ்டர் ஆர்ச்சிபர்லட் என்பவர் தான் எழுதிய "தேனும் ஆரோக்கியமும்" (Honey and Health) என்கிற சிறு புஸ்தகத்தில் இதைப்பற்றி எழுதியிருப்பதின் ஸாராம்சமாவது:— தேன் இயற்கையான சர்க்கரையே யாகும். தேனை தேயிலைப்பானகத்துடன் உட்கொண்டால் அஜீர்ணம் சாந்தமாகும் ; இவ்விரண்டையும் கலந்து சாப்பாட்டுக்கு ஒருமணி நேரம் முன்பாகவே பருகினால் எவ்விதமான அஜீர்ணமும் நிவ்ருத்தியாகும். ஸாதாரணமாக ஒரு கோப்பைத் தேயிலைப்பானகத்திற்கு $\frac{1}{2}$ அவுன்ஸ் தேன் சேர்த்து சூடுமானவரையில் சுடச்சுடவே பருகவேண்டும். தினத்திற்கு மூன்று வேளை ஆஹாரத்திற்கு ஒருமணி நேரம் முன்பாக இவ்விதம் உபயோகித்து வரவேண்டும். அநேக வகையான ஜலதோஷங்கள், பலவிதமான இருமல்கள், வாய்ப்புண், தொண்டைப்புண்கள் இவைகளும் ஸ்வஸ்தமாகுமென்று மிஸ்டர் ஹோப் என்பவரும் கூறுகிறார்.— Health Record.

[தேன் அநேகம் வியாதிகளைப் போக்குமென்றும், ஆகவே அதை சூர்ணங்கள், பஸ்மங்கள், மாத்திரைகள் முதலியவற்றிற்கு அனுபானமானமாய் உபயோகிப்பது நலமென்றும் ஆயுர்வேத நூல்கள் முறையிடுகின்றன ; ஆயுர்வேத வைத்தியர்களுக்கு இது புதிதல்லவாகிலும், மேனாட்டு வைத்தியர் இப்பொழுதே இவ்விதமான ஔஷதச்சரக்குகளின் மேன்மையை அறிந்து உபயோகிக்கத் தொடங்குகின்றனர். ஆயுர்வேத வைத்தியர்கள் இவ்விஷயத்தை வெகு நாட்களாக அறிந்து உபயோகித்து வந்தாலும் மேனாட்டாராலும் தற்காலம் இது மேலான மதிப்பைப் பெறுகின்றது. என்பது ஒரு விசேஷம். ப-ர்.]

வெறிநாய்க் கடிக்கு ஔஷதம்.

பொடாஷியம் ஐயோடைட் (Iodide of potassium) என்கிற ஔஷதம் வெறிநாயால் கடியுண்டவருக்கு அவசியமாகக் கொடுக்கக்கூடிய முக்கிய ஔஷதம் என்று வைத்தியர்களின் நவீனமான கொள்கை. இதைக் கொடுத்து சிகித்ஸை செய்யப்பட்டவர்களின் கணக்குகளைக் கவனித்ததில் இவ்வௌஷதம் வெறிநாயின் விஷத்தை வெகு நன்றாக அகற்றிவிடுகிறதென்று அறியப்பட்டது. இதை 5 முதல் 10 கிரைன் வரையில் உட்கொள்ளக் கொடுக்கலாம்.

NOTES AND ITEMS OF INTEREST.

பலவகைக் குறிப்புகள்.

ப்ளேக்கும் இனாகுலேஷனும்.

மத்திய மாகாணங்களிலிருந்து ஜ்யூ இந்தியா பத்திரிகைக்கு ஒரு நிருபர் இனாகுலேஷனைப்பற்றி ஒரு குறிப்பு அனுப்பியிருப்பதாக (1 - 2 - 15) விஷயமொன்று பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. ப்ளேக் நோய் பரவும் இடங்களில் ஜனங்களுக்கு இனாகுலேஷன் செய்வது இப்பொழுது வழக்கமென்று பெரும்பான்மையோர் அறிந்த விஷயம். இனாகுலேஷன் பண்ணிக்கொண்டவருக்கு ப்ளேக் நோய் சரீரத்தில் பற்றுவதில்லையென்று தற்காலத்திய சில சாஸ்திரவல்லோருடைய கொள்கை. ஆனால் நாகப்பூரில் ப்ளேக் நோயைத் தடுப்பதற்காக ஜனங்களுக்கு இனாகுலேஷன் செய்யப்பட்டதில் ப்ளேக்நோய் மிகவும் அதிகரித்து அதனால் மரணவிகிதம் அதிகமாய்விட்டதாம். ஆரோக்கிய நிலைமையிலுள்ள மனிதர்களின் தேஹத்தில் வியாதிக்குக் காரணமான விஷப்பொருளைத் தரும் வஸ்துக்களை என் குத்திச் செலுத்தவேண்டும்? மஸூரிகை யென்னும் பெரியம்மையைத் தடுப்பதற்கு இப்பொழுது செய்யப்பட்டுவரும் அம்மைக் குத்துவதையே மேனாட்டிலேயே அநேகம் சாஸ்திரவல்லோர் கண்டித்து வரும்போது இயற்கைக்கு மாறாக சரீரத்தில் இவ்வித ஔஷதப்ரயோகம் அவசியமில்லையென்று நாம் சொல்வோம்.

ஸந்நிபாத ஜ்வரமும் இனகுலேஷனும்.

மிஸ்டர் J. S. மிர்ஸான் என்பவர் "பாம்பே க்ரானிகல்" என்கிற பத்திரிகைக்கு எழுதுவதாவது:—ஸர் ப்ரெடரிக் ட்ரெவிஸ் என்பவர் 'ஸொஸைடி ஆப் ஆர்ட்ஸ்' என்கிற ஸங்கத்திற்காகச் செய்த பிரஸங்கத்தில் இனகுலேஷன் செய்வதனாலுண்டாகும் பயன் "உண்மையில் இப்பொழுது ஆச்சரியப்படக்கூடியதாயிருக்கின்றது" என்று கூறினர். அவ்வாச்சரியம் எவ்விதமானதெனில்—லண்டன் நகரத்து 3-வது ரிஸெர்வுப்படைக்கு தேஹப்பயிற்சியைச் செய்விக்கும் ஹெர்பெர்ட் சிக்கால்ஸ் என்பவன் நன்றாக வளர்ந்து திடமும் ஆரோக்கியமும் பெற்ற சரீரத்தோற்றமுடையவனாயிருந்தான்; அவன் புதிதாய்ச் சேர்ந்த ஸோல்ஜர்களுக்கு ஸந்நிபாதஜ்வரம் (typhoid) வராமல் தடுக்க இனகுலேஷன் செய்யவேண்டி வந்தது; ஆனால் அவன் தனக்கு இனகுலேஷன் செய்து கொண்டவனல்ல; ஆகவே அவன் முதலில் 'ஆண்டி டைபாய்ட் வாக்ஸின்' என்கிற பதார்த்தத்தைக்கொண்டு இனகுலேஷன் செய்து கொள்ளவேண்டியது அவசியமென்று உத்தரவிடப்பட்டான். பிறகு இவ்வித இனகுலேஷன் தீங்குவிளைவிக்குமென்பதற்கு திருஷ்டாந்தமாக அவன் இரண்டு நாள் தீவ்ரமான வியாதியினால் பீடிக்கப்பட்டு இறந்து போய்விட்டான். இவனுடைய மரணத்திற்கு "Anty typhoid vaccination" என்கிற ஔஷதத்தை உடலிற்குத்திச் செலுத்தியதேயாகுமென்று டாக்டர் ஹென்றி J. ஸ்வோரன், M. D. என்பவர் நிர்த்தாரணம் செய்தார். இறந்துபோன சிக்கால்ஸ் என்பவனுடைய ஒரு பெண்சாதியும் மூன்று குழந்தைகளும் கதியற்றுப்போயினர். இவ்விதம் இனகுலேஷன் என்னும்—ஔஷதங்களை உடலிற்குத்திச் செலுத்தும் வேலையானது அபாயகரமானதென்று தெரிந்தும், இவ்வாறு ஒரு கேஸ் இவ்வபாயத்திற்கு ஆளாயிற்றென்று அறிந்திருந்தும் ஸர் ப்ரெடரிக் தமது பிரஸங்கத்தில் அவ்விஷயத்தைக்குறிப்பிடாமல் விட்டுவிட்டார். ஆக்ஸ்போர்ட் யூனிவர்ஸிடியில் ஔஷதப்ரயோகங்களைக்கற்பிக்கும் ப்ரொபஸ்ஸராயிருக்கும் ஸர் வில்லியம் ஒஸ்லெர் என்பவர் ஸேனையிற் சேருபவருக்கு இனகுலேஷன் செய்வதில் தீங்கில்லையென்று பஹிரங்கமாகக் கூறினர்; ஆனால் பிறகு, இனகுலேஷன் உண்மையில் அனுகூலமான பலனைக் கொடுப்பதில்லையென்றும், ஆகவே அவர் முன்னால் கூறிய அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ளவேண்டியது அவசியமென்றும் "ப்ரிடிஷ் மெடிகல் ஜர்னலில்" சென்ற நவம்பர் மாஸம் 28-ம் தேதி பிரசுரிக்கப்பட்டது.

அகில பாரத ஆயுர்வேத கான்பரேன்ஸ்.

இந்த கான்பரென்ஸின் ஆறுவது வருஷத்திய கூட்டம் இந்த ஜனவரி மாஸம் 9 தேதி முதல் 12-தேதி வரையில் 4 நாட்கள் கல்கத்தாவில் நடந்தேறியது. அதற்கு ஆயுர்வேத மார்த்தாண்ட பண்டிட் லக்ஷ்மீ ராமஸ்வாமி, வைத்யரத்ன என்கிற மஹான் ஸபாத்யக்ஷராக வீற்றிருந்தார். இவர் ஜெயப்பூர் மஹாராஜா காலேஜில் ஆயுர்வேதம் கற்பிக்கும் ப்ரொபஸ்ஸராயிருப்பவர்; வடதேசத்தில் இவர் பிரஸித்திபெற்ற ஆயுர்வேத வைத்தியர். இந்த வருஷத்து ஸபையில் நடந்தேறிய விஷயங்களை அடுத்த ஸஞ்சிகையில் விவரித்துக் கூறுவோம். இந்த மஹாஸபையானது அடுத்த வருஷம் இச்சென்னையில் கூடப்போகிறது என்று நாம் குறிப்பிட மிகவும் ஸந்தோஷப்படுகிறோம். இதுவரையில் சென்னை மாகாணம் ஆயுர்வேத ஸம்பந்தமான பெரிய கான்பரென்ஸ் ஒன்று உண்டென்றே அறிந்ததல்ல. இதை இச்சென்னையில் சிறப்பாகவும் நற்பயன் விளையுமாறும் நடத்துவதற்கு இம்மாகாணத்திலுள்ள வைத்தியர்கள் உத்ஸாஹத்துடன் முன் வந்து உதவிபுரிவார்களென்று நம்பியிருக்கிறோம்.

அல்யூமினியப் பாத்திரங்கள்.

க்ளாஸ்கோ யூனிவர்ஸிடியைச் சேர்ந்த ப்ரொபஸ்ஸர் ஜான் க்ளெஸ்டர் என்பவர் வரிசையாக அநேக விதமான ஆராய்ச்சிகள்செய்துவந்ததில் அல்யூமினியப் பாத்திரங்களைப்பற்றி அடியில் வருமாறு தமது அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். ஆரெஞ்சு என்னும் கிச்சிலிப்பழரஸம், எலுமிச்சம்பழரஸம், மணத்தக்காளிப்பழம் முதலிய இன்னும் இரண்டொரு பதார்த்தங்களை அல்யூமினியப்பாத்திரங்களில் வைத்திருப்பதால் சிறிது கெட்டுப்போகக்கூடியவை; என்றால் இவற்றின் சேர்க்கையால் அல்யூமினியம் கரைந்து களிம்பேறுவதுண்டு. ஆனால் அல்யூமினியம் கரைந்திருப்பதாகவும் அறியமுடியாதபடி அவ்வளவு சொற்பந்தான் கரையும்; அதனால் மனித சரீரத்திற்கு யாதொரு கெடுதியுமில்லை. அதைப் பரிசோதித்துப் பார்த்ததில் தெரிந்துகொண்ட வாஸ்தவாம்சம் என்னவென்றால்—அல்யூமினியமானது விஷகுணமற்றதான வஸ்து; மிக எளிதில் சுத்தம் செய்யக்கூடியது; இதில் வெகு சீக்கிரத்தில் சூடு ஏறுமாகையால் சமையலும் சீக்கிரமாகும்; வெள்ளியைப்போல் கந்தகம் பட்டால் கருப்பாக ஆகாது; ஆகையால் சமையற்பாத்திரங்கள் செய்வதற்கு அல்யூமினியமே முதல் தரமான லோஹமாகும்:—Life and Health.

குழந்தைகளுக்குக் கொடுக்கக்கூடிய கொழுப்பு.

பாலில் இயற்கையாகச் சேர்ந்துள்ள ஆடையென்னும் (Cream) வஸ்துவே குழந்தைகளுக்கு ஏற்றதான கொழுப்புள்ள உணவு; பாலில் இவ்வித கொழுப்பு நுண்ணிய அணுக்களாகக் கலந்திருப்பதால் குழந்தைகளின் குடலில் வெகு ஸுலபமாக ஜீர்ணமாய் விடுகிறது. குழந்தைகளும் ஆவலுடன் இதை உட்கொள்ளும். காட்லிவர் ஆயில் என்னும் மீனெண்ணெயும், வெண்ணெயும் குழந்தைகளுக்கு ஆதியிலிருந்தே கொடுக்கப்பட்டு வந்தால் அவற்றை ஜீர்ணம் பண்ணிக் கொள்ளும் சக்தி காலக்ரமத்தில் இயல்பாய் விடுகிறது:—Health and Happiness.

எழிலம்பாலை, அதிவிடயம், கொன்றை, கடுகரோஹிணீ, வட்டத்திருப்பி, கோரைக் கிழங்கு, வெட்டிவேர், த்ரிபலை, பர்ப்பாடகம், பேய்ப்புடல், வேம்பு, மஞ்

மஹாதிக்தக க்ருதம். ஜிஷ்டை, திப்பிலி, அல்லிக்கிழங்கு, கிச்சிலிக்கிழங்கு, சந்தனம், காஞ் சொறி, தும்மட்டி, பேய்த்தும்மட்டி, மஞ்சள், மரமஞ்சள், சீந்தில், நாட்டு நன்னாரி, சீமைநன்னாரி, மருளங்கிழங்கு, ஆடாதோடை, தண்ணீர் முட்டாங்கிழங்கு, கழற்சிக்காய், வாலுளுவை, அதிமதுரம், நிலவேம்பு இவை ஒவ்வொன்றும் கால்பலமெடை, நெய் இவையனைத்தினும் நாலுபங்கு, நெல்லிக்கனியின் ஸ்வரஸம் நெய்யைக்காட்டிலும் இரண்டு மடங்கு, ஜலம் எட்டு பங்கு; இவ்விதமாக மேற்படி வஸ்துக்களைச் சேர்த்து க்ருதம் பக்குவம் செய்யவேண்டும். இதை வாதரக்தம், குஷ்டம், இரக்தபித்தம், இரக்தார்சஸ், பாண்டு ரோகம், இருதயரோகம், குன்மம், விஸர்ப்பம், பிரதரமென்னும் பெரும்பாடு, கண்டமாலை, மூத்ரரோகங்கள், ஜ்வரங்கள் இப்பிணிகளிலுபயோகிக்கலாம். இதற்கு 'மஹாதிக்தக க்ருதம்' எனப்பெயர். 43—48.

அன்னபேதி, மஞ்சள், மரமஞ்சள், கோரைக்கிழங்கு, தாளகம், மனச்சிலை, கம்பில் லகம், கந்தகம்,[1] வாய்விடங்கம், குங்கிலியம், தேன்மெழுகு, வெண்கடுகு,

காஸீஸாதி க்ருதம். இரஸாஞ்ஜனம், விந்தூரம், கருங்காலி, வேப்பிலை, புங்கயிலை, நன்னாரி, வசம்பு, மஞ்ஜிஷ்டை, அதிமதுரம், ஜடாமாம்ஸீ, காட்டுவாகை, வெள்ளி லோத்தி, அல்லிக்கிழங்கு, கடுக்காய், தகரவிதை இவற்றில் ஒவ்வொன்றிலும் கால் கால் பலம் எடுத்து சூர்ணம் செய்து, அச்சூர்ணத்தை ஒருதாமிர பாத்திரத்திலிட்டு, அதில் முப்பது பலம் நெய் சேர்த்து, வெயிலில் ஏழுநாள் வைத்திருக்கவேண்டும். இந்த க்ருதத்தை குஷ்டம், தத்ரு என்னும் படை, சொரி சிரங்குகள், சுகதோஷங்கள், விஸர்ப்பம், வாதரக்தத்தினுலுண்டாகும் விஸ்போடமென்னும் கொப்புளம், மண்டைவெடிப்பு, உபதம்சம், நாடிவ்ரணம், கெட்டுப் போன இதரவிரணங்கள், விக்கம், பகந்தரம், லூதா என்னும் சிலந்தியினுலுண்டாகும் விரண விசேஷங்கள் இவற்றைப் போக்குவதற்கு தேஹத்தில் தேய்த்துக்கொள்ளலாம்; மேலும் இந்த க்ருதம் விரணங்களிலுண்டான தோஷங்களையகற்றி அவற்றை சீக்கிரம் ஆறவும் செய்யும்; பிறகு சர்மத்திற்கு நல்ல நிறத்தையும் உண்டுபண்ணும். 49—55.

ஜாதிக்காய், வேம்பு, பேய்ப்புடல், மஞ்சள், மரமஞ்சள், கடுகரோஹிணீ, மஞ்ஜிஷ்டை, அதிமதுரம், தேன்மெழுகு, புங்கை, வெட்டிவேர், நன்னாரி, மயில்துத்தம்

ஜாத்யாதி க்ருதம். இவற்றைப் பொடித்து நெய்யிற் கலக்கி, அக்னியிலேற்றி பக்குவம் செய்யவும். மர்மஸ்தானங்களை ஆச்ரயித்துண்டாகுபவையும், துஷ்டநீரைப் பெருக்குபவையும், வெகு ஆழமாக வியாபித்திருப்பவையும், மிகவலியுண்டு பண்ணுபவையுமான விரணங்கள் யாவும் இந்த க்ருதத்தைப் பூசுவதால் ஆறிவிடும். 56—57½.

சித்திரமூலம், சங்கங்குப்பி, கடுக்காய், கம்பில்லம், கருஞ்சிவதை, வெண்சிவதை,

1. இங்கு கூறப்பட்டுள்ள தாளகம் முதலியதை சுத்திசெய்து சேர்ப்பது நலம். தாளகம், மனச்சிலை முதலிய தாதுப்பொருட்களின் சுத்திமுறை முதலியவைகளைப்பற்றி இதே கண்டத்தில் 11-வது அத்தியாயத்திற் காண்க.

பிந்து க்ருதம். பொற்றிக் கீரை, கொன்றை, நேபாளம், பீர்க்கு, தேவதாளீ, அவிரி, வெண்காக்கணம், பொன்னுலங்காய், மோடி, வாய்விடங்கம், கடுகரோஹிணீ, பிரம்மதண்டு இவற்றில் கால் கால் பலம் பொடித்தெடுத்து, எருக்கம்பால் இரண்டு பலம், கள்ளிப்பால் ஆறு பலம், நெய் பதினாறு பலம் சேர்த்து பக்குவம் செய்யவும். இந்த நெய்யை ஒவ்வொரு பலமாக உபயோகிக்க குன்மம், குஷ்டம், சூலம், உதாவர்த்தம், வீக்கம், வயிற்றுப்பொருமல், பகந்தரம், எட்டுவிதமான உதரரோகங்கள் இவை நிவ்ருத்தியாகும்; பசும்பால், ஒட்டைப்பால், கொள்ளுக்கஷாயம், உஷ்ணஜலம் இவற்றுள் ஏதேனுமொன்றை மேற்படி க்ருதத்திற்கு அனுபானமாக உபயோகிக்கலாம்; இதில் ஒவ்வொரு பிந்து உட்கொள்கையிலும் ஒவ்வொரு முறை விரேசனமாகும். பிந்து க்ருதமெனப்படும் இவ்வௌஷதத்தை நாபியில் தடவினாலும் பேதியாகும். 58—63½.

இரண்டாம் த்ரிபலாக்ருதம். த்ரிபலையின் கஷாயம் ஒரு பிரஸ்த்தம், ஆடாதோடையின் ஸ்வரஸம் ஒரு பிரஸ்த்தம், கரிசிலாங்கண்ணிச்சாறு ஒரு பிரஸ்த்தம், ஆட்டுப்பால் ஒரு பிரஸ்த்தம், நெய் ஒரு பிரஸ்த்தம் சேர்த்து, அதில் த்ரிபலை, திப்பிலி, திராக்ஷை, சந்தனம், இந்துப்பு, சிற்றாமுட்டி, காகோலீ, க்ஷீரகாகோலீ, மேதா, மஹாமேதா, மிளகு, சுக்கு, சர்க்கரை, வெண்தாமரை, செந்தாமரை, சாறடை, மஞ்சள், மரமஞ்சள், அதிமதுரம் இவற்றை ஒவ்வொன்றையும் கால் பலம் எடை இடித்து கல்கமாகச் சேர்த்து பக்குவம் செய்யவும். இதை யுபயோகித்தால் இரவில் கண்தெரியாமை, நகுலாந்த்யம்[1], சொரி சிரங்கு, பில்லம்,[2] கண்ணில் நீர்வடிதல், படலம்,[3] திமிரம்,[4] அஜகம்[5] இவைமுதலான இன்னும் பலவிதமான கொடிய நேத்திரரோகங்களும் நீங்கும்; இந்த த்ரிபலாக்ருதமானது பானம் செய்வதற்கும், நஸ்யமிடுவதற்கும் மிகவும் உபயோகமானது. 64—69.

கௌராதி க்ருதம். மஞ்சள், மரமஞ்சள், சிற்றாமல்லி, மருளங்கிழங்கு, நன்னாரி, வெண்சந்தனம், செஞ்சந்தனம், சீந்தில், அதிமதுரம், அல்லிக்கிழங்கு, நாககேஸரம், தாமரை, நெய்தல், வெட்டிவேர், மேதா, த்ரிபலை, பஞ்சவல்கலங்கள்[6] இவற்றை சூர்ணம் செய்து ஒவ்வொன்றிலும் கால்பலமெடைபெய்த்து, ஒரு பிரஸ்த்தம் நெய்யைப் பக்குவம் செய்யவும். இதை யுபயோகிப்பதால் விஸர்ப்பரோகம், லூதாவென்னும் சிலந்திவிரணம், கொப்புளங்கள், விஷப்பற்றுகள், குளவி கொட்டுவதாலுண்டாகும் விரணங்கள் முதலியவை தீரும். இது 'கௌராதி க்ருதம்' என்று சொல்லப்படும். 70—72.

சிற்றாமுட்டி, அதிமதுரம், சிற்றரத்தை, தசமூலம்[7], த்ரிபலை இவற்றில் இரண்டிரண்டு

1, 2, 3, 4, 5, நகுலாந்த்யம் முதல் அஜகம் வரையிலுமுள்ள இந்த ரோகங்களின் விவரங்களைப் பற்றி 53 ம் பக்கம்முதல் 56-ம்பக்கம் வரையிலுமுள்ள நேத்திரரோக வகைகளைப் பார்க்க.

6. ஆல், அத்தி, அரசு, கல்லாலி, நாவல் இவற்றின் பட்டைகள் 'பஞ்சவல்கலம்' எனப்படும்.

7. தசமூலம்—இதைப்பற்றி 115-வது பக்கத்தில் டிப்பணியைப் பார்க்க.

பலாதி க்ருதம். பலமெடுத்து ஒரு த்ரோணஜலத்தில் சேர்த்து, இரகுகள், பித்தம், குடல், யக்ருத் என்னும் கல்லீரல், கால்கள், மூக்கு இவற்றை விலக்கி மயி அடைய மற்ற உடல்களையும் அதில் சேர்த்து, காலில் ஒருபங்காகக் காய்ச்சி, அதில் ஸமபாகம் பால் சேர்த்து, ஒருபடி நெய்யையும், ஜீவநீயகணத்திலுள்ள வஸ்துக்களையும் தனித்தனியே கால்பலம் கல்கமாகவும் சேர்த்து பக்குவம் செய்யவும். இந்த க்ருதம் தலைநோய், மந்யாஸ்தம்பம், இடுப்புவலி, அர்திதம், காது நாசி நேத்திரம் நாக்கு தொண்டை இவற்றிலுண்டாகும் நோய்கள் முதலானவைகளைப் போக்கும்; இந்த க்ருதம் பருகுவதற்கும், நஸ்யமிடுவதற்கும், அப்யங்கத்திற்கும், காதிலிடுவதற்கும் உபயோகிக்கக்கூடியது. மேலும் ஹேமந்தருது, சிசிரருது, வஸந்தருது இவ்வித சீதகாலங்களிலும் இதை உபயோகித்துவருவது நலம். 73—76½.

பலக்ருதம். த்ரிபலை, அதிமதுரம், கோஷ்டம், மஞ்சள், மரமஞ்சள், கடுகரோஹிணீ, வாய்விடங்கம், திப்பிலி, கோரைக்கிழங்கு, தும்மட்டி, கருவேப்பிலை, வசம்பு, மேதா, மஹாமேதா, காகோலீ, க்ஷீரகாகோலீ, நாட்டுநன்னாரி, சீமைநன்னாரி, ஞாழல், சதகுப்பை, பெருங்காயம், சிற்றரத்தை, வெண்சந்தனம், இரத்த சந்தனம், இலவங்கம், மூங்கிலுப்பு, தாமரை, சர்க்கரை, ஓமம், நேபாளம், கண்டங்கத்திரிவேர் இவற்றைப் பொடித்து கல்கமாகச் செய்து, உயிருடனுள்ள கன்றுக்குட்டியுடன் கூடியதும் ஒரே நிறமானதுமான பசுவினிடமிருந்து கறந்த பாலினின்றுமெடுத்த நெய்யில் ஒரு பிரஸ்த்த பரிமாணமும், அதற்கு நாலுமடங்கு பாலும் ஒரு மட்பாத்திரத்திலாவது தாமிர பாத்திரத்திலாவது சேர்த்து, நல்ல திதியில், புஷ்ய நக்ஷத்திரத்துடன்கூடிய சுபதினத்தில், காட்டு வரட்டிகளைக்கொண்டு தீயிட்டெரிக்கவேண்டும். அப்பால் நல்லதினத்தில் இதை யுட்கொண்டால் புருஷருக்கும் ஸ்த்ரீகளுக்கும் தாதுபுஷ்டி யுண்டாகும்; மலட்டுத்தனமும் நிவ்ருத்தியாகும்; மதியும் மேன்மையடையும்; அடிக்கடி அற்பாயுளான குழந்தைகளைப் பெறுபவள் இவ்வௌஷதத்தை யுட்கொண்டால் சதாயுள்ஸாக ஜீவிக்கக்கூடியவனும் மிக மேதாவியுமான புத்திரனைப் பெறுவள்; பரத்வாஜமுனிவரால் மொழியப்பட்ட இந்த க்ருதமானது 'பலக்ருதம்' என்று வழங்கப்படும். 77—84½.

வ்ருஷாதி க்ருதம். ஆடாதோடை, வேம்பு, சீந்தில், கண்டங்கத்திரி, பேய்ப்புடல் இவற்றைக் கஷாயமிட்டு வடிக்கட்டி, நெய் சேர்த்து, மேற்கூறிய கஷாயச் சரக்குகளையே கல்கமாகவும் சேர்த்து பக்குவம்செய்து உட்கொள்ள விஷமஜ்வரங்கள், பாண்டுரோகம், குஷ்டம், விஸர்ப்பம், வயிற்றுக்கிருமிகள், அர்சோரோகம் இவை ஸ்வஸ்த்தமாகும். 85—86.

இரண்டாவது பல க்ருதம். குமிஞ்சி, செங்குமிஞ்சி, த்ரிபலை, சீந்திற்கொடி, சாறடை, பலாசு, மஞ்சள், மரமஞ்சள், சிற்றரத்தை, மேதா, தண்ணீர்முட்டான் இவற்றை கல்கமாக இடித்துச்சேர்த்து, ஒரு பிரஸ்த்தம் நெய்யை நாலு மடங்கு பாலில்சேர்த்து பக்குவஞ்செய்து உபயோகிக்கலாம். யோநிசூலை, பரிப்லுதம், உபப்லுதம்,

வாமநம், அந்தர்முகம், பித்தயோநி, விப்லுதம், ஷண்டிதம்[1] இவ்விதமான கோளாறடைந்த யோநிகள் இயற்கை நிலைமையடைந்து, மீண்டும் ஸ்த்ரீ கர்ப்பந்தரிக்கத் தகுந்தவளாவள். இந்த இரண்டாவது 'பலக்ருதமானது' யோநிதோஷங்களைப் போக்குவதற்காகவே ஏற்பட்டது. 87—90.

தைலங்கள்.

லாக்ஷா தைலம். ஓர் ஆடகப்ரமாணம்[2] செவ்வரக்கை, நாலு பங்கு ஜலத்தில் சேர்த்து, நாலில் ஒருபங்கு மிகும்படிக்காய்ச்சி க்வாதமாகச் செய்யவும்; அதில் ஒரு பிரஸ்த்தப்பிரமாணம் நல்லெண்ணெயும், ஓர் ஆடகம் பசுந்தயிரின் தெளிவு நீரும் சேர்த்து, சதகுப்பை, அமுக்கிருங்கிழங்கு, மஞ்சள், தேவதாரு, கடுகரோஹிணீ, அரேணுகம், மருளங்கிழங்கு, கோஷ்டம், அதிமதுரம், சந்தனம், கோரைக்கிழங்கு, சிற்றரத்தை இவற்றில் ஒவ்வொன்றும் கால் பலமெடுத்து சூர்ணம் செய்து, மேற்படி தைலத்தில் சேர்த்து சிறுகச் சிறுக தீபிட்டெரிக்கவும். இந்த தைலத்தை வடிக்கட்டி அப்யங்கம் செய்து வந்தால் ஸகல விஷமஜ்வரங்களும், காஸம், ச்வாஸம், பிரதிச்யாயம், கழுத்துப்பிடிப்பு, இடுப்புப் பிடிப்பு, வாதரோகங்கள், பித்தரோகங்கள், அபஸ்மாரரோகம், உன்மாதம், யக்ஷராக்ஷஸர்களால் நேரிடும் காற்றுச் சங்கையென்னும் வியாதிகள், சொறி சிரங்குகள், வயிற்றுநோய், அங்கங்களில் பல காரணங்களாலுண்டாகும் துர்நாற்றம், அவயவங்களில் திடீரென்றுண்டாகும் துடிப்புகள் முதலியவை நிவ்ருத்தியாகும்; கர்ப்பிணிகள் இத்தைலத்தைக்கொண்டு அப்யங்கம் செய்துகொண்டால் அவர்களுடைய கர்ப்பம் நன்றாக புஷ்டியடையும். 91—96.

அங்காரக தைலம். மருளங்கிழங்கு, அரக்கு, மஞ்சள், மரமஞ்சள், மஞ்ஜிஷ்டை, தும்மட்டி, கண்டங்கத்திரி, இந்துப்பு, கோஷ்டம், சிற்றரத்தை, ஜடாமாம்ஸீ, தண்ணீர்முட்டான் இவற்றில் ஒவ்வொன்றிலும் பலப்பிரமாணம் சேர்த்து, இவற்றை ஓர் ஆடகப்பிரமாணம் காடியில் சேர்த்து, ஒரு பிரஸ்த்தம் தைலத்தைக் காய்ச்சியெடுக்கவும்; இதற்கு 'அங்காரகதைலம்' எனப்பெயர்; இத்தைலம் ஸகலவிதமான ஜ்வரங்களையும் போக்குங்குணமுடையது. 97—98.

நாராயண தைலம். அமுக்கிருங்கிழங்கு, சிற்றுமுட்டி, பில்வவேர், பாதிரி, சிறுவழுதுணை, கண்டங்கத்திரி, நெரிஞ்சில், பேராமுட்டி, வேம்பு, பெருவாகை, சாறணை, முதியார் கூந்தல், அகில் இவை ஒவ்வொன்றும் தனித்தனியே பத்து பல மெடையெடுத்து, நாலு த்ரோணம் ஜலத்தில் சேர்த்து, நாலில் ஒரு பங்காகக் காய்ச்சி வடிக்கட்டி, அதில் ஓர் ஆடகப்பிரமாணம் நல்லெண்ணெயும், தண்ணீர் முட்டாங்கிழங்கின் சாறு ஓர் ஆடகமும், தைலத்திற்கு நாலுபங்கு பாலும் சேர்த்து, அப்பால் கோஷ்டம், ஏலம், சந்தனம், மருளங்கிழங்கு, வசம்பு, ஜடாமாம்ஸீ, இந்துப்பு, அமுக்கிருங்கிழங்கு, சிற்றரத்தை, சிற்றுமுட்டி, சதகுப்பை, தேவதாரு, சிறுமல்லிகை, பெருமல்லிகை, கிரந்திதகரம் இவற்றில்

1. இங்கு கூறப்படும் பரிப்லுதம் முதலிய யோநி விகாரங்களைப்பற்றிய விவரங்களை 57-வது பக்கத்திற் பார்க்க.

2. ஆடகம்—அறுபத்துநான்கு பலம்.

இரண்டிரண்டு பலம் பொடித்து கல்கமாகச் சேர்த்து தைலத்தைப் பக்குவம் செய்யவும். அத்தைலத்தை நஸ்யமிடுவதற்கும், அப்பங்கத்திற்கும், பாநம் பண்ணுவதற்கும், வஸ்தி செய்வதற்கும் உபயோகிக்கலாம். இவ்வாறுபயோகித்தால் பார்ச்வவாயு, ஹநுஸ்தம்பம், மந்யாஸ்தம்பம், களக்ரஹம், பொட்டைத்தலே, செவிட்டுத்தனம், கால் நடக்கமுடியாமல் போய்விடுதல், கடிக்ரஹமென்னும் இடுப்புப்பிடிப்பு, சரீரம் மெலிவுறுதல், இந்த்ரியங்கள் மந்தமாய்விடுதல், இரத்தக்ஷயம், சுக்ரக்ஷயம், க்ஷயரோகம், ஜ்வரம், அந்த்ரவ்ருத்தி, அண்டரோகம், தந்தரோகங்கள், சிரோக்ரஹம் அல்லது கழுத்தை யசைக்கமுடியாமை, பார்ச்வசூலே, மொண்டியாய்விடுதல், புத்தி மந்தப்படுதல், க்ருத்ரஸீ இதுமுதலிய இன்னும் அநேகவிதமான வாதரோகங்களும் சாந்தமாகும்; இதனுடைய பிரபாவத்தினுல் மலட்டுத்தன்மையும் நீங்கி ஸ்த்ரீ பிரஸவிப்பள். இந்தத் தைலத்தை யுபயோகித்துவந்தால் மனிதர் மட்டுமேயல்ல, யானே, குதிரை முதலிய மிருகஜாதிகளும் மேற்கூறிய பிணிகளிலிருந்து விடுபட்டு ஸௌக்யமடையும் துஷ்டர்களான அஸுரரை நாராயணன் நாசமாக்கியதுபோல், வாதரோகங்களே அடியோடு அகற்றுவதற்கு இத்தைலமும் உத்தமௌஷதமாகும். 99—108½.

வாருணீ தைலம். அருகம் புற்களின் வடபுறமாயோடும் வேர்களைக் களைந்து, அதில் மூன்று பலமெடுத்து இடித்து, பன்னிரண்டு பலம் தைலத்தை அதில் சேர்த்து ஒரு க்ஷணநேரம் காய்ச்சவும். இதில் பன்னிரண்டு உளுந்தெடை அன்னத்தில் சேர்த்துக்கொண்டு புஜித்துவந்தால் கைநடுக்கம், தலேநடுக்கம், மந்யாவென்னும் கழுத்திலுள்ள நாடியின் தளர்ச்சியாலுண்டாகும் கழுத்தின் நடுக்கம் இவையனைத்தும் தீரும். 109—110½.

பலா தைலம். சிற்றுமுட்டி வேர்க்கஷாயம், தசமூல க்வாதம், கொள்ளுக்கஷாயம், யவதானிய க்வாதம், இலந்தங்கொட்டையின் க்வாதம், பால் இவற்றில் ஒவ்வொன்றினும் எவ்வெட்டு பாகம், தைலம் ஒரு பாகம் சேர்த்து, ஜீவநீயகணம், தண்ணீர்முட்டான், தேவதாரு, மஞ்ஜிஷ்டை, கோஷ்டம், கல்மாம், கிரந்திதகரம், அகில், இந்துப்பு, வசம்பு, சாறடை, ஜடாமாம்ஸீ, நாட்டுநன்னரி, சீமைநன்னரி, இலவங்கப்பத்திரி, சதகுப்பி, அமுக்கிறுங்கிழங்கு, ஏலம் இவற்றையெல்லாம் இடித்து கல்கமாயுபயோகித்து, தைலத்தைப் பக்குவம் செய்யவும். கருத்தரிக்காத ஸ்த்ரீகளுக்கும், சுக்ரம் க்ஷீணித்த புருடருக்கும், வியாயாமமென்னும் அதிகமான தேஹப்பயிற்சியினுல் மெலிந்துபோன சரீரமுடையவருக்கும், பிரஸவித்த ஸ்த்ரீகளுக்கும் இத்தைலம் மிக உபயோகமானது; ஸுகிகளுக்கும் அரசருக்கும் இத்தைலம் ஏற்றதானது; ஸகல வாதரோகங்களேயும் போக்கும்; இதற்கு 'பலா தைலம்' எனப் பெயர். 111—116.

ப்ரஸாரிணீ தைலம். நூறுபலம் முதியார்கூந்தலே ஒரு த்ரோண ஜலத்தில் சேர்த்து, காலில் ஒரு பங்காகக் காய்ச்சி, அதற்கு ஸமமாக தயிரும், தைலமும், காடியும், தைலத்தினும் நாலுபங்கு பாலும் சேர்த்து, அதிமதுரம், மோடி, சித்திரமூலம், இந்துப்பு, வசம்பு, முதியார்கூந்தல், தேவதாரு, சிற்றரத்தை, யானைத்திப்பிலி, சேராங்

கொட்டை, சதகுப்பி, ஜடாமாம்ஸீ இந்த கல்கதிரவ்யங்களையெல்லாம் இடித்து தைலத்தினும் எட்டிலொரு பங்காகச் சேர்த்து பக்குவம் செய்யவும். இத்தைலம் வாதரோகங்கள், கபத்தினு லுண்டாகும் ரோகங்கள், கூன்விழுதல், முடவனுகுதல், க்ருத்ரஸீ, அர்திதம், ஹநுஸ்தம்பம், இடுப்புவலி, கழுத்துப்பிடிப்பு, மற்றுமுள்ள விஷமமான வாதரோகங்கள் இவையனைத்தையும் சீக்கிரத்தில் போக்கும். 117—121½.

மாஷ தைலம். உளுந்து, யவதானியம், ஆளிவிதை, கண்டங்கத்திரி, பூனைக்காலி, மருதோன்றி, நெரிஞ்சில், பெருவாகை இவை ஒவ்வொன்றும் எவ்வேழு பலமெடுத்து, நாலுமடங்கு ஜலம் சேர்த்து, நாலில் ஒரு பங்காகக் காய்ச்சி யெடுக்கவும். பருத்திக்கொட்டை, இலந்தங்கொட்டை, சணல்விதை, கொள் ஒவ்வொன்றும் பதினன்கு பலம் போட்டு நாலு பங்கு ஜலத்திலிட்டு, நாலி லொருபங்கு மிகும்படி காய்ச்சி யெடுத்துக்கொள்ளவும்; ஒரு பிரஸ்த்தம் ஆட்டிறைச்சியை அறுபத்துநாலுபலம் ஜலத்தில் போட்டு, அதையும் நாலிலொரு பாகம் குறையுமாறு பக்குவம் செய்தெடுக்கவும்; இந்த க்வாதங்களையெல்லாம் ஒன்ருகக் கூட்டி, அதில் ஒரு பிரஸ்த்தம் நல்லெண்ணெய் சேர்த்து; சீந்தில், கோஷ்டம், சுக்கு, சிற்றரத்தை, சாறணை, ஆமணக்கு, திப்பிலி, சதகுப்பை, சிற்றுமுட்டி, முதியார் கூந்தல், ஜடாமாம்ஸீ, கடுகரோஹிணீ இவை ஒவ்வொன்றும் அரைப்பலமெடுத்து சூர்ணம் செய்து, மேற்படி தைலத்திலிட்டு சிறுகச் சிறுகத் தீயிட்டெரித்து பக்குவம் செய்யவும். இத்தைலம் க்ரீவாஸ்தம்பம், அபபாஹுகம், பார்சவவாயு, ஆக்ஷேபகம், ஊருஸ்தம்பம், அபதாநகம், கைகால்களின் நடுக்கம், தலை நடுக்கம், விச்வாசீ முதலிய வாத ரோகங்களையும் போக்கும். இதற்கு 'மாஷ தைலம்' எனப் பெயர். 122—130.

சதாவரீ தைலம். தண்ணீர் முட்டான்கிழங்கு, சிற்றுமுட்டி, பேராமுட்டி, சிறுமல்லி, பெருமல்லி, ஆமணக்கு, அமுக்கிருங்கிழங்கு, நெரிஞ்சில், பில்வவேர், காவட்டம்புல், மருதோன்றி இவற்றில் ஒவ்வொன்றிலும் ஒன்றரைப்பலமெடுத்து, அனைத்தையும் நாலுபங்கு ஜலத்தில் சேர்த்து, நாலிலொரு பங்காகக் காய்ச்சி, அதில் ஒரு பிரஸ்த்தம் தைலமும், ஒரு பிரஸ்த்தம் பாலும், ஒரு பிரஸ்த்தம் தண்ணீர் முட்டாங்கிழங்கின் சாறும், ஒரு பிரஸ்த்தம் ஜலமும் சேர்த்து, தண்ணீர் முட்டாங்கிழங்கு, தேவதாரு, ஜடாமாம்ஸீ, கிரந்திதகாம், சந்தனம், சத குப்பி, சிற்றுமுட்டி, கோஷ்டம், ஏலம், கல்மரம், நெய்தல், ருத்தி, மேதா, அதிமதுரம், காகோலீ,ஜீவகம் இவற்றை கால் கால் பலம் விதமெடுத்து சூர்ணம் செய்து கல்கமாகச்சேர்த்து, பசுஞ்சாணத்தினலான வரட்டிகளிட்டெரித்து பக்குவம் செய்யவும். இத்தைலத்தை யுபயோகிப்பதால் புருடனுக்கு வீர்யவ்ருத்தி யுண்டாகும்; ஸ்த்ரீகளுக்கும் கருப்பையைப்பற்றிய கோளாறுகள் கழிந்து கருத்தரிக்கும் நிலைமையுமேற்படும்; யோநியிலுண்டாகும் சூலையும் நிவ்ருத்தியாகும்; மேலும் சரீரமுடியவுமுண்டாகும் வலியும், தலைவலியும் போகும்; காமாலை, பாண்டுரோகம், கிருத்ரிம விஷஸம்பந்தத்தினுலுண்டாகும் வியாதிகள், க்ருத்ரஸீ, ப்லீஹரோகம், க்ஷயம், மேஹரோகங்கள், தண்டாபதாநகம், தாபத்துடன் கூடிய வாதரக்தம், வாதபித்தம், அர்திதம், இரக்த ப்ரதரமென்னும் பெரும்பாடு, வயிற்றுப் பொருமல், இரத்தபித்தம் இவற்றையும் இத்தைலம் நிவ்ருத்தி செய்யும். 'சதாவரீதைலம்' என்கிற இம்முறையானது, கிருஷ்ணாத்ரேயரால் கண்டு பிடிக்கப்பட்டது. தைலம் பக்குவம் செய்வ

தற்குமுன், "ஓம் நாராயண்யை ஸ்வாஹா" என்கிற மந்திரத்தைச் சொல்லி வடக்குமுகமாய் நின்றுகொண்டு கருங்காலி மரத்தினல்செய்த கோடரியைக்கொண்டு மூலிகைகளை வெட்டி யெடுக்கவும்; "ஓம் ஸர்வவ்யாதி விநாசிந்யை ஸ்வாஹா" என்கிற மந்திரத்தையும் சொல்லிக் கொண்டே மூலிகைகளைப் பிடுங்கவும். "ஓம் குமார ஜீவிந்யை ஸ்வாஹா" என்கிற மந்திரத்தை யோதிக்கொண்டே ஒஷதிகளைப் பக்குவம் செய்யவும் 131—139.

காஸீஸாதி தைலம். அன்னபேதி, நீர்த்திப்பிலி, கோஷ்டம், சுக்கு, திப்பிலி, இந்துப்பு, மனச்சிலை, அலரி, வாய்விடங்கம், சித்திரமூலம், ஆடாதோடை, நேபாளம், பீர்க்கம் விதை, நாககேஸரம், தாளகம் இவற்றில் கால் பலமெடை யெடுத்து இடித்து, கல்கமாகச் செய்து ஒரு பிரஸ்த்தம் தைலத்தைப் பக்குவம் செய்யவும்; இதில் கள்ளிப்பால் இரண்டு பலமும், எருக்கம்பால் இரண்டு பலமும், தைலத்திற்கு நாலு மடங்கு பசு மூத்திரமும் சேர்த்து எரித்துத் தைலத்தைத் தயார்செய்து கொள்ளவும்; அர்சஸ் ஸுகளை அகற்றுவதன்பொருட்டு காநாதன் என்பவரால் இத்தைலமுறை கூறப்பட்டது; இதை அர்சஸ்ஸென்னும் மூலமுளைகளின்மேல் தடவ, அவை க்ஷாரத்தினல் எரிக்கப்பட்டவைபோல் உடனே உதிர்ந்துவிடும்; ஆனல் இது குதத்வாரத்திலடங்கிய சர்மம் முதலியவற்றிற்கு யாதொரு தீங்கையு முண்டுபண்ணுமல், க்ஷாரத்தினல் நிறைவேற்றப்படும் குணங்களையுண்டுபண்ணி பிணியாளிக்கு ஸௌக்யத்தைத் தரும். 140—143½.

பிண்ட தைலம். மஞ்ஜிஷ்டை, நன்னரி, மட்டிப்பால், அதிமதுரம், தேன்மெழுகு ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம், ஆமணக்கெண்ணெய் இருபது பலம் சேர்த்து ஒருவித தைலத்தைப் பக்குவம் செய்யலாம்; அது 'பிண்டதைலம்' என்று வழங்கப்படும்; இத்தைலம் வாதரக்த்தத்தைப் போக்கும். 144½.

அர்க்க தைலம். எருக்கயிலையிலிருந்து சாறு பிழிந்து, அச்சாற்றில் மஞ்சளைச் சூர்ணம் செய்து கல்கமாகச் சேர்த்து, கடுகெண்ணெயையும் கூட்டி பக்குவம் செய்யப்படும் தைலத்தைத் தடவிவந்தால் சிரங்கு, அரைக்கடுவான், சொரி முதலிய சர்மவியாதிகள் நீங்கும். 145½.

மரிசாதி தைலம். மிளகு, தாளகம், சிவதைவேர், செஞ்சந்தனம், கோரைக்கிழங்கு, மனச்சிலை, ஜடாமாம்ஸீ, மஞ்சள், மரமஞ்சள், தேவதாரு, தும்மட்டி, அலரி, கோஷ்டம், எருக்கம்பால், ஒவ்வொன்றும் கால் பலமும், அரைப் பலம் நாபியும், ஒரு பிரஸ்த்தம் கடுகெண்ணெயும், இவையனைத்துக்கும் இரு மடங்கு பசு மூத்திரமும்,இரு மடங்கு ஜலமும் சேர்த்து பக்குவம் செய்து,வெண்குஷ்டம்,குஷ்டம், புண்டரீகமென்னும் படை, தலையிலுண்டாகும் சிரங்குகள், ஸாதாரண சிரங்குகள், இரத்த தோஷத்தினுலுண்டாகும் சர்மவியாதி, சொரி இவற்றில் இத்தைலத்தை யுபயோகிக்கலாம். இது 'மரிசாதி தைலம்' எனப்படும். 146—150.

த்ரிபலை, வேம்பு, நிலவேம்பு, மஞ்சள், மரமஞ்சள், செஞ்சந்தனம் இவற்றுல் பக்கு

த்ரிபலாதி தைலம். வம் செய்யப்பட்ட தைலத்தை சிரஸ்விலுண்டாகும் சில விரணங்களைப் போக்க அப்யங்கம் செய்துகொள்ளலாம். 151.

நிம்ப தைலம். வேப்பங்கொட்டைகளைத் கரிசிலாங்கண்ணிச் சாற்றில் பாவனை செய்து, அவ்வாறே தினிசயிலைச் சாற்றிலும் அவற்றை மீண்டும் பாவனை செய்து, அவ்வித்துக்களை நசுக்கி, அவற்றிலிருந்து எடுக்கப்படும் தைலத்தை நஸ்யமா யுபயோகிக்க அகாலத்திலுண்டாகும் நறைத்தலைப் போக்கும்; இத்தைலமுபயோகிக்கையில் பாலும் அன்னமுமே ஆஹாரமாயுட்கொள்ள வேண்டும். 152½.

யஷ்ட்யாதி தைலம். அதிமதுரம், பால், புதிய நெல்லிக்கனி இவற்றை க்வாதம் செய்து, அக்கஷாயத்தில் தைலத்தைப் பக்குவம் செய்யவும்; இதை நஸ்யகர்மத்தி லுபயோகிக்கத் தலைமயிர்களையும், தாடி மீசைகளையும் கருமிறமாகச் செய்யும். 153½.

கரஞ்ஜாதி தைலம். புங்கை, சித்திரமூலம், ஜாதிக்காய், அலரி இவற்றைச்சேர்த்து க்வாதம் செய்து, அதில் தைலம் பக்குவம் செய்யலாம். மேற்கூறிய பதார்த்தங்களையே இத்தைலத்தில் கல்கமாகவும் உபயோகிக்கவேண்டும். இத்தைலத்தை அப்யங்கம் செய்துகொள்ள 'இந்த்ரலுப்தம்' என்னும் மயிர்களுதிரும் ரோகம் தீரும். 154½.

நீலிங்யாதி தைலம். அவிரி, தாழைவேர், கரிசிலாங்கண்ணி, மருதோன்றி, மருதம்பூ, வேங்கைமரத்தின் புஷ்பம், திப்பிலி, எள், கிரந்திதகரம், தாமரையின் கிழங்கு கொடி இலை புஷ்பம், அயபஸ்மம், ஞாழல், மாதளையின் பட்டை, சிந்தில், த்ரிபலை தாமரையோடையிலுள்ள உலர்ந்த சேறு இவை ஒவ்வொன்றும் கால் பலமெடை சேர்த்து கல்கமாகச் செய்யவேண்டும்; முதலில் த்ரிபலாதி க்வாதத்திலும்,[1] கரிசிலாங்கண்ணிச்சாற்றிலும் தைலத்தைக் காய்ச்சி, பிறகு அவிரி முதலியதாலான கல்கத்தை அதில் சேர்த்து பக்குவம் செய்யவேண்டும். இத்தைலம் மயிர்களை உதிரவிடாமல் கருமிறமாகச் செழிக்கச் செய்யும்; அகாலத்திலுண்டாகும் நிறைத்தலையும் போக்கும்; தலையிலுண்டாகும், வெடிப்புகளையும், உபஜிஹ்வாரோகத்தையும் குணமாக்கும். 155—158½.

பருங்கராஜ தைலம். கரிசிலாங்கண்ணிச்சாற்றுடன் தைலம் சேர்த்துக் காய்ச்சி, அதில் இரும்புக்கிட்டம், த்ரிபலை, நன்னாரி இவற்றைக் கல்கமாகச் சேர்த்து தைலம் பக்குவம் செய்யலாம். இத்தைலத்தை உபயோகிப்பதால் தலையிலுண்டாகும் வெடிப்பு, அகாலத்திலேற்படும் நிறைத்தல், சொரிசிரங்கு, இந்த்ரலுப்தமென்னும் மயிருதிர்தல் இவை நிவ்ருத்தியாகும். 159,160.

1. த்ரிபலாதி க்வாதம்—பக்குவம் செய்யும் விதத்தைப்பற்றி 77-வது பக்கம் பார்க்க.

எட்டாவது அத்தியாயம்.

(லேஹ்ய கல்பனை.)

லேஹ்யமும் அதன் பரிமாணமும்.

க்வாதம் முதலியதை [1] மீண்டும் அக்னிமேலேற்றிப் பக்குவம் செய்வதால் திரண்டு கனமாக வரும் பாகமானது லேஹ்யமெனப்படும்; இதற்கே ரஸக்ரியை, அவலேஹம், லேஹம் என்றும் வேறு பெயர்களுண்டு. லேஹ்யங்களை உட்கொள்வதற்குப் பொதுவான பரிமாணம் ஒரு பலமாம். 1.

லேஹ்யத்தில் சேர்க்க வேண்டிய வஸ்துக்களின் பிரமாணங்கள்.

லேஹ்யத்தில் சர்க்கரை சேர்க்க வேண்டுமானால், அதில் உபயோகிக்கப்படும் சூர்ணத்தைக் காட்டிலும் நான்கு மடங்கும், வெல்லமானால் சூர்ணத்தினும் இருமடங்கும், திரவபதார்த்தங்களானால் [2] நான்கு மடங்கும் உபயோகிக்க வேண்டும்; எல்லா லேஹ்யங்களையும் பக்குவம் செய்வதில் இதுவே ஸாமானிய பிரமாணமாகும். 2.

லேஹ்யபாகத்தின் அறிகுறிகள்.

லேஹ்யம் நன்கு பக்குவமாகிற நிலைமைக்கு வந்ததானால், அதன் இளகிய பாகானது நூல் போல் இழுபடும்; அதை ஜலத்திலிட்டால் அமிழ்ந்திவிடும்; விரல்களால் அழுத்தினால் சிறிது உரப்பாயிருப்பதுடன், அதில் அங்குலிகளிலுள்ள இரேகைகளின் முத்திரையும் பதியும்; மேலும் அதில் சேர்க்கப்படும் சரக்குகளுக்குள்ள சுவையும் மணமும் நிறமும் நன்கு காணப்படும். 3.

லேஹ்யத்திற்கு அனுபானங்கள்.

பால், கருப்பஞ்சாறு, பஞ்சமூல கஷாயத்திலான யூஷம்,[3] வாஸாக்வாதம் [4] இவற்றுள் ஏதேனும் ஒன்று அனுபானமாக உட்கொள்ளத் தகுந்ததாம். 4.

ஒரு த்ரோணபரிமாணங்[5] கொண்ட ஜலத்தில் நூறுபலம் கண்டங்கத்திரியைச் சேர்

1. இங்கு க்வாதம் முதலியது என்று கூறியதால் ஸ்வரஸம், கல்கம், க்வாதம், பாண்டம், ஹிமம் என்கிற ஐந்துவிதமான கஷாயங்களும் குறிக்கப்படுவதாய் அறிக.

2. திரவபதார்த்தங்களென்பதால்—லேஹ்யத்தில் சேர்க்கக்கூடிய பால், தேன், நெய் முதலியவை குறிக்கப்படுகின்றன.

3. பஞ்சமூலங்களைப்பற்றி 87-வது பக்கம் டிப்பணியிலும், யூஷம் என்பதைப் பக்குவம் செய்ய வேண்டிய வகையைப்பற்றி 86-வது பக்கத்திலும் விவரம் காண்க.

4. வாஸா க்வாதம்—இதைப்பற்றி 78-வது பக்கத்தில் 'தேவல வாஸாக்வாதம்' என்கிற தலையங்கத்தைப் பார்க்க.

5. த்ரோணம்—4-வது பக்கம் பார்க்க.

கண்டகார்யாதி அவலேஹம்.

த்து க்வாதமாகக் காய்ச்சவேண்டும்; முன் சேர்த்த ஜலத்தில் நாலிலொரு பாகம் மிருந்திருக்கையில் அதில் அடியில் வரும் சரக்குகளைச் சூர்ணம் செய்து சேர்க்கவேண்டும்:—சிந்திற்கொடி, சவ்வியம், சித்திரமூலம், கோரைக்கிழங்கு, கர்க்காடகச்ருங்கி, த்ரிகடு, காஞ்சோறி, கண்டபாரங்கி, சிற்றரத்தை, கச்சோரம் இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம்; சர்க்கரை இருபத்தைந்து பலம்; நெய், நல்லெண்ணெய் இவை தனித்தனியே எட்டு பலம்; இவற்றைச் சேர்த்து லேஹ்ய மாகச் செய்து ஆறிய பிறகு தேன் எட்டு பலமும், மூங்கிலுப்பின் சூர்ணம் நான்கு பலமும், திப்பிலிப் பொடி நான்கு பலமும் சேர்த்து, நல்ல மட்பாத்திரத்தில் வைத்திருக்கவும். இந்த லேஹ்யம் விக்கல், ச்வாஸரோகம், காஸரோகம் இவற்றை நன்றாகப் போக்கும். 5—9.

ச்யவனப்ராசா வலேஹம்.

பாதிரி, அகில், பெருங்குமிழன், பில்வம், பெருமரம், நெரிஞ்சில், சிறுமல்லி, பெரு மல்லி, கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, திப்பிலி, கர்க்காடகச்ருங்கி, திராக்ஷை, சீந்தில், கடுக்காய், சிற்றுமுட்டி, கீழாநெல்லி, ஆடாதோடை, ருத்தி, ஜீவந்தி, கச்சோரம், ஜீவகம், ரிஷபகம், கோரைக்கிழங்கு, அல்லிக் கிழங்கு, சிறுகோவை, நரிப்பயறு, பெருவீடுகொள்ளி, நிலப்பூசினிக் கிழங்கு, சாறடை, காகோலீ, க்ஷீரகாகோலீ, தாமரை, மேதா, மஹாமேதா, சிற்றேலம், அக ருக்கட்டை, சந்தனம் இவற்றில் ஒவ்வொரு பலமெடுத்து, ஒருவாறு சிறிதும் பெரிதுமாய் சூர் ணம் செய்து, ஒரு பெரிய பாத்திரத்தில் த்ரோணபரிமாணம் ஜலத்தில் அனைத்தையும் சேர்த்து, இவற்றுடன் ஐன்னூறு நெல்லிக்கனிகளையும்போட்டு பக்குவம் செய்து,எட்டிலொரு பங்காகச் சுண்டும்படி கஷாயம் காய்ச்சி, அதிலுள்ள நெல்லிக்கனிகளைப்பிளந்து கொட்டைகளை யெடுத்து வஸ்திரத்திலிட்டு நன்றாகப் பிழிந்து, அத் திப்பியை ஏழு பலம் நெய்யில் சேர்த்து சிறுகச் சிறுக அக்கினியினால் வறுத்தெடுத்து, முற்கூறிய க்வாதத்தை வடிகட்டி இதில் சேர்த்து, ஐம்பது பலம் கற்கண்டையும் அத்துடன் கூட்டி லேஹ்யபாகமாகச் செய்யவேண்டும்; அப்பால் திப் பிலி இரண்டு பலம், மூங்கிலுப்பு நான்கு பலம், இலவங்கப்பட்டை, ஏலம், இலவங்கப்பத்திரி, நாககேஸரம் இவை ஒவ்வொன்றும் மூன்று சாணயெடை[1] இவற்றை நன்கு சூர்ணம் செய்து, மேற்கூறிய லேஹ்யத்தில் சேர்த்து நன்றாகக் கலந்து,ஆறுபலம் தேனையும் அதில் விட்டுக் கிளற வேண்டும். இவ்வாறு ச்யவனர் என்கிற இருஷியினால் ஏற்படுத்தப்பட்ட இந்த லேஹ்யத்திற்கு 'ச்யவனப்ராசம்' என்றே பிரஸித்தமாகப் பெயர் வழங்கப்படுகிறது. க்ஷயரோகத்தினால் பீடிக் கப்படுபவர், தமது ஜீர்ணசக்திக்குள்ள நிலைமைகளுக்கேற்றவாறு தகுந்த அளவுகளில் இந்த ச்யவனப்ராசம் என்கிற அவலேஹத்தை இரஸாயனமாக உட்கொள்ளலாம்; இந்த லேஹ் யத்தை பாலர், வயது முதிர்ந்தவர், உரக்ஷதரோகிகள், ஸ்த்ரீ ஸம்பந்தத்தினால் தாதுக்ஷீண மடைந்தவர், இருதயரோகமுள்ளவர், ஸ்வரம் க்ஷீணித்தவர் இவர்களும் உபயோகிக்க நற்குண முண்டாகும்; மேலும் காஸம், ச்வாஸம், நாவரட்சி, வாதரக்தம், உரோக்ரஹமென்னும் மார்ப் பிடிப்பு, வாதபித்தம், சுக்ரதோஷம், மூத்திரதோஷம் இவற்றையும் போக்கும்; அல்லாமலும் இதை உபயோகிப்பவனுக்கு புத்தி தீக்ஷ்ணமாகும்; ஞாபகசக்தி அதிகரிக்கும்; புருஷனுக்கு வேண்டிய தாதுவும் புஷ்டியடையும்; சரீரகிறத்திற்கு ஒருவித தெளிவும் தேஹகாந்தியும் நூதன மாயுண்டாகும்; அஜீர்ணமென்பது அப்புருடனுக்குண்டாகாது. 10—21½.

1. சாணம் என்பது ஒரு வீசம் பலம்; ஆகவே மூன்று சாணமென்பது மூவீசம்பலமாகிறது.

கூஷ்மாண்ட லேஹ்யம். நீற்றுப்பூசுணிக்காய்களை யுடைத்து, அவற்றினுட்புறத்திலுள்ள விதைகளனைத்தையும் விலக்கிவிட்டு, அதில் நூறுபலமெடுத்து, சிறு துண்டுகளாக நறுக்கி, அதில் இருமடங்கு ஜலம் சேர்த்து, அந்த ஜலத்தில் பாதி சுண்டிப்போகுமளவும் காய்ச்சி, அந்தப் பூசுணித்துண்டுகளை கனமான வஸ்திரத்திலிட்டுப் பிழிந்து, வெயிலில் சிறிது உலர்த்தி, கத்திமுனையினுல் அவற்றை நன்றாகக் கொத்தி, தாமிரமயமான ஒரு வாயகன்ற பாத்திரத்தில் சேர்த்து, அதில் எட்டு பலம் நெய் ஊற்றி சிறிது வறுக்க வேண்டும்; பிறகு முன் பிழிந்தெடுத்த பூசுணிச்சாற்றையும் இதில் ஊற்றி, நூறு பலம் கற்கண்டையும் சேர்த்து, அனைத்தையும் ஒன்றாகப் பக்குவம் செய்யவும்; அவை நன்கு பக்குவமாய் வரும் ஸமயத்தில் திப்பிலி, சுக்கு,ஜீரகம் இவை தனித்தனியே இரண்டிரண்டு பலமும், கொத்தமல்லிவிதை, இலவங்கப்பத்திரி, ஏலம், மிளகு, இலவங்கப்பட்டை இவற்றில் ஒவ்வொன்றும் அரைப்பலமும் கூட்டி சூர்ணம் செய்து சேர்க்க வேண்டும்; பிறகு நான்கு பலம் தேன் சேர்த்து, நன்றாகக் கிளறிவிடவும். இது 'கூஷ்மாண்டாவலேஹம்' எனப்படும். அவரவரது ஜீர்ணசக்திக்கேற்றவாறு இந்த லேஹ்யத்தைத் தகுந்த அளவில் உட்கொள்ளவேண்டும். இதை உட்கொள்வதால் இரக்தபித்தம், க்ஷயம், ஜ்வரம், சரீர இளைப்பு, நாவரட்சி, தலைச்சுற்றல், வாந்தி, ச்வாஸகாஸம், க்ஷதகாஸம் இவை தீரும்; பாலருக்கும் விருத்தருக்குங்கூட இதை உட்கொள்ளக் கொடுக்கலாம். அல்லாமலும் மார்புக்குண்டான தளர்ச்சியைப்போக்கி, வன்மையையு முண்டு பண்ணும்; வ்ருஷ்யம், ப்ருஹ்மணம், பல்யம் என்கிற குணங்களும் இவ்வௌஷதத்திற்குண்டு. 22—$28\frac{1}{2}$.

ஸூரண லேஹ்யம். கூஷ்மாண்ட லேஹ்யத்திற்குக் கூறிய முறைப்படியே காருங்கருணைக்கிழங்கையும் சமைத்து லேஹ்யமாகச் செய்யலாம்; இந்த லேஹ்யம் அர்சஸ், ஆமவாதம், அக்னிமாந்த்யம் இவற்றை சமனப்படுத்துந்தன்மையது. $29\frac{1}{2}$.

அகஸ்தியஹரீதகீ லேஹ்யம். சிறந்த கடுக்காய்கள் நூறு, யவதானியம் ஓர் ஆடகம்[1], தசமூலம்[2] இருபது பலம், சித்திரமூலம், யானைத்திப்பிலி, நாயுருவி, கச்சோரம், காஞ்சோறி, சங்கங்குப்பி, கண்டுபாரங்கி, மோடி, சிற்றுமுட்டி, தாமரைக்கிழங்கு இவை தனித்தனியே இரண்டிரண்டு பலம், இவற்றை ஐந்து ஆடகங்கொண்ட ஜலத்தில் சேர்த்து, அதிலுள்ள யவதானியம் நன்கு சமைபலானதாகத் தெரிந்தவுடனே கஷாயத்தை இறக்கி வடிக்கட்டி, கடுக்காய்களை மட்டும் எடுத்து விதைநீக்கி மீண்டும் இக்கஷாயத்தில் சேர்த்து, நெய் எட்டு பலமும் நல்லெண்ணெய் எட்டு பலமும் அதிலூற்றி, நூறு பலம் வெல்லமும் போட்டு பக்குவம் செய்து லேஹ்யபாகத்தில் இறக்கிவிடவும்; அப்பால் அதில் தேன் நாலுபலமும், திப்பிலியின் சூர்ணம் நாலுபலமும் சேர்த்து விடவும். இந்த லேஹ்யத்துடன் அதிலடங்கிய கடுக்காயிலும் ஒவ்வொன்று எடுத்து தினந்தோறும் புஜித்து வரலாம். இதனுல் க்ஷயம், காஸம், ஜ்வரம், ச்வாஸம், விக்கல், அர்சஸ், அரோசகம், பீநஸம், கிரஹணீ

---

1. ஆடகம்—இதைப்பற்றி 4-வது பக்கத்திலுள்ள அளவுகளின் அட்டவணையைக் காண்க.

2. தசமூலம்—கண்டங்கத்திரி, சிறுமல்லிகை, சிறுவழுதுணை, தழுதாழை, நெரிஞ்சி, பாதிரி, பெருங்குமிழ், பெருமல்லிகை, வாகை, பில்வம் இப்பத்து மூலிகைகளுமாம்.

இவை நீங்கும்; மேலும் தேஹத்தளர்ச்சி, மயிர் நரைத்தல் இவைகளுமுண்டாகாவண்ணம் தேஹத்திற்கு வன்மையும், அழகிய நிறமும் இதையுபயோகிப்பதாலேற்படும்; இந்த லேஹ்யம் புருடருக்குச் சிறந்த இரஸாயனமாகும். பெரும்பாலும் ஸர்வரோகங்களையும் நிவ்ருத்தி செய்வதற்காக அகஸ்திய முனிவரால் இது செய்யப்பட்டதாம். 30—37.

குடஜாவலேஹம்.

வெட்பால மரப்பட்டையில் நூறு பலம் ஒரு த்ரோண பரிமாண ஜலத்தில் சேர்த்து காய்ச்சவேண்டும். சேர்த்த ஜலத்தில் நான்கில் ஒரு பாகம் மிகுந்திருக்குமாறு காய்ச்சி வஸ்திரத்திலிட்டு வடிக்கட்டி, அதில் முப்பது பலம் வெல்லம் சேர்த்து பாகுபோல் வருமளவும் கிளறிக்கொண்டே மீண்டும் காய்ச்சவும்; அப்பொழுது இரஸாஞ்ஜநம்,[1] இலவம்பிசின், த்ரிகடு, த்ரிபலை, நறுவிலி, சித்திரமூலம், வட்டத்திருப்பி, பில்வம், வெட்பாலரிசி, வசம்பு, சேராங்கொட்டை, அதிவிடயம், வாய்விடங்கம், முள்ளங்கி இவற்றை ஒவ்வொரு பலமெடுத்து சூர்ணம் செய்து, மேற்கூறிய அவலேஹத்தில் சேர்த்து, அத்துடன் நான்கு பலம் நெய்யையும் ஊற்றி நன்றாகக் கூட்டி பக்குவம் செய்து இறக்கிவிடவும்; அப்பால் சிறிது ஆறியவுடனே நான்கு பலம் தேன் சேர்த்துக் கலந்து விடவும். இந்த லேஹ்யத்தை உட்கொள்வதால் ஸகல விதமான அர்சோரோகங்களும் சீக்கிரத்தில் நிவ்ருத்தியாகும்; மேலும் அர்சஸ்ஸாலுண்டாகிற இதர ரோகங்களும், அதிஸாரம், அரோசகம், கிரஹணீ, பாண்டுரோகம், இரக்தபித்தம், காமாலை, அம்லபித்தம்,சோதையென்னும் சோகை, சரீர இளைப்பு, சீதபேதி இவைகளும் தீரும். இதற்கு அநுபானமாக நெய், மோர், பால், தயிர் இவற்றையாவது, நெய் ஜலம் இவ்விரண்டையுமாவது உபயோகிக்கலாம். உட்கொண்ட ஔஷதம் நன்கு ஜீர்ணமானதும் சரீரம் நன்றாக ஏற்றுக்கொள்ளக்கூடிய உணவுகளை உசிதப்படி புஜித்துவரவேண்டும். 38—44½.

இரண்டாம் குடஜாவலேஹம்.

வெட்பால மரத்தின் நூறு பலங்கொண்ட பசுமையான பட்டையை ஒரு த்ரோண ஜலத்தில் சேர்த்துக் காய்ச்சவும்; அக்கஷாயம் நான்கில் ஒரு பாகமாகக் காய்ந்ததும் வடிக்கட்டி, அதன் பிறகு நறுவிலிப்பட்டை, ஆரைப்பூ, பில்வப்பட்டை, வட்டத்திருப்பி, இலவம்பிசின், கோரைக்கிழங்கு, அதிவிடயம் இவற்றில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பலமெடுத்து சூர்ணம் செய்து அக்கஷாயத்தில் சேர்த்து மறுபடியும் கரண்டியில் குழம்பாகப் பற்றிக்கொள்ளும் வரையில் பக்குவம் செய்யவேண்டும். இந்த அவலேஹத்தை ஜலத்துடனாவது, ஆட்டுப்பாலுடனாவது, பாலேட்டோடாவது உட்கொள்ள பற்பல நிறமாக வேதனையுடன் உண்டாயிருக்கும் வெகு கடுமையான அதிஸாரங்களும், ரக்தப்ரதரமென்னும் பெரும்பாடு, ஸகலவிதமான அர்சோரோகங்கள், சீதபேதி இவைகளும் தீரும் 45—48½.

---

1. இரஸாஞ்ஜநம்—மரமஞ்சளின் கஷாயத்தினால் செய்யப்படும் ஒருவித ஸத்துவம்போன்ற அஞ்ஜநம்.

டாக்டர், உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை-600090.

ஒன்பதாம் அத்தியாயம்.

(¹ ஸ்நேஹ கல்பனை.)

ஸ்நேஹபாகத்திற்கு ஸாமானிய விதி.

க்ருதமாவது ² தைலமாவது பக்குவம் செய்யப்படவேண்டுமானல், அதில் சேர்க்கப்படும் கல்கத்திரவ்யங்களினும்³ க்ருதம் அல்லது தைலத்தை நான்கு மடங்கும், தைலம் அல்லது க்ருதத்தினும் நான்கு மடங்கு ஜலமும் சேர்த்து பக்குவம் செய்யவேண்டும்; இத்தைலத்தை அல்லது க்ருதத்தை ஒரு பலம் பரிமாணத்தில் பொழுவாக உட்கொள்ளலாம். அல்லது மற்றொரு முறையிலும் ஸ்நேஹங்களைப் பக்குவம் செய்யலாம்; அதாவது கஷாயத்திலிடவேண்டிய ஔஷதச் சரக்குகள் ஒரு பங்கானல், அதற்கு நாலு பங்கு ஜலம் சேர்த்து, அதை நாலில் ஒரு பங்காகக் காய்ச்சி, அக்கஷாயத்தைக்கொண்டு ஸ்நேஹங்களைத் தயார் செய்யலாம். 1,2.

ஸ்நேஹபாகத்தில் விசேஷ விதிகள்.

கஷாயமிடக்கூடிய சரக்குகள், அவற்றின் தன்மைகளைப்பற்றி மிருது பதார்த்தங்கள், கடினபதார்த்தங்கள், அதிகடின பதார்த்தங்கள், மத்திம பதார்த்தங்கள் என்று நாலு விதமாகப் பகுக்கப்பட்டுள. அவற்றுள் மிருதுவான பதார்த்தங்களிடவேண்டிய கஷாயத்தில் அப்பதார்த்தங்களைக்காட்டிலும் ஜலம் நாலுபங்கும், கடின பதார்த்தங்களுக்கு எட்டு பங்கு ஜலமும், அதிகடினபதார்த்தங்களுக்குப் பதினறுபங்கு ஜலமும் சேர்க்கப்படவேண்டும்; மிருதுவுமல்லாமல் கடினமுமாகாத மத்திமமான வஸ்துக்களுக்கும் எட்டுமடங்கு ஜலந்தான் சேர்க்கவேண்டும். கஷாயத்தில் சேர்க்கப்படவேண்டிய வஸ்துக்கள் கால்பலம் முதல் ஒரு பலத்திற்கு மேற்படாதவையா யிருந்தால், ஜலத்தை அப்பதார்த்தங்களைக் காட்டிலும் பதினறுமடங்காகச் சேர்க்கவேண்டும், ஒரு பலத்திற்கு மேல் நாலு பலத்திற்கு மேற்படாமலிருந்தால் எட்டுபங்கு ஜலமும், ஒரு பிரஸ்த்தம் முதல் ஒரு காரீவரையில் ⁴ நாலுபங்கு ஜலமும் சேர்க்க வேண்டும். கேவலம் ஜலத்தைக்கொண்டோ, க்வாதங்களைக்கொண்டோ, ஸ்வரஸங்களைக்கொண்டோ ஸ்நேஹம் பக்குவம் செய்ய வேண்டுமென்று கூறப்படுமிடத்து, அவற்றில் கல்கத்

---

1. ஸ்நேஹம்—நெய், தைலம் முதலிய எண்ணெய்ப்பொருட்கள்.

2. க்ருதம்—நெய்.

3. கல்கம்—க்ருதம், தைலம் முதலியவற்றை கஷாயாதிகளில் பக்குவம் செய்கையில், அவற்றின் குணத்தை அதிகப்படுத்துவதற்காக தைலாதிகளில் சூர்ணமாகவோ அல்லது ஈரமாகவே இடித்தோ சேர்க்கப்படும் வஸ்துக்களாம்.

4. காரீ—நாலாயிரத்துத் தொண்ணூற்றாறு பலம். [நாலு பலங்களுக்கு மேற்பட்டு ஒரு பிரஸ்த்தத்திற்கு அதிகப்படாத கஷாயத்திரவ்யங்களுக்கு எவ்வளவு ஜலம் சேர்த்து பக்குவம் செய்யவேண்டுமென்பது கூறப்படாவிடினும், இதற்குக் கீழ் 4 மடங்கும், இதற்கு மேல் 8-மடங்கும் ஜலம் சேர்க்க வேண்டுமென்று குறிக்கப்பட்டிருப்பதை நோக்கி இவற்றிற்கு மத்திமமாக 6-பங்கு ஜலம் சேர்க்க வேண்டுமென்பது கருத்தாம்.]

தை முறையே ஸ்நேஹத்தினும் நாலிலொருபங்கு, ஆறிலொருபங்கு, எட்டிலொருபங்கு இவ்வாருகச் சேர்க்கவேண்டும். எந்த ஸ்நேஹபாகத்தில் தயிர், பால், மாம்ஸரஸம், மோர் இவற்றில் ஏதேனும் சேர்க்கப்படுகிறதோ அதில் கல்கத்தை ஸ்நேஹத்தினும் எட்டில் ஒரு பங்காகச் சேர்க்கவும்; இவ்வாறு பால் முதலியவற்ருலேயே பக்குவம் பண்ணப்படும் ஸ்நேஹங்களில் கல்கபதார்த்தங்கள் நன்கு பக்குவமாவதற்காக நாலுபங்கு ஜலமும் சேர்க்கப்படுவது அவசியம். எந்த ஸ்நேஹங்களை ஐந்து விதங்களுக்குக் குறையாத திரவபதார்த்தங்கள் சேர்த்து பக்குவம் பண்ணவேண்டுமென்று கூறப்படுகிறதோ, அவற்றில் ஒவ்வொரு திரவபதார்த்தத்தையும் ஸ்நேஹத்திற்கு ஸமான அளவில் சேர்க்கவேண்டும்; திரவபதார்த்தங்கள் ஐந்து விதங்களுக்குக் குறைவாக இருந்தால், அவற்றை ஸ்நேஹத்தைக் காட்டிலும் நாலுபங்கு அளவில் சேர்க்கலாம். ஜலம் சேர்க்கப்படாமல் ஏதேனும் திரவபதார்த்தத்தால் மட்டும் ஒரு ஸ்நேஹம் பக்குவம் பண்ணப்பட வேண்டுமென்ருல், அதில் ஸ்நேஹம் நன்கு பக்குவமாவதற்காக நாலுமடங்கு ஜலத்தைச் சேர்ப்பதுடன், கல்கத்தையும் ஜலம் விட்டுப் பிசைந்து உபயோகிக்கவேண்டும். ஒரு ஸ்நேஹபாகத்திற்கு க்வாதம் மாத்திரம் இவ்வித சரக்குகளால் தயார் செய்யப்படவேண்டுமென்று கூறி, கல்கம் முதலியது கூறப்படாமலிருந்தால், அதில் க்வாதத்திற்கு உபயோகித்த வஸ்துக்களையே கல்கமாகவும் சேர்க்க வேண்டும். கல்கமே சேர்க்காமல் ஸ்நேஹபாகம் செய்வதானுல், அந்த ஸ்நேஹத்தை ஸ்வரஸம் முதலிய ஏதேனும் திரவபதார்த்தத்தில் தனியாகப் பக்குவம் செய்ய வேண்டும்; ஆனுல் ஏதேனும் திரவபதார்த்தால் மட்டும் பக்குவம் பண்ணப்படும் அவ்வித ஸ்நேஹபாகத்தில் ஏதாவது புஷ்பவகைகளையே கல்கமாக உபயோகிக்கவேண்டியிருந்தால், அப்பொழுது அந்த ஸ்நேஹத்தில் நாலு பங்கு ஜலமும் சேர்க்கப்படவேண்டும்; அவ்வாறு ஸ்நேஹங்களில் புஷ்பகல்கம் சேர்க்கப்படவேண்டுமானுல், அக்கல்கத்தை ஸ்நேஹத்தினும் எட்டில் ஒரு பங்காகச் சேர்க்கவும். 3—11½.

ஸ்நேஹம்பக்குவமானதின் அறிகுறிகள்.

ஸ்நேஹத்திலிடப்பெற்ற கல்கத்தில் ஒரு சிறிதளவு எடுத்து விரல்களால் உருட்டினுல் அக்கல்கம் திரிபோல் உருண்டுவரும்; அதை அக்னியிலிட்டால் சுட சுடவென்கிற சப்தமுமிராது; ஸ்நேஹங்கள் பக்குவமாய் விட்டதற்கு இவையே பொதுவான இலக்ஷணங்களாம்; மேலும் அதில் சேர்க்கப்பட்டுள்ள ஸ்நேஹம், கல்கத்திரவ்யங்கள் இவற்றிற்கு இயற்கையான மணம், நிறம், சுவை என்னும் இவைகளும் ஸ்நேஹம் நன்கு பக்குவமான ஸமயத்தில் வெளிப்படையாகத் தெரியவரும். ஆனுல் தைலபாகத்தில் நன்கு பக்குவமாகிற ஸமயத்தில் நுரையுண்டாய் தைலத்திற்கு வாஸனைமுதலியது தோன்றும்; க்ருதபாகத்தில் பக்குவமான ஸமயத்தில் நுரைகளுண்டாய், பிறகு அவை அடங்கி க்ருதம் தெளிவாகவும் வாஸனை முதலியதுடையதாகவும் காணப்படும். 12-13½.

மூன்றுவிதமான ஸ்நேஹபாகம்.

ஔஷதமாக உபயோகப்படுமாறு பக்குவம் செய்யப்படும் ஸ்நேஹபாகமானது மிருது, மத்திமம், கடினம் என மூன்று வகைப்படும். அவற்றுள் சிறிது கஷாயமுதலியவற்றின் இரஸத்துடன் கூடிய கல்கமுடையதான ஸ்நேஹபாகமானது மிருதுபாக மென்றும், கல்கத்தில் இரஸமேயில்லாமல் சிறிது மெதுவாயுள்ள கல்கத்துடன் கூடிய ஸ்நேஹபாகமானது மத்திமபாக

மென்றும், சிறிது உரப்பான கல்கமுள்ள ஸ்நேஹபாகமானது கடினபாகமென்றும் கூறப்படும். 14—15½.

உபயோகிக்கத்தகாத ஸ்நேஹபாகங்கள்.

ஔஷதமாக உபயோகிக்கத்தகாத இரண்டுவிதமான ஸ்நேஹபாகங்களுண்டு; அவை-தக்த்தபாகமென்றும், ஆமபாகமென்றும் கூறப்படும்; கடினபாகத்திற்கும் மேல் முறியுந்தன்மையடைந்தால் அவ்வித ஸ்நேஹபாகம் தக்த்தபாகம் என்றும், மிருது பாகத்திற்கும் குறைவான பாகம் ஆமபாகம் என்றும் கருதப்படும். இவற்றுள் தக்த்தபாகமான ஸ்நேஹமானது தாபத்தையுண்டாக்குவதுடன், பெரும்பாலும் பயனற்றதாகவுமிருக்கும்; ஆமபாகமான ஸ்நேஹமானது வீர்யமற்றதாகவும், அக்னிமாந்த்யமுண்டு பண்ணக்கூடியதாகவும், ஆகவே குருகுணமுள்ளதாகவுமிருக்கும். 16½.

பாகபேதத்தினுல் உபயோக பேதம்.

முற்கூறிய மூன்றுவிதமான ஸ்நேஹபாகங்களுள் மிருதுபாகமாகச் செய்த ஸ்நேஹம் நஸ்யகர்மத்திலும், மத்திமபாகமான ஸ்நேஹம் ஸகலவிதமான சிகித்ஸைகளிலும், கடினபாகமான ஸ்நேஹம் அப்யங்கத்திலு முபயோகமாகும்; அன்றியும் ரோகம் முதலியவற்றின் நிலைமைக்கேற்றவாறு இவற்றில் எது எவருக்கு ஏற்றதென்று வைத்தியர் நிச்சயித்துக்கொள்ளவேண்டும். 17½.

ஸ்நேஹங்கள் பழகவேண்டும்.

க்ருதம், தைலம், லேஹ்யம் முதலானவற்றை ஒரு தினத்திலேயே பக்குவம் செய்து உபயோகித்துவிடக்கூடாது; இவற்றை சிறிது நாள் பழகவைத்து உபயோகித்தால் விசேஷமாக குணந்தரக்கூடியவைகளாகும். 18½.

க்ருதபாகங்கள்.

பிப்பல்யாதி க்ருதம்.

திப்பிலி, மோடி, சவ்விபம், சித்திரமூலம், சுக்கு, இந்துப்பு இவற்றில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பலம் சேர்த்து, ஒரு பிரஸ்த்தம் நெய்யை அதற்கு நாலு பங்கு பாலில் கலந்து பக்குவம் செய்யவும்; இந்த க்ருதம் ப்லீரோஹங்கள், விஷமஜ்வரங்கள், அக்னிமாந்த்யம், அரோசகம் இவற்றைப் போக்கும். 19—20½.

சாங்கேரீ க்ருதம்.

திப்பிலி, யோடி, சித்திரமூலம், யானைத்திப்பிலி, நெரிஞ்சில், சுக்கு, கொத்தமல்லி விதை, வட்டத்திருப்பி, பில்வவேர்ப்பட்டை, குராசானியோமம் இவற்றில் ஒவ்வொரு பலம் இடித்துச் சேர்த்து, அறுபத்துநான்கு பலம் நெய் ஊற்றி, நெய்க்கு நாலுமடங்கு புளியாரையின் ஸ்வரஸத்தையும், நாலு மடங்கு தயிரையும் சேர்த்து, சிறுகச் சிறுக க்ருதத்தைப் பக்குவம் செய்யவேண்டும்; இது 'சாங்கேரீக்ருதம்' என்று கூறப்படுகிறது. இந்த க்ருதமானது கபவாதங்கள், கிரஹணீரோகம், அர்சஸ், வயிற்றுப் பொருமல், குதம் நெழுகுதல், மூத்திரக்ருச்சிரம், சிதபேதி இவற்றைப் போக்குவதில் வெகு சிறந்த ஔஷதமாகும். 21—24½.

நூறுபலம் சிறுகடலையை ஒருத்ரோண பரிமாணங்கொண்ட ஜலத்தில் சேர்த்து, நாலில் ஒருபங்கு கஷாயமாகக் காய்ச்சி, பில்வவேர் எட்டுபலமும், நெய்

மஸூராதி க்ருதம். பதினாறு பலமும் சேர்த்து பக்குவம் செய்யவேண்டும்; இது ஸகலவிதமான அதிஸாரங்கள், கிரஹணீ, ப்ரவாஹிகா என்னும் சீதபேதி இவற்றைப் போக்கும். 25—26¼.

காமதேவ க்ருதம். அமுக்கிருங்கிழங்கு நூறுபலம், நெரிஞ்சில் ஐம்பது பலம், சிற்றாமுட்டி, சீந்திற்கொடி, சிறுமல்லி, நிலப்பனங்கிழங்கு, தண்ணீர்முட்டாங்கிழங்கு, சாறடை, அரசம்பட்டை, சுக்கு, குமிழம்பழம், தாமரைக்கிழங்கு, உளுந்து இவை ஒவ்வொன்றும் பத்துபலம், இவற்றை நான்கு த்ரோணம் ஜலம் சேர்த்து நாலில் ஒருபங்காக வற்றும்படி காய்ச்சி, அதில் ஜீவநீயகணம்[1], கோஷ்டம், அல்லிக்கிழங்கு, செஞ்சந்தனம், இலவங்கப்பத்திரி, திப்பிலி, திராக்ஷை, காஞ்சோறிக்காய், கருநெய்தல், நாகப்பூ, நாட்டுநன்னாரி, சீமைநன்னாரி, சிற்றாமுட்டி, பேராமுட்டி இவற்றை தனித்தனியே கால்பலம் இடித்து, இரண்டுபலம் சர்க்கரையுங்கூட்டி, நாமக்கரும்பின் சாற்றில் ஓர் ஆடகமும், நெய் ஓர் ஆடகமும் சேர்த்து, சிறுகத்தீயிட்டு பக்குவம் செய்யவேண்டும். இந்த க்ருதம் இரக்தபித்தம், உரக்ஷதம், ஹலீமகம், பாண்டு, ஸ்வரபேதம், வாதரக்தம், மூத்திரக்ருச்சிரம், பார்ச்வசூலை, காமாலை, சுக்ரம் க்ஷீணித்தல், மாரெரிவு, சரீரமெலிவு, ஓஜஸ்க்ஷயித்தல் இவற்றைப் போக்கும்; கருத்தரிக்காத ஸ்த்ரீகளுக்கு கருப்பந்தரிக்கும் சக்தியையும் புருடருக்கு சுக்ரத்தையும் உண்டுபண்ணும்; இருதயத்திற்கும் மற்ற அங்கங்களுக்கும் பலத்தை விருத்திபண்ணும் சிறந்த இரஸாயனம்; காமதேவக்ருதம் என்று இதன் பெயர். 27—35.

த்ரிபலாதி க்ருதம். த்ரிபலை, மஞ்சள், மரமஞ்சள், தக்கோலம், நாட்டுநன்னாரி, சீமைநன்னாரி, ஞாழல், சிறுமல்லிகை, பெருமல்லிகை, தேவதாரு, ஏலவாலுகமென்கிற கந்தத்திரவ்யம், கிரந்திதகரம், தும்மட்டி, நேபாளம், மாதுளை, நாககேஸரம், கருநெய்தல், ஏலம், மஞ்ஜிஷ்டை, வாய்விடங்கம், கோஷ்டம், அல்லிக்கிழங்கு, இலவங்கம், சந்தனம், தாளிஸப்பத்திரி, கண்டங்கத்திரி இவற்றில் ஒவ்வொன்றிலும் கால்பலம் இடித்துச் சேர்த்து, இவையனைத்துக்கும் நாலுமடங்கு ஜலம் சேர்த்து கஷாயமாகப் பக்குவம் செய்து, ஒரு பிரஸ்த்தம் நெய்யை அதில்சேர்த்துக் காய்ச்சவேண்டும். இந்த க்ருதத்தை அபஸ்மாரம், ஜ்வரம், க்ஷயம், உன்மாதம், வாதரக்தம், காஸம், அக்னிமாந்த்யம், பிரதிச்யாயம், இடுப்புவலி, த்ருதீயகஜ்வரம், சாதுர்த்திகஜ்வரம், மூத்திரக்ருச்சிரம், விஸர்ப்பம், சொரிசிரங்குகள், பாண்டுரோகம், ஸ்த்தாவர ஜங்கமவிஷங்களாலுண்டாகும் தீங்குகள், பிரமேஹரோகங்கள் இவற்றில் உபயோகிக்கலாம்; மேலும் ஸ்த்ரீகளுக்கு மலட்டுத் தன்மையைப் போக்கவும், பூதங்கள், யக்ஷர்கள், இராக்ஷஸர் இவற்றாலுண்டாகும் சங்கைகளை அகற்றவும் இவ்வௌஷதம் ஏற்றதாகும். 36—41.

அம்ருதாதி க்ருதம். சீந்திற்கொடியைக் கஷாயமிட்டு, அக்கஷாயத்தில் அக்கொடியையே சூர்ணம் செய்து கல்கமாகச் சேர்த்து, பாலூற்றி, நெய்யையும் அதில்சேர்த்து பக்குவம் செய்யலாம்; இந்த க்ருதமானது வாதரக்தத்தை சீக்கிரத்தில் போக்கும்; மிகவும் முதிர்ந்துபோன குஷ்டத்தையும் நிவ்ருத்தி செய்யும். 42.

---

1. ஜீவநீயகணம்—96-வது பக்கத்தில் மூலத்தையும் டிப்பணியையும் பார்க்க.

ஸ்வேத சிகித்ஸைக்குத் தகாதவர்.

அஜீர்ணம், துர்ப்பலம், மேஹரோகம், க்ஷதக்ஷீணம், நாவரட்சி, அதிஸாரம், இரக்தபித்தம், பாண்டு, மஹோதரம் முதலிய வயிற்றைப்பற்றிய வியாதிகள், வெறி இப்பிணிகளால் பீடிக்கப்படுபவரும், கர்ப்பிணியும் ஸ்வேத சிகித்ஸைக்கு உரியவராகார்.—11,12.

மிருது ஸ்வேதத்திற்குரிய நிலைமை.

ஆனால் முற்கூறியவர்களுக்கும் அவசியம் ஸ்வேதசிகித்ஸை செய்யவேண்டிய நிலைமை நிர்ப்பந்தமாயேற்பட்டால் துர்ப்பல ஸ்வேதமெனப்படும் மிருதுஸ்வேதம் செய்வது உசிதமாம். மேலும் இருதயம், பீஜங்கள், கண்கள் இவ்விடங்களிலும் மிருது ஸ்வேதமே செய்யவேண்டும்.—13.

அளவு மீறிய ஸ்வேதத்தினால் உண்டாகும் தீமையும் பரிஹாரமும்.

ஸ்வேத சிகித்ஸையை மிதமிஞ்சிச் செய்துவிட்டால் மூட்டுகளில் வேதனை, நாவரட்சி, தேஹ அழற்சி, சரீரவாட்டம், தலைச்சுற்றல், இரக்தபித்தம், பிடகைகளென்னும் விரணங்கள், கோபம் இவை உண்டாகும். இவ்விதம் நேரிட்டால், சீதோபசாரம் செய்து இக்கோளாறுகளை அடக்கவேண்டும்.—14.

தாபஸ்வேதம்.

இவற்றுள் தாபஸ்வேதம் செய்யவேண்டுமானால், அதற்கு அக்னியிற் காய்ச்சிய மணல், வஸ்திரம், கரங்கள், ஓடுகள், பந்துகள், தழல்கள் உள்ளடங்கிய பாத்திரங்கள் முதலியவற்றால் ஒற்றடம் கொடுத்து அவ்விதியை நிறைவேற்றவேண்டும். மணல் முதலியவற்றில் எங்கெந்த வஸ்து எங்கெந்த நிலைமைக்கு உற்றதென்பதை வைத்தியர்கள் உற்றுணர வேண்டும்.—15.

ஊஷ்மஸ்வேதம்.

இரும்புக்குண்டுகள், செங்கல், மற்றும் பலவிதமான கற்கள் இவற்றை அக்னியிலிட்டுக் காய்ச்சி, காடியில் சேர்த்து, அதிலிருந்து கிளம்பும் ஆவி சரீரமெங்கும் படும்படி வஸ்திரங்களால் உடம்பைப் போர்த்துக்கொண்டு செய்யப்படும் சிகித்ஸாமுறை ஊஷ்மஸ்வேதம் எனப்படும். அல்லது வாதஹரமான திரவியங்களால் பக்குவம் செய்யப்பெற்ற க்வாதங்கள், ஸ்வரஸங்கள் முதலானவற்றைக் கொதிக்கும் நிலைமையில் ஒரு குடத்தில் கொட்டி நிரப்பி, அதன் வாயை மூடிவிடவேண்டும்; ஆனால் அப்பாத்திரத்தின் ஒரு பாரிசத்தில் முன்னதாய் சிறிது த்வாரம் செய்து, மரம், மூங்கில், இதர லோஹவகைகள் முதலியவற்றில் ஏதேனும் ஒன்றால் கோபுச்சம்போல் செய்த இரண்டுமுழம் நீளமுள்ள ஒரு குழாயை அந்த த்வாரத்தில் அமைத்திருக்கவேண்டும். ஸ்வேதம் செய்துகொள்ளவேண்டிய பிணியாளிக்கு முதலில் அப்யங்கம் செய்வித்து, அவனுடம்பை கனமான போர்வைகளால் போர்த்து ஓர் ஆஸனத்தில் அல்லது வேறு இடத்தில் ஸுகமாயுட்காரவைத்து, துதிக்கையைப்போன்ற அக்குழாய் மூலமாய் வரும் ஆவியை அவனுடம்பில் விடவேண்டும். இந்த ஸ்வேதம் விசேஷமாக வாதரோகிக்கு குணந்தரத்தக்கது. அல்லது ஒரு புருஷப்பிரமாணம் அகல நீளமுள்ளதாய் பூமியில் சிறிது ஆழமுள்ள பள்ளம் தோண்டி, அதில் கருங்காலிக்கட்டைகளை யிட்டு எரித்து, அப்பால் அதிலுள்ள நெருப்பை அப்புறப்படுத்தி, அப்பள்ளத்தில் பால், காடி, ஜலம் இவற்றைத் தெளித்து, வாதஹரமான இலை தழைகளால் அதை மூடி, அதன்மேல் தழைகளைக்கொண்டு படுக்கையிட்டு, அதன்மேல் பிணியாளியைப் படுக்கச்

செய்தால் சரீரம் நன்கு வியர்க்கும். இவ்விதமாகவே உளுந்து முதலியவற்றையும் வேகவைத்து அவற்றால் சயநமேற்படுத்தி, அதில் மனிதனைப் படுக்கச்செய்து ஸ்வேதநம் செய்யலாம்.—16—21.

உபநாஹஸ்வேதம். பிறகு உபநாஹஸ்வேத முறை எங்ஙனமெனில்:—முதலில் வாதஹரமான ஔஷதங்களை பால், மாம்ஸரஸம், காடிகள், உப்பு, ஸ்நேஹவர்க்கங்கள் இவற்றைச் சேர்த்து அரைத்து சிறிது சூடேற்றி வாதரோகத்தினால் வருந்துபவருடைய தேஹத்திற் பூசவேண்டும். கிராமங்களுக்கு அருகில் நீர்வளமுள்ள செழிப்பான இடங்களில் ஸஞ்சரிக்கும் மிருகபக்ஷிகளின் மாம்ஸம், ஜீவநீய கணத்திற் கூறப்பட்டுள்ள ஔஷதச்சரக்குகள்[1], தயிர், காடி, க்ஷாரங்கள், வீரதர்வாதி கணத்திற்கூறிய[2] சரக்குகள், கொள், உளுந்து, கோதுமை, ஆளிவிதை, எள், கடுகு, சதகுப்பை, தேவதாரு, கருநொச்சி, ஜீரகம், ஆமணக்கன்வேர், ஆமணக்குவிதை, சிற்றரத்தை, முள்ளங்கி, முருங்கை, ஜடாமாம்ஸி, திப்பிலி, கஞ்சாங்கோரை, உப்புகள், அம்லபதார்த்தங்கள், முதியார்கூந்தல், அமுக்கிருங்கிழங்கு, சிற்றாமுட்டி, தசமூலம்[3], சீந்தில், பூனைக்காலிவிதை இவற்றுள் கிடைக்கக்கூடியவற்றைக் கிரஹித்து இடித்து, வதக்கி, வஸ்திரத்திற் கட்டி ஒற்றடம் கொடுப்பதுபோல் ஸ்வேதநம் செய்யலாம். உபநாஹஸ்வேதத்திற்கு உபயோகிக்கப்படும் இம்முறை 'மஹா சால்வணம்' என்று வழங்கப்படும். இது ஸகலவிதமான வாதரோகங்களையும் அகற்றும். 22—27½.

திரவஸ்வேதம். திரவஸ்வேதம் எவ்விதமென்றால்:—வாதஹரமான திரவ்யங்களாலான கஷாயத்தினால் ஓர் சாலையாவது தொட்டியையாவது நிரப்பி, நாபிக்குமேல் ஆறு அங்குலம் வரையில் சரீரம் அமிழ்ந்திருக்குமாறு பிணியாளியை அதில் உட்காரச் செய்யவும். ஆனால் இதற்குமுன் தைலம் முதலானதைக் கொண்டு பிணியாளியின் சரீரத்தை ஸ்நிக்த்தமாகச் செய்துவைப்பது நலம். அந்த கஷாயத்தில் உட்கார்ந்த பிறகு, அதே க்வாதத்தை இளஞ்சூடாக எடுத்து இரு தோள்களிலும் தாரைபோல் விடவேண்டும். இவ்விதமாகவே நோயாளிக்கு தைலத்தினாலும், பாலாலும், நெய்யாலும் ஸ்வேத சிகித்ஸை செய்யலாம். ஸ்நேஹங்களில் அமிழ்ந்து ஸ்வேத சிகித்ஸை செய்யவேண்டுமானால், ஒரு நாள் அல்லது இரண்டு நாள் இடையில் விட்டுவிட்டுச் செய்வது நலம். தைலம் முதலிய ஸ்நேஹவகைகளில் மூழ்கி ஸ்வேத சிகித்ஸை செய்துகொண்டால், மயிர்க்கால்களாலும், விரைகளின்[4] மூலமாகவும், தமனிகள் மூலமாகவும்[5] அந்த ஸ்நேஹங்களின் அம்சங்கள் சரீரத்தி

---

1. ஜீவநீய கணம்—ஜீவகம், ருஷபகம், மேதா, மஹாமேதா, காகோலீ, க்ஷீரகாகோலீ, மாஷபர்ணீ, முத்கபர்ணீ, ஜீவந்தீ என்பவையாம். இவற்றிற்கு இதர பாஷைகளில் பெயர் கிடைப்பது அரிது.

2. வெட்டிவேர், அகில், ஈச்வரமல்லி, ஆடாதோடை, கல்லுருவி, நெரிஞ்சி, இச்கடாயென்னும் ஒருவித சிவந்தமூலிகை, மருதோன்றி, கருங்குறிஞ்சி, ஞாழல், சீந்தில், சவுட்டுக்கோரை, தர்ப்பம், காவட்டம்புல், பேய்க்கரும்பு, பெருவாகை, விழுதி, வாடாக்குறிஞ்சி, உத்தாமணி, மருதை இவை வீரதர்வாதி கணம்.

3. தசமூலம்—115-வது பக்கம் டிப்பணியைப் பார்க்க.

4. விரைகள்—சாரிரத்தக் குழாய்கள்.

5. தமனிகள்—செவ்விரத்தக்குழாய்கள்.

னுள் வியாபித்து தேஹத்திற்கு வன்மையைத் தருகின்றன. விருக்ஷத்தின் வேர்களில் ஊற்றிய ஜலத்தினுல் அதில் முளைகளும் கிளைகளும் செழித்து வளருவதுபோலவே, ஸ்நேஹத்தில் அமிழ்ந்து ஸ்வேதம் செய்து கொள்வதால் சரீரத்தில் தாதுக்கள் விருத்தியடைகின்றன. வாயுவினுலுண்டான கோளாறுகளைப் போக்குவதற்கு இதைக்காட்டிலும் சிறந்த உபாயம் வேறொன்றில்லை. 28—33.

ஸ்வேத சிகித்ஸையை நிறுத்தவேண்டிய ஸமயம்.

அதிக சைத்யமும் வலியும் ஒழிந்து, அவயவங்களின் பிடிப்பும் பாரமும் குறைந்து, அக்னி தீபனமுண்டாய், தேஹம் மிருதுவாகவும் ஆயிற்ருனுல் ஸ்வேத சிகித்ஸையை நிறுத்திவிடவேண்டும். 34.

ஸ்வேதம் முடிந்ததும் செய்யவேண்டிய காரியம்.

நன்கு ஸ்வேதசிகித்ஸை செய்து முடிந்ததும், சரீரத்தை நன்குகப் பிடித்து விடவேண்டும்.[1] பிறகு உஷ்ணஜலத்தில் ஸ்நானம் செய்து, அபிஷ்யந்தியென்னும்[2] குணமில்லாத ஆஹாரத்தை மெதுவாகப் புஜிப்பது நலம். ஸ்வேத சிகித்ஸை செய்து கொண்டவன் உடனே வியாயாமம்[3] செய்யக்கூடாது.—35.

மூன்ருவது அத்தியாயம்.

(வமனவிதி.)

வமன விரேசனங்களுக்கேற்ற காலம்.

சரத்ருது, வஸந்தருது, வர்ஷருது இக்காலங்களில் பிணியாளருக்கு விஷமமிந்த் வைத்தியர்கள் வமனம், விரேசனம்[4] இவற்றைச் செய்விப்பார்கள்.—1.

வமனத்திற்கு உரியவர்.

வலிவுள்ளவர், கபம் ப்ரகோபித்து அதனுல் வருந்துபவர், ஹ்ருல்லாஸமென்னும் இருதயத்தைப்பற்றிய வியாதியினுல் பீடிக்கப்படுபவர், வமனசிகித்ஸையை ஹிதமாகக் கொண்டவர், மனுேதைரியமுள்ளவர் இவ்வித மனிதர்கள் அந்தந்த ரோகங்களில் வமன சிகித்ஸைக்கு உரியவராகின்றனர்.—2.

---

1. பிடித்து விடுதல்—தேஹத்தை இதமாக மர்த்தனம் செய்தல்.
2. அபிஷ்யந்தி—16-வது பக்கம் பார்க்க.
3. வியாயாமம்—தேஹவுழைப்பு.

4. வமனம்—வாந்தி செய்வித்தல்; விரேசனம்—மலத்தைத் திரவமாக்கி வெளிப்படுத்துவதற்கான சிகித்ஸை; அல்லது பேதியுண்டுபண்ணல்.

வமனம்செய்வதற்கான வியாதிகள்.

விஷ ஸம்பந்தத்தினாலுண்டான கோளாறுகள், ஸ்தன்யரோகம், அக்னிமாந்த்யம், யானைக்கால், அர்புதம், இருதயரோகம், குஷ்டம், விஸர்ப்பம், மேஹரோகம், அஜீர்ணம், ப்ரமம் அல்லது தலைச்சுற்றல், விதாரிகா என்னும் சிலந்தி, அபசி என்னும் புண், காஸம், ச்வாஸம், பீனஸம், அண்டவ்ருத்தி, அபஸ்மாரம், ஜ்வரம், உன்மாதம், இரத்தாதிஸாரம், நாஸாபாகம், தாடையிலுண்டாகும் புண், உதட்டிலுண்டாகும் புண், கர்ணஸ்ராவம் அல்லது காதில் சீழ்வடிதல், உள்நாக்கு வீங்குதல், களசுண்டியென்னும் தொண்டைச் சிலந்தி, அதிஸாரம், பித்தரோகங்கள், கபரோகங்கள், மேதோரோகம், அருசி இந்த ரோகங்களில் வமனம் செய்விக்கவேண்டும். 3—5½.

வமனத்திற்குத் தகாதவர்கள்.

திமிரமென்னும் நேத்திரவியாதி, குன்மம், மஹோதரம் முதலிய உதர வியாதிகள், தேஹம் இளைத்துப்போதல், மிகவும் வயது முதிர்ந்தவர், கர்ப்பிணி, மிகவும் ஸ்தூலித்த தேஹம், க்ஷதகாஸமென்னும் இரத்தகாஸம், வெறி அல்லது மதம், ரூக்ஷசரீரம், பசி, உதாவர்த்தம், கஷ்டப்பட்டு வாந்தி செய்யும் நிலைமை, வேறு தோஷத்தின் ஸம்பந்தமில்லாமல் கேவலம் வாததோஷத்தினாலுண்டான கோளாறு, பாண்டுரோகம், க்ருமிரோகம், படிப்பதால் தொண்டை வரட்சியுறுதல் இவ்வியாதிகளில் வருந்துபவரும், நிரூஹவஸ்தி [1] செய்து கொண்டவரும், சிறு குழந்தைகளும் வமனத்திற்கு உரியவரல்லர். 6—7½.

வமனத்திற்குரியாதவர்களில் சில விலக்கு.

ஆனால் பாண்டுரோகி, வயிற்றில் க்ருமியுள்ளவன், படித்ததால் தொண்டை வறண்டவன் இவர்களுக்கு அஜீர்ணமும் தொடருமானால் அப்பொழுது விஷமுண்டவனுக்குச் செய்வது போலவே வமனம் செய்விக்க வேண்டியது அவசியமாம். 8½.

அதிமதுர க்வாதத்தினால் வமனம்.

பாண்டுரோகம், க்ருமி, தொண்டைவறட்சி இவ்வியாதிகளுடன் அஜீர்ணமும் தொடருமானால் அவர்களுக்கும், வமனத்திற்குரியவரெனப்படும் விஷமுண்டவர் முதலியவருக்கும், கபப்ரகோபத்தினால் வருந்துபவருக்கும் அதிமதுரத்தை க்வாதம் செய்து உட்கொள்ளக் கொடுத்து வமனம் செய்விக்க வேண்டும். 9.

பாலர்முதலிய ஸுகுமார தேஹிகளுக்குச் செய்விக்கத்தகும் வமனமுறை.

ஸுகுமாரதேஹிகள், சரீரம் மெலிந்தவர், பாலர், கிழவர், பலசாலிகள் இவர்களுக்கு வமனம் செய்விக்கக்கூடாது; ஆனால் அவசியமாக இருந்தால் யவாகூவையாவது, பாலையாவது, தயிரையாவது, அல்லது மோரையாவது வயிறு நிரம்ப மேலே எதிர்த்து வரும்படி அவ்வளவு அதிகமாய் உட்கொள்ளச் செய்து வமனம் செய்விக்கவேண்டும்; மேலும் வழக்கத்திலில்லாதவையும் கபத்தை விருத்தி செய்யத்தகுந்தவையுமான ஆஹாரபதார்த்தங்களைக் கொடுத்து நோயாளியின் சரீரத்தினுள் சேர்ந்திருக்கும் தோஷங்களைக்

1. நிரூஹவஸ்தி—இதைப்பற்றிய விவரங்களை இந்த கண்டத்தில் ஆறாவது அத்தியாயத்திற் காண்க.

கல்லிவிட்டு, ஸ்நேஹஸிகித்ஸையும் ஸ்வேத ஸிகித்ஸையும் செய்து வைத்தபின் வமனம் செய்வித்தால் குடலிலிருந்து தோஷங்கள் நன்றாக வெளிவந்துவிடும். 10 11.

வமனத்திற்கு உபயோகிக்கும் பொதுச் சரக்குகள்.

எவ்விதமான வமன ஸிகித்ஸைகளிலும் வமனமுண்டுபண்ண இந்துப்பு அல்லது தேன் உபயோகிக்கத்தகுந்ததாம். ஆனால் வமனமானது ஸில ஸமயம் பார்க்க வழங்காத துன்பத்தைத் தரும்; அவ்வித வமனஸிகித்ஸையை விரும்பாதவருக்கு அதற்கு மாறாக விரேசன ஸிகித்ஸையைச் செய்வது நலம். 12.

வமனத்திற்கு க்வாதம் பக்குவம் செய்யுமுறை.

க்வாதம் செய்வதற்கான வஸ்துக்கள் நான்கு பலமிருந்தால், அவற்றிற்கு ஓர் ஆடக ப்ரமாணம் ஜலம் சேர்த்து, அதில் அரை வாசி மிகும்படி காய்ச்சி யெடுக்கவும். வமன ஸிகித்ஸைக்கு உபயோகிக்க வேண்டிய கஷாயங்களை பெரும்பாலும் இவ்வாறே பக்குவம் செய்யவேண்டும். 13.

வமனத்திற்காக ஔஷதங்களுபயோகிப்பதற்குப் போது அளவு.

வமனத்திற்காக க்வாதங்களையும் உபயோகிக்கவேண்டுமானால் அதில் ஜ்யேஷ்டமாத்திரையென்றும், கனிஷ்ட மாத்திரை யென்றும் மத்யம மாத்திரையென்றும் மூன்றுவிதமான அளவுகள் உண்டு[1]. அவற்றுள் ஒன்பது ப்ரஸ்தம் அளவில் கொடுக்கப்படுவதை ஜ்யேஷ்ட மாத்திரை யெனவும், ஆறு ப்ரஸ்தம் அளவில் கொடுப்பதை மத்யமமாத்திரை யென்றும், மூன்று ப்ரஸ்த்தங்களை கனிஷ்டமாத்திரை யென்றும் சொல்லுவர். மேலும் கல்கம், சூர்ணம், லேஹ்யம் இவற்றை வமனத்திற்காக உபயோகிக்க வேண்டுமானால், அவற்றிற்கு மூன்று பலம் ஜ்யேஷ்டமாத்திரை யாகவும், இரண்டு பலம் மத்யம மாத்திரையாகவும், ஒரு பலம் கனிஷ்டமாத்திரையாகவும் கருதப்படும். இது வமனத்திற்காக ஔஷதங்களுபயோகிப்பதற்கான பொதுப் பிரமாணமாகும். 14, 15.

வமனாதிகளில் ப்ரஸ்த்தத்தின் பரிமாணம்.

வமனத்திற்காகவும், விரேசனத்திற்காகவும், இரத்த மோக்ஷணம்[2] செய்விப்பதற்காகவும் ஔஷதங்களுபயோகிப்பதற்கான அளவுகளில் ப்ரஸ்த்தம் என்கிற பரிமாணம் கூறப்படுமானால், அந்த ப்ரஸ்தம் பதின்மூன்றரைப் பலம் அளவுள்ள தெனக் கருதப்படுமாம்.[3] 16.

---

1. நடுப்பிராயமும் பலமும் வாய்ந்தவருக்குக் கொடுப்பது ஜ்யேஷ்ட மாத்திரை (பெரிய அளவு) என்றும், குழந்தைகளுக்கும் மிகவும் துர்ப்பலர்களுக்கும் கொடுப்பது கனிஷ்டமாத்திரை (சிறிய அளவு) என்றும், மத்யம வயதுள்ளவருக்கும் மத்யம பல முள்ளவருக்கும் கொடுப்பது மத்யமமாத்திரை (மத்திம அளவு) என்றும் கருதப்படும்.

2. இரத்தமோக்ஷணம்—இரத்தத்தை விரைகளிலிருந்து குத்தியெடுத்தல்.

3. வைத்யக பரிபாஷை முதலிய வேறு சில கிரந்தங்களில் வமனம் முதலியவற்றில் ஔஷதப் பிரயோகத்திற்கு 12-பலங்கொண்டது ப்ரஸ்த்த மென்றும், மற்றவைகளுக்கு 16-பலங்கொண்டது ப்ரஸ்த்த மென்றும் கூறப்படுகிறது.

வமனத்திற்கான அளவுகள்.

வமனத்திற்காக ஔஷத முபயோகித்தவருக்கு எட்டுமுறை வாந்தியானல் அல்லது பித்தநீர் வெளிப்படுமானல் அது உத்தம அளவென்றும், ஆறுமுறை வாந்தியானல் மத்யமமென்றும், நான்குமுறையானல் சிறிய அளவெனவும் கூறப்படுகிறது. 17.

தனித் தனி வாத பித்த கபங்களாலான வியாதிகளில் வமனத்திற்குரிய பொருட்கள்.

கடுரஸமும் தீக்ஷ்ணகுணமுமுள்ள பதார்த்தங்களால் கபத்தினலான வியாதிகளிலும், மதுரமும் குளிர்ச்சியும் பொருந்திய வஸ்துக்களால் பித்தத்தினலான வியாதிகளிலும், மிகவும் மதுரமும் இலவணமும் அம்லமும் உஷ்ணவீர்யமுமுள்ள பதார்த்தங்களால் கபம் வாயு இவற்றுலான வியாதிகளிலும் வமனம் செய்விக்கவேண்டும். 18.

கபம் முதலிய வற்றுலான வியாதிகளுக்கேற்ற வமனௌஷதங்கள்.

கபப்ரகோபத்தில் அல்லது கபத்தினலான வியாதியில் திப்பிலி, மதநபலமென்னும் மருக்காரை, இந்துப்பு இவற்றைப் பொடித்து உஷ்ணஜலத்தில் சேர்த்து உட்கொள்ளலாம். பித்தத்தினலான வியாதிகளில் அல்லது பித்தப்ரகோபத்தில் பேய்ப்புடல், ஆடாதோடை, வேம்பு இவற்றை குளிர்ந்த ஜலத்துடன் உபயோகிக்கலாம். கபம் வாதம் இவ்விரண்டாலுமுண்டான வியாதிகளில் அல்லது அவ்விரண்டும் ஒருமிக்க ப்ரகோபித்த நிலைமையில் மதனபலத்தைப் பாலுடன் உட்கொள்ளலாம். அஜீர்ணத்தில் இந்துப்பை உஷ்ணஜலத்துடன் உட்கொண்டு வமனம் செய்யவேண்டும். 19,20.

வமனோபசாரம்.

வமன சிகித்ஸைக்குரிய பிணியாளியை முழங்காலளவு உயரமுள்ள ஓர் ஆஸனத்தில் உட்காரச்செய்து, வமனத்திற்கான ஔஷதங்களை உட்கொள்ளப் பண்ணி, வைத்தியன் மெல்லிய ஆமணக்கந்தண்டை யெடுத்து அதனல் ரோகியின் கண்டத்தைப் பரிசித்து வாந்தியுண்டாகும் வண்ணம் செய்யவேண்டும். வமனம் பண்ணும்போது அப்பிணியாளியின் கன்னங்கள் இரண்டையும் பற்றிக்கொண்டு அவனுக்கு உத்ஸாஹ மூட்டவேண்டும். 21½.

துச்சர்த்தி.

வமனம் தகுந்தவாறு செய்விக்கப்படாமல் உள்ளே தங்கியிருக்கும் தோஷங்கள் முற்றிலும் வெளிவராமற்போனல் அப்பொழுது வாயில் நீர் சுரக்கும்; மாரில் ஒருவிதமான அடைப்பு அல்லது பிடிப்பு உண்டாகும்; குடலில் ஒருவாறு அரிப்பு அல்லது வேதனையும் ஸம்பவிக்கும். இக்குறிகளால் வேண்டிய வளவு வாந்தியுண்டாகவில்லை யென்றறியலாம்; இது 'துச்சர்த்தி' எனப்படும். 22.

அதிவமனம்.

மிதமிஞ்சி வாந்தி செய்யப்படுமானல், தாவறட்சி, விக்கல், ஏப்பம், மயக்கம், நாக்குத் துவளல், கண் புரளுதல், ஹநுஸ்தம்பமென்னும் முகவாய்க்கட்டைப் பிடிப்பு, இரத்தவாந்தி, உமிழ்நீர் அதிகமாகயூறல், தொண்டைக்குள் வேதனை இக்குறிகள் ஸம்பவிக்கும். 23½.

வமனம் மிதமிஞ்சியுண்டானல் மிருதுவாக விரேசனமாகும்படி உபாயம் செய்யவேண்டும். அதிக .வமனத்தினுல் நா இழுக்கப்பட்டு சுருக்கங்கொண்டால் ஸ்நிக்த்தமும் அம்லமும் இலவணரஸமும் உள்ள, ஹ்ருதயத்திற்கு வன்மை தரக்கூடிய வாறு பக்குவம் செய்த க்ருதம், பால், மாம்ஸரஸம் இவற்றால் கபளக்ரஹம்[1] செய்யவேண்டும்; ஆனல் கபளக்ரஹம் செய்வதற்குமுன் புளிப்பான கனிகளைப் புஜிப்பது நலம்; நாக்கு வெளியில் துவளுமாயின், எள் திராக்ஷை இவற்றைக் கல்கம் செய்து அதன் மேல் தடவி மெதுவாகச் சுருங்கி உட்செல்லுமாறு செய்யவேண்டும். கண்கள் பிதுக்கங்கொண்டால், மெதுவாக நேத்திரங்களில் நெய்விட்டுக் கட்டலாம். முகவாய்க்கட்டையின் பிடிப்பு அல்லது தளர்ச்சியில் ஸ்வேத சிகித்ஸையும், வாதகபங்களின் கோளாறுகளை யகற்றக்கூடிய நஸ்ய சிகித்ஸையும்[2] செய்யலாம். வாந்தியில் இரத்தம் வருமானல் இரத்தபித்தத்திற்குக் கூறப்பட்டுள்ள சிகித்ஸை செய்வது நலம். மேலும் நெல்லிக்கனி, இரஸாஞ்ஜனம், வெட்டி வேர், நெற்பொரி, சந்தனக் குழம்பு இவற்றை மந்தமாகச்[3] செய்து, அதில் நெய், தேன், சர்க்கரை இவற்றையும் சேர்த்து உட்கொள்ளச் செய்யலாம்; இதைப் பருகுவதால், அதிக வாந்தியினுலுண்டான நாவறட்சி முதலிய உபத்திரவங்கள் நீங்கிவிடும். 24—29.

அதிவமனத்தினுலுண்டானகோளாறுகளை விலக்குமுபாயம்.

மார்பின் உட்புறம் அல்லது ஹ்ருதயம், தொண்டை, சிரஸ் இவை சுத்தமாதல், நன்ருகப் பசியெடுத்தல், சரீரத்திற்கு இலாகவமுண்டாதல், கபபித்தங்கள் ஒழிந்து விடுதல் என்னும் இவையே நன்கு முறைப்படி வாந்தியானதன் குறிகளாம். 30.

முறைப்படி வாந்தியானதன் குறிகள்.

முறைப்படி வாந்தியானபின்பு, பகற்பொழுது சாய்ந்ததும் அக்னிதீபனமுண்டாயிருப்பதை யறிந்து பயறு, காரரிசி, சம்பா, ஹ்ருதயத்திற்கு பலந்தரக்கூடிய மாம்ஸரஸரஸம் இவற்றால் யூஷம்[4] செய்து அப்பிணியாளிக்குக் கொடுக்க வேண்டும். 31.

வமனத்திற்கான பத்தியம்.

சோம்பல், அதிநித்திரை, வாயில் துர்நாற்றம், குடலில் அரிப்பு, கிரஹணீ, விஷம் இவற்றாலுண்டாகும் தீங்குகள் நன்கு வமனம் செய்வதால் நிவ்ருத்திக்கக் கூடியவையாம். 32.

வமனத்தினுல் நிவ்ருத்திக்கக் கூடிய வியாதிகள்.

அஜீர்ணமுண்டாக்கக்கூடிய உணவு, குளிர்ந்த ஜலம், வியாயாமமென்னும் தேஹவுழைப்பு, புணர்ச்சி, தைலாப்பங்கம், அதிகமர்ப் சினமுண்டாதல் இவற்றை வமன சிகித்ஸை செய்து கொண்டவன் ஒருநாள் முடியவிலக்க வேண்டும். 33.

வமனசிகித்ஸையில் விலக்கக்கூடியவை.

---

1. கபளக்ரஹ:—இந்த கண்டத்தில் 10-வது அத்தியாயத்தில் இதைப்பற்றிய விவரங்களைப் பார்க்கவும்.
2. நஸ்யம்—இதே கண்டத்தில் 8-வது அத்தியாயத்தில் இதன் விவரங்களைப் பார்க்க.
3. மந்தம்—ஒரு வகையான க்வாதம்; இதற்கே ப்ரமத்யா என்று பெயர். 85-வது பக்கத்தைப் பார்க்கவும்.
4. யூஷம்—இதைப்பற்றி 86-வது பக்கம் பார்க்க,

நான்காவது அத்தியாயம்.

(விரேசன விதி)

—:—

விரேசனத்திற்கு முன் செய்யவேண்டிய சிகித்ஸை.

முதலில் ஸ்நேஹங்களைக்கொண்டு சரீரத்தை ஸ்நிக்த்தமாகச் செய்து, பிறகு ஸ்வேதமுறைப்படி தேஹத்திற்கு ஸ்வேதம் செய்வித்து, வமனவிதியையும் தகுந்தவாறு நிறைவேற்றி, அப்பால் நன்றாகக் குடல்களிலிருந்து மலங்கழியுமாறு விரேசனமும் செய்விக்கவேண்டும். வமனமின்றியே விரேசனத்திற்குக் கொடுத்தால், ஆமாசயமென்னும் இரைப்பைக்கு மேலுள்ள கபமானது கீழ் நோக்கிச் சென்று கிரஹணீயென்னும் த்வாரத்தை [1] மூடிவிடும்; அல்லது அக்னி மாந்தியம், சரீரம் பாரமாயிருப்பதுபோன்ற கோளாறு, ப்ரவாஹிகாயென்னும் சீதபேதி இவைபாவது உண்டாகும். அல்லது பாசனகுணமுள்ள [2] ஔஷதங்களால் குடலில் சேர்ந்துள்ள அபக்குவமான தோஷங்களையும், கபத்தையும் பக்குவம் செய்து, ஸ்நேஹவர்க்கங்களால் சரீரத்தை ஸ்நிக்தகமாக்கி, ஸ்வேதசிகித்ஸையையும் செய்து அப்பால் விரேசனத்திற்கும் ஔஷதங்களை யுபயோகிக்கலாம். $1—2\frac{1}{2}$.

விரேசனத்திற்கேற்றகாலம்.

சரத்ருது, வஸந்தருது இவ்விரண்டு காலங்களிலும் தேஹம் சுத்தியாவதற்காக விரேசனம் செய்விப்பது நலம்; ஆனால் ஆபத்கரமான ஸமயங்களில் வேறு காலங்களிலும் விரேசனம் செய்விக்கலாம். $3\frac{1}{2}$.

விரேசனம் செய்விக்கக்கூடியகோளாறுகள்.

பித்தம் ப்ரகோபமடைந்து ஸம்பவிக்கும் கோளாறுகளிலும், ஆமதோஷத்தினாலுண்டாகும் வியாதிகளிலும், உதரரோகங்களிலும், வயிற்றுப் பொருமலிலும் குடலைச் சுத்தி செய்வதன்பொருட்டு விரேசனம் செய்விக்கவேண்டும். $4\frac{1}{2}$.

மற்ற சிகித்ஸா முறைகளினும் விரேசனத்தின் மேன்மை.

லங்கனம், பாசனம் என்கிற சிகித்ஸைகளால் தோஷங்கள் ஸ்வஸ்த்தம் செய்யப்பட்டாலும் சில ஸமயம் மறுபடி அவை ப்ரகோபமடைந்து விடுவதுண்டு; சோதன சிகித்ஸை யெனப்படும் விரேசனம் முதலியவற்றால் எவர்களுடைய சரீரம் சுத்தம் செய்யப்படுகிறதோ அவர்களுக்கு அத்தோஷங்கள் மீண்டும் மேலெழுந்து துன்பம் விளைவிப்பதில்லை. $5\frac{1}{2}$.

அதிக வேலை முதலியவற்றால் களைப்புற்றவர், நாவறட்சியினால் கஷ்டப்படுபவர், ஸ்தூலதேஹிகள், கர்ப்பிணிகள், நவஜ்வரிகள் [3], புதிதாகப் பிரஸவித்த ஸ்த்ரீ, அக்னி மாந்

---

1. கிரஹணீ—இரைப்பையின் கீழ்முனையும், சிறு குடலின் மேல் முனையும் சேருமிடத்திலுள்ள ஒருவகையான கபாடத்துடன்கூடிய த்வாரம்.

2. பாசனகுணம்—இதைப்பற்றி 14-வது பக்கம் பார்க்க.

3. நவஜ்வரிகள்—ஜ்வரம் உண்டானதுமுதல் 8-நாள் வரையில் அது 'ஆமஜ்வரம்' எனப்படும்; அந்த நிலைமையில் பிணியாளி 'நவஜ்வரி' எனப்படுவான்.

விரேகத்திற்குத் தகாதவர்கள்.

தியமுள்ளவர், மதாத்யய ரோகிகள்[1], சரீரத்தினுள் சல்யம் புகுந்து வருந்துபவர், ரூக்ஷதேஹிகள்[2] இவர்கள் விரேகத்திற்குத்[3] தகாதவர்கள் எனக் கருதவேண்டும். 6—7½.

விரேகத்திற்குத் தகுந்த ரோகிகள்.

ஜீர்ணஜ்வரிகளும்,[4] கரமென்னும் க்ருத்ரிமவிஷம்[5] பரவிய சரீரமுடையவர்களும், வாதரக்த்தம், பகந்தரம், அர்சஸ், பாண்டு, உதரரோகம், கிரந்திகள், ஹ்ருதயத்தைப்பற்றிய வியாதிகள், அரோசகம், யோநிரோகம், பிரமேஹம், குன்மம், ப்லீஹரோகம், விரணங்கள், வித்ரதி, சர்த்தியென்னும் வாந்தி, விஸ்ப்போடமென்னும் கொப்புளங்கள், விஷூசி, குஷ்டம், காதுநோய், நாசியைப்பற்றிய ரோகம், சிரோரோகம், வாய்ப்புண் முதலிய முகத்தைப்பற்றிய நோய்கள், ஆண்குறி ஸம்பந்தமான வியாதிகள், நேத்திரரோகம், சோபையென்னும் சோகை, கிருமிரோகம், வாததோஷம் க்ஷீணித்தல், வயிற்றுவலி அல்லது சூலை, மூத்ராகாதமென்னும் மூத்திர அடைப்பு இவ்வியாதிகளால் பீடிக்கப்படுபவரும் விரேகத்திற்கு உரியவராவர். 8—11.

குடல்களின் குண பேதங்களும் விரேகம் செய்விக்க ஔஷத மாத்திரைகளும்.

எவருடைய குடலில் பித்தம் அதிகரித்திருக்குமோ அவர் மிருதுகோஷ்டிகள்[6] என்றும், கபம் அதிகரித்திருக்குமானால் மத்யம கோஷ்டிகள்[7] என்றும், வாதம் மேலிட்டு வறண்டிருந்தால் க்ரூரகோஷ்டிகள்[8] எனவும் கூறப்படுவர். இவர்களுள் க்ரூரகோஷ்டிகளுக்கு ஸாதாரண ஔஷதங்களால் விரேசனமுண்டாக்குவது கடினம். மிருதுகோஷ்டமுடையவருக்கு மிருது மாத்திரைகள் என்னும் சிறிய அளவுகளிலும், மத்யம கோஷ்டமுள்ளவருக்கு மத்யமமான அளவுகளிலும், க்ரூரகோஷ்டிகளுக்கு தீக்ஷ்ண மாத்திரைகளென்னும் பெரிய அளவுகளிலும் ஔஷதங்களைப் பிரயோகிக்கவேண்டும்; அவ்வௌஷதச் சாக்குகளும் வீர்யத்தில் முறையே மிருது—மத்யமம்—தீக்ஷ்ணம் என்கிற குணங்களுள்ளவைகளாயிருப்பது அவசியம். 12, 13.

குடல்களின் தன்மைக்கேற்ற விரேசௌஷதங்கள்.

மிருது கோஷ்டிகளுக்கு திராக்ஷை, பால், ஆமணக்கெண்ணெய் இவற்றை யுபயோகிப்பதாலேயே விரேசனமுண்டாகும். மத்யமகோஷ்டிகளுக்கு சிவதைவேர், கடுகரோஹிணீ, கொன்றை இவற்றாலும் விரேகமுண்டாகும். க்ரூரகோஷ்டமுள்ளவருக்கு கள்ளிப்பால், கூகைநீறு, நேபாளம் முதலியவற்றால்தான் விரேசன முண்டாகக்கூடும். 14½.

---

1. மதாத்யயம்—35-வது பக்கத்தில் மூலமும் டிப்பணியையும் பார்க்க.
2. ரூக்ஷதேஹிகள்—வறட்சியுள்ள சரீரமுடையவர்.
3. விரேகம்—விரேசனம்; [பேதி அல்லது வயிறு கழியச்செய்வது விரேசனம் அல்லது விரேகம் எனப்படுகிறது.]
4. ஜீர்ணஜ்வரி—ஆமஜ்வர நிலைமை நீங்கியவன்; நாட்பட்ட ஜ்வரத்தினுல் வருந்துபவன் எனவும் கூறலாம்.
5. கரமென்னும் க்ருத்ரிமவிஷம்—64-வது பக்கம் மூலத்தையும் டிப்பணியையும் பார்க்க.
6. மிருது கோஷ்டிகள்—மிருதுவான அல்லது இளகிய குடல் உடையவர்கள்.
7. மத்யம கோஷ்டிகள்—அதிக இளகலுமல்லாமல் அதிக கடினமுமல்லாமலிருக்கும் குடல் உடையவர்.
8. க்ரூரகோஷ்டிகள்—கற்குடலுள்ளவர்.

விரேகத்தில் உத்தம மத்யம ஹீனயோகங்கள்.

முப்பது முறை விரேசனமாவதுடன் இறுதியாக ஆகும் விரேகத்தில் கபமும் வெளி வருமானால் அது உத்தம யோகமென்றும், இருபதுமுறை விரேசனமானால் அது மத்பம யோகமென்றும், பத்துமுறை ஆனால் ஹீனயோகமென்றும் கூறப்படும். $15\frac{1}{2}$.

விரேகத்திற்குப் போதுவாக கஷாயங்களின் உத்தம மத்யம ஹீந மாத்திரைகள்.

விரேகத்திற்காக கஷாயவகைகள் ஏதேனும் உபயோகிக்கப்படுமானால் அவற்றை இரண்டு பலம் அளவில் உபயோகித்தால் அதை உத்தம மாத்திரையென்றும், ஒரு பலமானால் மத்யம மாத்திரையென்றும், அரைப் பலமானால் ஹீனமாத்திரையென்றும் கூறுவர். $16\frac{1}{2}$.

விரேகத்தில் கல்கம் முதலியவற்றின் போது அளவு.

கல்கங்கள், மோதகம் அல்லது குடிகைகள், சூர்ணங்கள் என்னும் இவ்வுருவங் கொண்ட ஔஷதங்களை வயது, வியாதி முதலியவற்றின் தன்மைகளுக்கு ஏற்றவாறு கால் பலம் அளவிலோ, அரைப்பலம் அளவிலோ அல்லது ஒரு பலம் அளவிலோ உபயோகிக்கலாம். $17\frac{1}{2}$.

வாதாதி தோஷங்களுக்கேற்ற விரேகௌஷதங்கள்.

பித்தம் ப்ரகோபித்து உண்டாகும் வியாதிகளில் விரேகத்திற்காக சிவதைவேரின் சூர்ணத்தை திராக்ஷாதி க்வாதம் [1] முதலியதுடன் கலந்து உட்கொள்ளலாம். கபத்தினால் பீடிக்கப்பட்டவன் த்ரிபலாக்வாதம் [2], கோமூத்திரம் இவற்றுடன் த்ரிகடு சூர்ணத்தைச் சேர்த்து உட்கொள்ளலாம். சிவதைவேர், இந்துப்பு, சுக்கு இவற்றின் சூர்ணத்தை ஏதேனும் காடிகளுடனாவது, ஜாங்கல மாம்ஸரஸத்துடனாவது [3] வாதவியாதிகளில் விரேகத்திற்காக உபயோகிக்கலாம். $18—19\frac{1}{2}$.

சீக்கிரம் விரேசனமாகக்கூடிய ஸாதாரண ஔஷதம்.

ஆமணக்கெண்ணெயை அதற்கு இரு மடங்கு த்ரிபலா க்வாதத்துடனாவது, பாலுடனாவது கலந்து உட்கொண்டால் சீக்கிரத்தில் விரேசனமுண்டாகும். $20\frac{1}{2}$

வர்ஷா காலத்திற்கேற்ற விரேசனௌஷதம்.

சிவதைவேர், வெட்பாலரிசி, திப்பிலி, சுக்கு இவற்றைப் பொடித்து திராக்ஷாதி க்வாதம், தேன் இவற்றுடன் கலந்து வர்ஷருதுவில் விரேசன ஔஷதமாக உபயோகிக்கலாம். $21\frac{1}{2}$.

1. திராக்ஷாதி க்வாதம்—72-வது பக்கம் பார்க்க.

2. த்ரிபலா க்வாதம்—கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் இவற்றைச்சேர்த்து செய்யப்படும் க்வாதம்.

3. எவ்விடத்தில் ஜலம் கிடைப்பது அரிதாகவும் வாயு விசேஷமாக வீசிக்கொண்டும் ஆகவே வறட்சி அதிகரித்து மிருக்குமோ அது ஜாங்கல தேசமென்றும், அவ்விடத்து மிருகங்களின் மாம்ஸம் ஜாங்கல மாம்ஸமென்றும் கூறப்படும்,

சிவதைவேர், காஞ்சோறி, கோரைக்கிழங்கு, சர்க்கரை, வெட்டிவேர், சந்தனம், அதிமதுரம் இவற்றின் சூர்ணத்தை திராக்ஷாதி க்வாதத்துடன் கலந்து குளிரச் செய்து சரத்ருதுவில் விரேகமாவதற்கு உட்கொள்ளலாம். 22½.

சரத்காலத்திற் கேற்ற விரேகௌஷதம்.

சிவதைவேர், சித்திரமூலம், வட்டத்திருப்பி, ஜீரகம், கருஞ்சிவதை, வசம்பு, கூகை நீறு இவற்றின் சூர்ணத்தை உஷ்ணஜலத்தோடு ஹேமந்தருதுவில் விரேசனத்திற்காக உபயோகிக்கலாம். 23½.

ஹேமந் தருதுக்கேற்ற விரேசனௌஷதம்.

திப்பிலி, சுக்கு, இந்துப்பு, சிவதை, கருஞ்சிவதை இவற்றின் சூர்ணத்தை தேனிற் கலந்து சிசிரருதுவிலும், வஸந்தருதுவிலும் விரேசனத்திற்காக உபயோகிக்கலாம். 24½.

சிசிர-வஸந்தருதுக் களுக்கேற்ற விரேகௌஷதம்.

சிவதைவேரைப் பொடித்து சர்க்கரையுடன் ஸமபாகமாகக் கலந்து க்ரீஷ்ம ருதுவில் விரேசனத்திற்காக உட்கொள்ளலாம். 25.

க்ரீஷ்மகால விரேசனௌஷதம்.

கடுக்காய், மிளகு, சுக்கு, வாய்விடங்கம், நெல்லிப்பருப்பு, திப்பிலி, மோடி, இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, கோரைக்கிழங்கு இவற்றை ஸமபாகமாய் எடுத்துக்கொண்டு, இரண்டு பங்கு நேபாளமும், எட்டு பங்கு சிவதை வேரும் சேர்த்து நன்றாகச் சூர்ணம் செய்து, ஆறு பங்கு சர்க்கரையும் சேர்த்துக் கலந்து, தேன்கூட்டி கால் பலமெடையில் குளிகைகள் செய்யவும். இதில் ஒரு குளிகையை காலையில் குளிர்ந்த ஜலத்துடன் உட்கொள்ளலாம்; வெகு நன்றாக விரேசனமாகும்; விரேசனம் குறைவாக இருந்தால் குளிர்ந்த ஜலத்தை மேன்மேலும் பருகலாம்; விரேசனம் அதிகமாய் விட்டால் உடனே உஷ்ண ஜலத்தைக் குடிக்க பேதி நின்றுவிடும். உணவுகளை யுண்பதிலும், பானவகைகளைப் பருகுவதிலும், மற்ற வேலை விளையாட்டுகளைச் செய்வதிலும் இவ்வௌஷத முபயோகிக்கையில் நியமமொன்றுமில்லை. விஷமஜ்வரம், அக்னிமாந்தியம், பாண்டு, காஸம், பகந்தரம், அர்சஸ், குஷ்டம், குன்மம், களகண்டம், ப்ரமமென்னும் தலைச் சுற்றல், உதரரோகங்கள், தேஹ அழற்சி, ப்லீஹரோகங்கள், மேஹம், க்ஷயம், நேத்திரவியாதிகள், வாதரோகங்கள், வயிற்றுப்பொருமல், மூத்ரக்ருச்சிரம், அச்மரி, முதுகுவலி, பக்கவலி, துடையிலுண்டாகும் நோய், இடுப்புவலி, வயிற்றுவலி, இவை இவ்வௌஷதத்தினால் தீரும்; அடிக்கடி ஸமயம் நேரிட்டபோது இதை யுபயோகித்துவர கிழத்தன்மையும் சீக்கிரமுண்டாகாது. இதற்கு 'அபயாமோதகம்' எனப் பெயர். இது சிறந்த ரஸாயனமாகக் கருதப்படுகிறது. 26—32½.

அபயா மோதகம்.

விரேசனத்திற்காக ஔஷதமுட்கொண்டதும் குளிர்ந்த ஜலத்தினால் கண்களைத் துடைத்துக்கொண்டு, ஏதேனும் சிறந்த பரிமளவஸ்துக்களைச் சிறிது முகர்ந்து, தாம்பூலம் தரிக்கலாம். அதிக காற்றோட்டமில்லாத பிரதேசத்தில் இருந்துகொண்டு, விரேசனமாகும் போலிருந்தால் அதை அடக்கிக்கொண்டிராமல் அப்போதைக்கப்போது மலபாதையை நிவ்

விரேசனௌஷத முட்கொண்டபின் செய்ய வேண்டிய விதி.

ருத்தி செய்துகொள்ளவேணும். விரேசனௌஷதத்தை யுபயோகித்த வன் படுத்துறங்கக் கூடாது; குளிர்ந்த ஜலத்தையும் அதிகமாய் பரிசிக்காமலிருப்பது நலம். இளஞ்சூடான ஜலத்தை அடிக்கடியும் பருகிவரலாம். வமனம் செய்பவனுக்கு கபமும், ஔஷதமும், பித்தமும், அப்பால் வாயுவும் கிரமமாக வெளிவருவதுபோல், விரேகம் ஆனவனுக்கு மலமும், பித்தமும், ஔஷதமும், அப்பால் கபமும் முறைபெ வெளிப்படும். 33—35½.

துர்விரேகக் குறிகள்.

நன்றாக வேண்டியவளவு விரேகம் ஆகாமற்போனால் அது 'துர்விரேகம்' எனப்படும். அப்பொழுது நாபியில் தடிப்பும், வயிற்றுவலியும், மலம் வாயு இவை கட்டுப்பட்டும், குடல்களில் வேதனையும், தேஹத்தில் தழும்புகளும், சரீரம் பாரமாயிருப்பதுபோன்ற உணர்ச்சியும், தேஹ அழற்சியும், அரோசகமும், வயிற்றுப்பொருமலும், ப்ரமமென்னும் தலைச்சுற்றலும், வாந்தியும் உண்டாகும். 36, 37.

துர்விரேக சிகித்ஸை.

துர்விரேகத்தினால் மேற்கூறிய குறிகளுண்டானவனும், பாசனகுணமுள்ள ஸ்நேஹ வர்க்கங்களில் வயிற்றிலுள்ள மலாதிகளைப் பக்குவம் செய்து, குடல்களை ஸ்நிக்த்தமாக்கி மீண்டும் விரேசனமுண்டாகும்படி உபாயம் செய்யவேண்டும். அவ்விதம் செய்தால் முற்கூறிய உபத்திரவங்கள் அனைத்தும் ஒழிந்து, அக்னி தீபனமுண்டாய், சரீரம் பாரமாயிருப்பதுபோன்ற உணர்ச்சியும் தீர்ந்து லாகமுண்டாகும். 38.

அதிவிரேகத்தின் அறிகுறிகள்.

மூர்ச்சை, குதம் நழுவிவிழுதல், வயிற்றுவலி, கபம் அதிகமாய் வெளிவருதல், மாம்ஸம் கழுவிய நீர்போன்றதும் கொழுப்பு அல்லது தண்ணீரைப் போன்றதுமான மலம் கழிதல், அல்லது இரத்தமே வெளிப்படுதல் என்னும் இவை மிதமிஞ்சிய விரேகத்திற்கு அறிகுறிகளாகும். 39½.

அதி விரேகத்தைக் கட்டு முபாயங்கள்.

அவ்வாறு அதிக விரேகத்தினால் கோளாறுகள் உண்டாகும்போது சரீரத்தைக் குளிர்ந்த ஜலத்தினால் துடைத்து, குளிர்ந்த அரிசிகழுவிய நீரையும் தேனையும் கலந்து குடிக்கச்செய்து மெதுவாக வமனம் செய்விக்கவேண்டும். மாம்பட்டையைத் தயிர் சேர்த்தாவது காடியைச் சேர்த்தாவது அரைத்து கல்கமாகச் செய்து நாபியின்மேல் தடவினால் அதிகமாய் பேதியாவதைத் தடுக்கும். அல்லது ஆட்டுப்பால், விஷ்கிரமென்னும் வகுப்பைச்சேர்ந்த பக்ஷிகளுடைய [1] மாம்ஸரஸம் அல்லது மானின் மாம்ஸரஸம் இவற்றில் ஏதேனுமொன்றுடன் சம்பா அரிசியினால் அல்லது காரரிசியினாலான அன்னத்தையாவது, சிறு கடலையைச் சமைத்தாவது கலந்து சிறிது புஜிக்கலாம். மேலும் கிராஹியென்னும் குணத்திற் [2] சிறந்தவையும் குளிர்ந்தவையுமான தகுந்த பதார்த்தங்களால் மலத்தைக் கட்டுவதற்கு வைத்தியன் உடனே முயலவேண்டும். 40—43.

---

1. விஷ்கிரங்கள்.—லாவம் என்னும் பக்ஷி, விச்சுளி, குயில், செங்குருவி, சக்ரவாகப்புள், சிலாமுக்கியென்னும் சகோரம், அழுகுரல் பக்ஷி, தித்திரியென்னும் பறவை, இராஜாளி, மயில், கோழி, கொக்கு முதலியவை விஷ்கிர கணத்திற் சேர்ந்தவையாம்.

2. கிராஹி—15-வது பக்கம் பார்க்க.

தேஹம் இலகுவாகவும், மனது மிகத் தெளிவுற்றுமிருந்து, வாயுவும் அதற்குற்ற மார்க்கத்தினல் கீழ்நோக்கி வருமானல் அப்பொழுது அப்பிணியாளிக்கு முறைப்படி விரேகமுண்டாய் ஸம்யகமுண்டானதாகக் கருதவேண்டும். அதன்பிறகு குடலில் மிகுந்துள்ள ஆமதோஷம் முதலியவற்றைப் பக்குவம் செய்வதற்காக பாசன ஔஷதங்களை இரவிற் பருகச் செய்வது நலம். 44.

முறைப்படி விரேகமானதன் குறிகளும் பிறகு செய்யவேண்டிய உபசாரங்களும்.

விரேசனமாகும்படி அப்போதைக்கப்போது ஏதேனும் ஔஷதமுபயோகித்து வருவதால் இந்த்ரியங்களுக்கு பலமும், புத்திக்குத் தெளிவும், அக்னி தீபனமும், தாதுக்களுக்கு வன்மையும், ஆயுளபிவ்ருத்தியும் உண்டாகும். 45.

விரேகத்தின் உபயோகம்.

பெருங்காற்று வீசுமிடங்களில் இருப்பது, குளிர்ந்த ஜலம், தைலாப்யங்கம், அஜீர்ணமுண்டாக்கும் உணவு, வியாயாமமென்னும் தேஹவுழைப்பு, புணர்ச்சி இவற்றை விரேசனௌஷதமுட்கொண்டவன் விலக்கிவிடவேண்டும். 46.

விரேகௌஷத முபயோகித்தவர் விலக்க வேண்டியவை.

சம்பா அரிசி, காரரிசி, பயறு இவை முதலியவற்றால் பக்குவம்செய்த யவாகூவென்னும் கஞ்சியை விரேகமானவன் உட்கொள்வது நலம்; அல்லது ஜாங்கல மாம்ஸரஸத்துடனாவது, விஷ்கிரமென்னும் பக்ஷியினங்களின் மாம்ஸரஸத்துடனாவது சம்பா அரிசியினாலான அன்னத்தைக் கலந்து புஜிப்பது ஹிதமாகும். 47.

விரேகமானவருக்கு பத்தியம்.

ஐந்தாவது அத்தியாயம்.

(வஸ்திவிதி.)

வஸ்தியானது[1] 'அநுவாஸனம்' என்றும் 'நிரூஹம்' என்றும் இருவகைப்படும்; ஸ்நேஹவர்க்கங்களால் செய்யப்படுவது 'அநுவாஸனவஸ்தி' என்றும், கஷாயங்கள் பால் தைலம் முதலியவற்றைச் சேர்த்து செய்யப்படுவது 'நிரூஹவஸ்தி' என்றும் கூறப்படும். வஸ்தி யென்னும் வஸ்துவினுல் செய்யப்படுவதால்[2] இச்சிகித்ஸை 'வஸ்தி' என்று மொழியப்படுகின்றது. 1, 2.

இரண்டுவித வஸ்திகள்.

1. குதமார்க்கத்தினுல் ஏதேனும் கருவியினுல் (பீச்சிடும் குழல்—Syringe முதலியதால்) தைலம் முதலியவற்றை குடலுக்குள் செலுத்தி குடலைக் கழுவுவதற்கான உபாயம் வஸ்தியெனப்படும். மூத்திரமார்க்கம் அல்லது கருப்பையைக் கழுவுவதற்கான வஸ்தி 'உத்தரவஸ்தி' எனப்படும்.

2. வஸ்தி யென்று மூத்திரப்பைக்குப் பெயர். [முற்காலங்களில் பீச்சாங்குழல்களையும், துருத்தி போன்ற வேறு கருவிகளையும் கொண்டு குதமார்க்கத்தினுல் ஔஷதங்களைப் பீச்சிட்டுவந்தனர்; அக்காலங்களில் துருத்திக்குப் பதிலாய் மிருகங்களின் கனமான மூத்திரப்பைகளை உபயோகித்து வந்தனர். ஆகவே அக்கருவியும், அவ்வேலையும் 'வஸ்தி' எனப்படுகின்றன.]

மூன்று வஸ்திகள் செய்யப்படும் கிரமம்.

அவற்றுள் 'அநுவாஸனவஸ்தி' யென்பது முதலிற் கூறப்படும்; அதன் பிறகு 'நிரூஹ வஸ்தி' விவரிக்கப்படும்; நிரூஹவஸ்திக்கு உத்தரத்தில்[1] செய்யக்கூடிய வஸ்தியானது 'உத்தரவஸ்தி' என்று வழங்கப்படும். $3\frac{1}{2}$.

மாத்ராவஸ்தி.

அநுவாஸந வஸ்தியிலேயே 'மாத்ராவஸ்தி' என்றொரு வகையான வஸ்தியுண்டு. 'மாத்ராவஸ்தி' என்பது அவ்வஸ்திகர்மத்திற்காக உபயோகிக்கப்படும் ஔஷதங்களில் அல்லது செய்கையிலுள்ள பேதத்தினல் ஏற்படுத்தப்படாமல், கேவலம் அவ்வௌஷதங்களின் அளவுகளிலுள்ள பேதத்தினலேயே ஏற்பட்டதாகும். அநுவாஸன வஸ்தியில் ஒன்று அல்லது இரண்டு பலம் அளவாக தைலம் முதலியது உபயோகிக்கப்படுமானல் அது 'மாத்ராவஸ்தி' எனப்படும்.[2] $4\frac{1}{2}$.

அநுவாஸனத்திற்கு உரியவரும் தகாதவரும்.

ரூக்ஷசரீரமும், மிதமிஞ்சிய பசியும், மிகவும் அதிகரித்த வாததோஷமுமுடைய மனிதன் அநுவாஸன வஸ்திக்கு ஏற்றவனுவான். குஷ்டரோகி, மேஹரோகி, ஸ்தூலித்த தேஹமுடையவன், மஹோதரம் முதலிய உதரரோகங்களால் வருந்துபவன் இவர்கள் அநுவாஸன வஸ்திக்குத் தகாதவர்கள். $5\frac{1}{2}$.

இரண்டு வஸ்திகளுக்கும் தகாதவர்.

அஜீர்ணம், உன்மாதம், நாவறட்சி, மனநோய், மூர்ச்சை, அரோசகம், பயம், ச்வாஸம், காஸம் இவற்றால் வருந்துபவருக்கு ஆஸ்த்தாபன வஸ்தி யென்ன[3] அநுவாஸன வஸ்தி யென்ன இரண்டையுமே செய்யக்கூடாது. $6\frac{1}{2}$.

நேத்திரம் செய்வதற் கேற்ற வஸ்துக்கள்.

பொன் முதலிய லோஹங்களாலாவது, மரம் அல்லது மூங்கில் முதலியவற்றாலாவது, த்வாரமுள்ள வேறுவிதமான தண்டுகளாலாவது, தந்தத்தினலாவது, மாடு முதலிய மிருகங்களின் கொம்பு முனைகளாலாவது, இரத்னங்களாலாவது வஸ்தியில் சேர்ப்பதற்கான நேத்திரம்[4] செய்யப்படவேண்டும். $7\frac{1}{2}$.

நேத்திர ப்ரமாணம் முதலியது.

ஒன்று முதல் ஆறு வயது வரையிலுள்ள சிறுவர்களுக்கு உபயோகிக்க வேண்டியதற்கு நேத்திரம் ஆறு அங்குலம் நீளமாகவும், அதற்குமேல் பன்னிரண்டு வயது வரையில் எட்டு அங்குலம் நீளமாகவும், பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட அனைவருக்குமே பன்னிரண்டு அங்குலம் நீளமாகவும் செய்யப்படவேண்டும். அவற்றில் ஆறு அங்குலமுள்ள நேத்திரத்தின் த்வாரம் ஒரு பயறு புகும்படியாகவும், எட்டு அங்குலமுள்ள நேத்திரத்திற்கு சிறு கடலை பிரவேசிக்கக்

---

1. உத்தரவஸ்தி—அநுவாஸனத்திற்கும் நிரூஹத்திற்கும் உத்தரத்தில் (பிறகு) செய்யப்படுவதால் இப் பெயர் வந்தது.

2. இரண்டு யாமங்களில் ஜீர்ணமாகக்கூடிய அளவில் ஸ்நேஹத்தை உபயோகித்து செய்யப்படுவது அல்லது ஒன்றரை பலமளவிலுபயோகிக்கப்படுவது 'மாத்ராவஸ்தி'யின் முறையென்று வேறு சிலரதுகொள்கை.

3. ஆஸ்த்தாபன வஸ்தி—நிரூஹவஸ்தியின் மற்றொரு பெயர். [இதையே கஷாயவஸ்தி யென்றும் கூறுவர். அவ்விதமே அநுவாஸனத்திற்கும் ஸ்நேஹவஸ்தியென்ற பெயர் வழங்கப்படும்.]

4. நேத்திரம்—தோல் அல்லது மூத்திரப்பையாலான வஸ்தியில் இணைக்கப்பட்டு, குதத்தில் பிரவேசிப்பித்து மருந்துகளைப் பீச்சிடுவதற்கு உபயோகமான குழல்.

கூடியதாகவும், பன்னிரண்டு அங்குலமுள்ளதற்கு இலந்தக்கொட்டை நுழையும்படியும் இருக்கவேண்டும். இந்த நேத்திரங்களை வழவழப்பாகவும், அடி பருத்து நுனி சிறுத்ததாகவும் செய்யவேண்டும். அவற்றின் அடிபாகம் பிணியாளியின் பெருவிரலளவாகவும், முனையானது சுண்டுவிரலளவாகவும், குளிகைபோல் சிறிது உருண்டு வழவழப்பான முகமுடையதாகவும் இருக்கவேண்டும். நேத்திரங்களின அடிப்புறத்தில் நாலு பாகங்களுக்கு மேல் ஒரு கணுவும், முனையில் நாலு பாகத்திற்குக் கீழ் ஒரு கணுவும் ஏற்படுத்தி, அவற்றின் அடிப்புறத்துக் கணு வரையில் வஸ்தியை நுழைத்து நன்றாகக் கட்டிவிடவும். 8—12.

வஸ்தி செய்வதற்கான வஸ்துக்கள்.

மான், ஆடு, பசு, பன்றி, எருமைக்கிடா இவற்றுள் ஏதேனும் ஒரு மிருகத்தின் மூத்திரப்பையை எடுத்து வஸ்தியென்னும் கருவியாகச் செய்துகொள்ளலாம். அவ்வித மூத்திரப்பை கிடைக்காவிடின், ஏதேனும் சர்மத்தினாலாவது வஸ்தியை நிர்மித்துக்கொள்ளலாம். இதற்காக உபயோகிக்கப்படும் மூத்திரப்பை முதலியவற்றை முதலில் துவர்ப்பான வஸ்துக்களால் செய்த கஷாயங்களில் தோய்த்து ஒருவித வர்ணமும் ஸிகிஸிகிப்பும் மெதுத்தன்மையும் வன்மையும் உண்டாகும்வண்ணம் பதன் செய்யவேண்டும். 13½.

விரணவஸ்தியின் நேத்திரம்.

விரணங்களைக் கழுவுவதற்கு உபயோகமாகும் வஸ்திக்கு எட்டு அங்குலம் நீளமுள்ளதும், வழவழப்பாயிருப்பதுமான நேத்திரத்தை வஸ்தியில் இணைக்கவேண்டும்; அந்த நேத்திரம் கழுகென்னும் பக்ஷியினுடைய இறகுத்தாளின் பருமனுள்ளதும், பயறு நுழையக்கூடிய இரந்த்ரமுடையதாகவும் அமைந்திருக்கவேண்டும். 14½.

வஸ்தியின் மஹிமை.

வஸ்தியை முறைதவறாமல் உபயோகித்து வந்தால் சரீரம் செழித்து வளரும்; அழகிய நிறமுண்டாகும்; தேஹவன்மை விருத்தியாகும்; ஆரோக்கிய நிலைமை அபிவிருத்தியடையும்; ஆயுளும் வளரும். 15½.

அநுவாஸனம் செய்ய வேண்டிய காலங்கள்.

வஸந்த காலத்தில் ஸாயங்கால வேளையில் அநுவாஸநவஸ்தியைப் பிரயோகிக்கவேண்டும். க்ரீஷ்மருது, வர்ஷருது, சரத்ருது இவற்றில் இராத்ரி காலங்களில் அநுவாஸன வஸ்தியைப் பிரயோகிப்பது உசிதமாம். 16½.

முறை தவறிய அநுவாஸனத்தினால் தீங்குகள்.

மிகவும் எண்ணெய்ப்பசையுள்ள உணவுகளைப் புஜித்திருக்கையில் அநுவாஸனம் செய்விக்கக்கூடாது; இரண்டு முறையாக ஸ்நேஹங்களையுபயோகிப்பதால்[1] மனிதனுக்கு ஒருவிதமான மதமும் மூர்ச்சையும் உண்டாகக் கூடும். அதிக ரூக்ஷமான உணவுகளை யுண்டவனுக்கும் உடனே அநுவாஸனம் செய்தால் சரீரவன்மையும் நிறமும் குறையும். அநுவாஸன வஸ்தியையாவது நிரூஹவஸ்தியையாவது குறைந்த அளவில் உபயோகித்தால், அவற்றால் அதிக குணங்கள் உண்டாகமாட்டா. அளவு மிஞ்சி உபயோகிக்கப்படுமானால், அவ்வித

1. ஸ்நேஹம் என்றால் எண்ணெய் வஸ்துக்கள் என்று முன்பே கூறப்பட்டிருக்கிறது. எண்ணெய்ப் பசையுள்ள உணவுகள் ஒரு ஸ்நேஹமாகவும், அநுவாஸனத்தில் பிரயோகிக்கப்படுவது மற்றொரு வகையான ஸ்நேஹவிதியாகவும் இருப்பதால் இரண்டுமுறை ஸ்நேஹங்கள் என்று குறிக்கப்பட்டதாம்.

வஸ்தி கர்மங்களால் வயிற்றுப் பொருமல், சோர்வு, அதிஸாரம் இக்கோளாறுகளுண்டாகும். 17—19.

அநுவாஸனத்தில் உத்தம மத்யம ஹீந மாத்திரைகள்.

அநுவாஸனத்தில் ஸ்நேஹம் முதலியவற்றை ஆறு பலம் அளவில் உபயோகித்தால் 'உத்தம மாத்திரை' என்றும், மூன்று பலமானால் 'மத்யம மாத்திரை' என்றும், ஒன்றரைப் பலமளவாயின் 'ஹீநமாத்திரை' என்றும் கருதப்படும். 20.

சதாஹ்வா தைல விரேசமும் அநுவா ஸனத்திற்கேற்ற நிலைமையும்.

சதகுப்பி, இந்துப்பு இவற்றைச் சூர்ணம் செய்து எண்ணெயில் சேர்த்து, வஸ்தி செய்வதற்கு முன் விரேசனமாவதற்காகக் கொடுக்கவேண்டும். அச்சூர்ணத்தை உத்தம மாத்திரையானால் ஆறு மாஷமும், மத்யம மாத்திரையானால் நான்கு மாஷமும், ஹீநமாத்திரையானால் இரண்டு மாஷ எடையும் எண்ணெயிற் சேர்த்து உபயோகிக்கவேண்டும். இதையுபயோகித்து விரேசனமான பின்பு ஏழு நாட்கள் சென்றதும், சரீரத்தில் பலமும் சிறிது உண்டாயிருந்தால், அநுவாஸனத்திற்கு ஏற்ற நிலைமையிலுள்ள மனிதருக்கு ஆஹாரமுட்கொண்டபின் அவ்வஸ்தியைச் செய்யவேண்டும். 21, 22.

அநுவாஸனம் செய்ய வேண்டிய முறை.

அப்பால், அநுவாஸன வஸ்திக்குரிய மனிதனுக்கு முதலில் அப்யங்கம் செய்வித்த, உஷ்ணஜலத்தினால் ஸ்வேதமுண்டாக்கி, மெதுவாக போஜனமும் விதிப்படி செய்வித்து, சிறிது இங்குமங்கும் உலாவி வரச் செய்து, அபானவாயு மலம் மூத்திரம் இவற்றை வெளிவிடப்பண்ணி, அதன் பிறகு ஸ்நேஹ வஸ்தியைப் பிரயோகிக்கவேண்டும். இடதுபுறமாகச் சாய்ந்து, இடது காலை நீட்டியும் மற்றொரு காலை மடக்கிக்கொண்டும் பிணியாளியைப் படுக்கச் செய்து, குதத்தில் சிறிது எண்ணெயைத் தடவி, வஸ்தியின் நேத்திரத்தை மெதுவாக உட்செலுத்தவேண்டும். முன்பாகவே வஸ்தியையும் நேத்திரத்தையும் நன்றாக நூலைக்கொண்டு இணைத்துக்கட்டி ஆயத்தமாய் வைத்துக்கொள்வது அவசியம். வஸ்தியினுள் ஸ்நேஹத்தை ஊற்றி, வைத்தியன் தனது இடது கையால் நேத்திரத்தைப் பிடித்து பிணியாளியின் குதத்திற்குள் செலுத்தி, மற்றொரு கையால் வஸ்தியென்னும் பையைச் சிறிது வேகமாக அமுக்கவேண்டும். வஸ்தியைச் செய்துகொண்டிருக்கையில் கொட்டாவி, இருமல், தும்மல் இவை வராமல் அமைதியாய் அவ்வேலையைச் செய்து முடிக்கவேண்டும். முப்பது மாத்திரைகள்[1] கொண்ட காலத்தில் ஒரு முறை வஸ்தியைச் செய்து முடிக்கவேண்டும். இவ்விதம் ஸ்நேஹத்தை குதத்தின் மூலமாய் உட்செலுத்தியபின், அப்பிணியாளி மல்லாந்து சயனித்தவாறு சற்றேறக்குறைய நூறு எண்ணிக்கைகள் எண்ணும்வரையில் அசையாமலிருக்கவேண்டும். நோயாளியை தேஹமனைத்தையும் நன்றாக நீட்டிக்கொண்டு படுக்கச் செய்து, அவனுடைய இரு கால்களையும் மூன்று முறை மெதுவாக மடக்கி தரையின்மீது உதைக்கச் சொல்லவேண்டும்; இடுப்புக்குக் கீழும் இடுப்பின் இரு புறங்களிலும் தட்டிக்கொடுத்து, படுக்கையின் மேல் இடுப்பைத் தூக்கித்தூக்கி

1. முப்பது மாத்திரைகள்—சற்றேறக்குறைய முப்பது விநாடி. [முழங்காலைச் சுற்றிலும் சுடிக்கைப் போட்டுக்கொண்டே மெதுவாகக் கையானது சுழன்றுவர எவ்வளவு நேரம் செல்லுமோ அவ்வளவு நேரம் ஒரு மாத்திரை யென்று கூறப்படுகிறது.]